# இலங்கையின் தேசிய மதிப்பீட்டுக் கொள்கை செயற்படுத்தல் கட்டமைப்பு

## 2023

# இலங்கையின் தேசிய மதிப்பீட்டுக் கொள்கை செயற்படுத்தல் கட்டமைப்பு

# 2023

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும்
கண்காணிப்புத் திணைக்களம்.



## மதிப்பீட்டின் ஊடாக வினைத்திறன் மிக்க நல்லாட்சி

தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை செயல்படுத்தி அதை நன்கு வரையறுக்கப்பட்ட மற்றும் உறுதியான பெறுபேறுகளாக மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி மிகவும் சரியான நேரத்தில் எடுக்கப்பட்டிருப்பதாக கருத முடியும். இந்த முயற்சியானது, இலங்கையில் கருத்திட்டம் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கடந்த கால அனுபவங்களிலிருந்து படிப்பினைகளை வெளிக்கொணர ஒரு வலுவான பொறிமுறையின் தேவையை நிவர்த்தி செய்கிறது. பொது வளங்களை பயன்படுத்துவதிலுள்ள அதிக தெரிவுநிலை பற்றிய பொதுமக்களின் பாரியளவிலான கேள்விக்கும் இது மேலும் பதிலளிக்கின்றது. அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை கருத்திற்கொள்ளும் போது, நீண்டகாலமாக தூர நோக்கிற்கும் யதார்த்தத்திற்கும் இடையில் பாரிய இடைவெளியை இலங்கை அனுபவித்து வருகின்றது. இலங்கை எதிர்கொண்டுள்ள முன்னொருபோதுமில்லாத மற்றும் ஆழமான நெருக்கடியானது, தோல்வியுற்ற கடந்தகால நடைமுறைகளை மீள் மதிப்பீடு செய்ய அனுமதித்ததுடன், பொது சேவைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை வழங்குவதற்கான எமது அணுகுமுறையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது. முன்னோக்கிச் செல்லும்போது, எங்கே தவறு செய்தோம் என்பதைக் கண்டறிந்து, சிறந்த வடிவமைக்கப்பட்ட எதிர்காலத்திற்காக அந்த நடைமுறைகளைச் சரிசெய்வதற்கு நாம் பயப்படக்கூடாது. இந்த எண்ணத்தில்தான் நாம் ஒரு புதிய மதிப்பீட்டு கலாசாரத்தை அணுக விரும்புகிறோம். நமது முயற்சிகளின் உண்மையான தாக்கத்தை அளவிடுவதற்கும், அவற்றின் விளைவுகளுக்கான அடிப்படைக் காரணங்களைப் புரிந்துகொள்வதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும். அவை நேர்மறையாக இருந்தாலும் சரி, எதிர்மறையாக இருந்தாலும் சரி, மற்றும் நாம் தவறாக செல்லும் போது அதற்கு மாற்றீடு செய்ய தயாராக இருக்க வேண்டும்.

பணத்தின் பெறுமதியை அடிப்படையாகக்கொண்டு நல்லாட்சி மற்றும் சான்று அடிப்படையிலான தீர்மானமெடுத்தலை நோக்காகக் கொண்டு தேசிய மதிப்பீட்டு கொள்கையை தயாரித்தல் மற்றும் அங்கீகரித்தலின் மூலம் 2018 ஆம் ஆண்டு இம் முயற்சிக்கு என்னால் அடித்தளம் இடப்பட்டது. ஐந்து வருடங்களுக்கு பின்னர், பொதுச் செலவினங்களில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதன் மூலம் இது செயல்படப் போகிறது என்பதைக் காண்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த கட்டமைப்பை முழுமையாக ஏற்றுக்கொள்வதன் மூலம், பொது சேவை வழங்கலின் அனைத்து அம்சங்களிலும் தொடர்ச்சியான முன்னேற்ற கலாசாரத்தை வளர்ப்பதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

தேசிய மதிப்பீட்டுக் கொள்கை அமலாக்கக் கட்டமைப்பின் அறிமுகத்தை நான் வரவேற்கிறேன் மற்றும் தீவு முழுவதும் அதன் வெளியீட்டை எதிர்பார்க்கிறேன். இலங்கை மக்களுக்கு உண்மையிலேயே நன்மையளிக்கும் ஆதார அடிப்படையிலான, பயனுள்ள, தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அபிவிருத்தியை நோக்கிய எமது பயணத்தில் இது ஒரு முக்கிய படியாகும்.

**ரணில் விக்கிரமசிங்க**
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மற்றும்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர்



# பொருளாதார வளர்ச்சியை அதிகரித்துச் செல்வதற்கான மதிப்பீட்டுச் சட்டகங்களை மேம்படுத்துதல்

வரலாற்று ரீதியாக இலங்கையானது, கருத்திட்டம் மற்றும் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பான அனுபவங்களில் குறைவான பதிவுகளையே கொண்டுள்ளது. குறிப்பாக இது அடிக்கடி பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களில் காணப்படும் உண்மையான பண்புகளாக தவறான விளைவுகள் மற்றும் தாமதங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. தற்போது, இலங்கையானது சுதந்திரத்தின் பின்னர் பாரதூரமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. குறிப்பாக நிதிக் கட்டுப்பாடுகள், இறையாண்மைக்கடன் நெருக்கடியின் தாக்கங்களைக் கருத்தில் கொள்வது சவாலாக அமைந்துள்ளன. இந்நிலைமையில் என்றும் இல்லாதவாறு மட்டுப்படுத்தப்பட்ட நிதி வளங்களை மிகக் குறைந்தளவான விரயத்துடன் செயலூக்கமுள்ள வரிசைப்படுத்துதல் மூலம் கையாள்கை மிக முக்கியமாகும். இலங்கை இனியும் அதன் பொதுச்செலவுகளில் - குறிப்பாக மூலதனச் செலவுகளில் தாமதங்கள், அதிக செலவீனம் மற்றும் துணை உகந்த விளைவுகளை அனுபவிக்க முடியாது.

மூலதனச் செலவு மற்றும் அபிவிருத்தித் கருத்திட்டங்களின் வினைத்திறனையும் உச்சபயனையும் மேம்படுத்த, கடந்த கால அனுபவங்களில் இருந்து கற்றுக் கொண்ட பாடங்களை ஒருங்கிணைத்து மதிப்பிடுவதற்கான வலுவான வழிமுறைகளைக் கொண்டிருப்பது இன்றியமையாதது. கடந்த கால கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் நேர்மறை மற்றும் எதிர்மறையான விளைவுகளில் இருந்து கற்றுக் கொள்வது எதிர்கால கருத்திட்டங்களுக்கான சான்று அடிப்படையிலான பகுப்பாய்வில் நேர்மறைகளை உருவாக்குவதற்கும் கடந்த காலத்தின் ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கும் மிக முக்கிய ஆதாரமாக இருக்கும். நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் செயற்படுத்தப்பட்ட மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மேம்பாட்டு திட்டமிடல், பாதீடு, மேம்பட்ட தலையீடுகளின் கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றிற்கான ஆக்க பூர்வமான உள்ளீடுகளை வழங்குகின்றன. அபிவிருத்திப் பங்காளிகளால் நிதியளிக்கப்பட்ட பல கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் அவர்களுடைய சொந்த மதிப்பீட்டுக் கட்டமைப்பைக் கொண்டிருந்தாலும் இம்மதிப்பீட்டின் பெறுபேறுகள் இலங்கையர் மத்தியில் உள்ள உள்நாட்டு பங்காளர்களால் முழுமையாக உள்வாங்கப்படுவதில்லை. எனவே இலங்கையின் தேசிய மதிப்பீட்டு கொள்கையை (NEP) முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குரிய ஏற்ற பொருத்தமான தருணம் இதுவாகும்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைசசானது செயலூக்கமான மதிப்பீட்டுச் சட்டகத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதுடன் அமைச்சானது நாட்டின் பொதுத்துறையில் நிலைபேறான வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் மதிப்பீட்டுச் சட்டகங்களை நெறிப்படுத்துவதற்கான உகந்த சூழலை உருவாக்குவதற்கு தன்னை அர்ப்பணிக்கின்றது. NEP இனை உருவாக்குவதற்கான வழிகாட்டல் குழு மற்றும் தேசிய மதிப்பீட்டு கொள்கை செயற்படுத்துதல் சட்டகத்தினை (NEPIF) வரைவதற்கான வழிகாட்டல் குழு, கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் மற்றும் NEPIF வரைவதில் ஈடுபட்டவர் எல்லோருக்கும் நான் எனது நன்றியினைத் தெரிவிப்பதுடன் சகல பங்குதாரர்களினதும் தொடர்ச்சியான இணைவினையும் ஆதரவினையும் இம்முக்கியமான தருணத்தில் எதிர்பார்க்கின்றேன்.

**கே.எம். மகிந்த சிறிவர்தன.**
செயலாளர்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

# முன்னோக்கு

அருமையான வளங்களின் உத்தம பயன்பாட்டை நோக்காக கொண்ட செயற்பாட்டுத் தன்மையுடைய முயற்சிகளின் ஊடாக முதலீடுகளின் பயன்பாடுகளை அறிந்துகொள்வதற்கான குடிமக்களின் உரிமைகளை உறுதிப்படுத்த முடியும். அவ்வாறான முயற்சிகளுக்கு அனுகூலமான சூழ்நிலையை உருவாக்கும் காரணிகளில் மதிப்பீடானது முக்கியமான பங்களிப்பை வழங்குகின்றது மற்றும் அதனூடாக பொது முதலீடுகளின் உண்மை நிலைமைக்கும் தூரநோக்கிற்கும் இடையில் காணப்படும் குறிப்பிடத்தக்க பாரிய இடைவெளியை குறைத்துக்கொள்ள முடியும். பொது முதலீடுகளின் உண்மையான விளைவுகளை அதன் உண்மையான பெறுபேறுகளை மதிப்பிடுவதன் மூலமே தெளிவாக அறிந்து கொள்ள முடியும். இந்நிலையில், முதலீட்டின் வினைதிறன் மற்றும் விளைதிறனை மதிப்பிடுவதன் ஊடாக நல்லாட்சியை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் தகவலறிந்த தீர்மானமெடுத்தலுக்குமான ஒரு கருவியாக இது காணப்படுவதனால் மதிப்பீட்டை பயன்படுத்துவதன் முக்கியத்துவம் முன்னரைவிட அதிகமாக விவாதிக்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய, தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தி முயற்சிகளின் இடைக்கால மற்றும் பிந்திய மதிப்பீடுகளினூடாக மதிப்பீட்டினை ஓரளவிற்கு நிறுவனமயமாக்குவதற்கு கடந்த காலங்களில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இந்த மதிப்பீடுகளில் பெரும்பாலானவை நன்கொடையாளர் உந்துதல் மற்றும் கருத்திட்டம் சார்ந்தவையாக இருந்ததனால், திட்டமிடல் செயல்பாட்டில் கண்டுபிடிப்புகள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் பயன்படுத்தப்படவில்லை அல்லது தொடர்புடைய பங்குதாரர்களிடையே பகிர்ந்து கொள்ளப்படவில்லை என்பது கவனிக்கப்பட்டுள்ளது. இதனை தவிர, நாட்டில் குறிப்பாக பொதுத் துறையில், மதிப்பீடு தவறுகளை கண்டுபிடிக்கும் செயல் என்ற தவறான புரிந்துணர்வு மற்றும் மதிப்பீட்டிற்கான கேள்வி இல்லாமை காரணமாக மதிப்பீடானது நாட்டில் பிரபல்யமடையவில்லை.

பொதுத்துறை நிறுவனங்களுக்கிடையில் மதிப்பீட்டினை முக்கியப்படுத்துதலை அடித்தளமாக கொண்டு தேசிய மதிப்பீட்டு கொள்கையானது 2018ம் வருடத்திலிருந்து நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் ஒரு பகுதியாகியுள்ள அதே வேளை மதிப்பீட்டு கொள்கையை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை கருத்திற்கொண்டு அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானத்திற்கமைய தேசிய மதிப்பீட்டு கொள்ளை கட்டமைப்பானது தயாரிக்கப்படுகின்றது. இது தேசிய, மாகாண மற்றும் மாவட்ட நிர்வாகம் போன்ற அரச துறையிலுள்ள உத்தியோகத்தர்கள், அபிவிருத்திப் பங்குதாரர்கள், கல்வித்துறையினர், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச சார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகம் உள்ளடங்களாக பல்வேறுபட்ட அக்கறையுடை தரப்பினர்களின் கூட்டுமுயற்சியின் பெறுபேறாகும். அதனால், NEPIF ஆனது உள்நாட்டு அறிவு மற்றும் அனுபவத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான தயாரிப்பாக காணப்படும் அதேவேளை பொதுத்துறை முழுவதற்கும் மதிப்பீட்டிற்கு சாதகமான சூழலை வளர்ப்பதன் மூலம் நாட்டில் மதிப்பீட்டு கலாசாரத்தை உருவாக்குவதற்கான நீண்டகால மற்றும் நிலையான நிகழ்ச்சித்திட்டதிற்கான ஆரம்ப கட்டத்தை குறிக்கின்றது. இந்த கட்டமைப்பானது சுயவிமர்சனத்திற்கும் சான்றுகள் அடிப்படையில் முடிவெடுப்பதற்கும் பரந்த இடத்தை வழங்குவதுடன் திறமையான மற்றும் பயனுள்ள பொது சேவை வழங்கலுக்கு பெரிதும் பங்களிக்கும்.

இந்த கட்டமைப்பானது தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை செயல்படுத்துவதற்கான மதிப்பீட்டு வழிகாட்டுதல்கள், நிறுவன ஏற்பாடுகள், தரநிலைகள் மற்றும் உத்திகளை உள்ளடக்கிய வழிகாட்டுதல் மற்றும் நடைமுறைகளை வழங்குகிறது. அதனால், மதிப்பீடுகளை முறையாகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையிலும் செயல்படுத்துவதற்கு இது ஒரு வலுவான சூழலை உருவாக்குகிறது. இந்த முயற்சியின் எதிர்பார்ப்பு நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை வலுப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் மதிப்பீட்டை நிறுவனமயமாக்குவது மட்டுமல்லாமல், பொதுத் துறையில் உள்ள உத்தியோகத்தர்கள் மதிப்பீட்டை அபிவிருத்தி பெறுபேறுகளை சரியான நேரத்தில் வழங்குவதற்கான ஒரு கருவியாக பயன்படுத்துவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் சாதகமான சூழலை வளர்ப்பதன் மூலம் மதிப்பீட்டு கலாசாரத்தை நிறுவுவதும் ஆகும்.

பொதுத் துறையில் மதிப்பீடு என்பது மிகவும் புதிய நடைமுறையாக இருப்பதனால், நடைமுறைக் கட்டமைப்பை நடைமுறைக்குக் கொண்டுவருவது மிகவும் சவாலான செயலாகும். தொழில்முறை மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள கருவிகள், வழிகாட்டுதல்கள், நெறிமுறைகள் மற்றும் தரநிலைகள் ஆகியவற்றின் பயன்பாடு குறித்த ஒழுங்காக வெளிப்படுத்தப்பட்ட பயிற்சித் திட்டத்தை வெளியிடுவதன் மூலம் மதிப்பீட்டினை நிறுவனமயப்படுத்தும் நடவடிக்கையானது இந்த கட்டமைப்பை அறிமுகப்படுத்திய உடனேயே ஆரம்பிக்கப்படும். இதைக் கருத்தில் கொண்டு, சுயாதீனமாக மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு தேசிய மட்டத்திலிருந்து மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்கள் வரை பொதுத் துறையை தயார்படுத்துவதற்காக, 2023-2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் (PMMD) பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களை பயிற்சியாளர்களாகப்

பயன்படுத்துவதன் மூலம் விரிவான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த செயல்முறையின் நிலைத்தன்மையானது, அக்கறையுடை தரப்பினர்களிடையே மதிப்பீட்டுக் கண்டுபிடிப்புகள் மற்றும் படிப்பினைகளைப் பகிர்ந்துகொள்வது மற்றும் திட்டமிடல் மற்றும் வரவுசெலவுத் திட்டத்தில் அந்த கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்துவதைப் பொறுத்தது என்பதால், மதிப்பீட்டு-தகவல்களின் உச்ச பயன்பாட்டை உறுதிசெய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இலங்கையில் மதிப்பீட்டு கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கும் வலுப்படுத்துவதற்கும் அனைத்து அக்கறையுடைய தரப்பினர்களினதும் ஒத்துழைப்பை கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களமானது நன்றியுடன் எதிர்பார்க்கின்றது.

**அயந்தி டீ சில்வா,**
பணிப்பாளர் நாயகம்
கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களம்
2023 செப்டெம்பர் 08ம் திகதி

# உள்ளடக்கம்:

**அறிமுகம்** 01

**அத்தியாயம் 1:**
இலங்கையின் தேசிய மதிப்பீட்டுக் கொள்கை 04

**அத்தியாயம் 2:**
தேசிய மதிப்பீட்டு கொள்கையை அமல்படுத்துவதற்கான நிறுவன கட்டமைப்பு (NEP) 14

**அத்தியாயம் 3:**
வருடாந்த மதிப்பீட்டு நிகழ்ச்சி நிரல் 18

**அத்தியாயம் 4:**
மதிப்பிடலை அமல்படுத்துவதற்கான வழிகாட்டல் 23

**அத்தியாயம் 5:**
இலங்கை மதிப்பீட்டு நியமம் 33

**அத்தியாயம் 6:**
தேசிய மதிப்பீட்டு கொள்கையை அமல்படுத்துவதற்கான தந்திரோபாய அணுகுமுறை 37

**இணைப்புக்கள்** 40

# அறிமுகம்

# அறிமுகம்

நாட்டின் மக்களுக்கு நிலையான பயன்களை வழங்கிய புத்தாக்க, பாரியளவிலான, பல்நோக்கு உட்கட்டமைப்பு கருத்திட்டங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன இலங்கையின் அபிவிருத்தி வரலாற்றுக்கு சான்று பகறுகின்றன. அபிவிருத்தி செயற்பாடுகளின் ஆரம்ப கட்டங்களின் அடைவுகள் நிலையானதாக இருந்தபோதும், எதிர்கால அபிவிருத்தி முனைவுகளுக்கான திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் அமுல்படுத்தல் என்பவற்றுக்கு குறிப்புக்களாக பயன்படுத்திக்கொள்வதற்கு ஆகக்குறைந்தது முக்கிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் வெற்றி அல்லது தோல்விக்கு ஏதுவான காரணங்கள் பற்றிய குறிப்பிடத்தக்க சான்றுகளேனும் கிடைத்திருக்கவில்லை. நிலையான மற்றும் நேர்மறையான முடிவுகளை உருவாக்கிய கடந்த காலத்தின் நம்பகமான சான்றுகள் இல்லாமை மற்றும் எதிர்கொண்ட தவறுகள் மற்றும் பலவீனங்கள் எதிர்பாராத எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியமை என்பன பெரிய மற்றும் பாரியளவிலான அபிவிருத்தி முனைவுகளை நம்பிக்கையுடன் திட்டமிடுவதற்கு தடையாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டவற்றை கருத்திற் கொண்டு, கொள்கை வகுப்பாளர்கள், அபிவிருத்தி பயிற்சியாளர்கள் மற்றும் அபிவிருத்தி பங்குதாரர்களின் அதிகரித்து வரும் கேள்விக்கு பதிலளிப்பதற்காக இலங்கை தேசிய மதிப்பீட்டு கொள்கையானது (NEP) இக்கொள்கையை அமல்படுத்துவதற்கான (NEP) தந்திரோபாய கட்டமைப்பை தயாரிப்பதற்கான பணிப்புடன் 2018 ஜூன் மாதம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. அமைச்சரவையின் பணிப்பிற்கமைய, கொள்கை வகுப்பாளர்கள், அரச துறையிலுள்ள அபிவிருத்தி செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், மதிப்பீட்டு பயிற்சியாளர்கள் மற்றும் அபிவிருத்திப் பங்குதாரர்களின் பரந்த ஆலோசனையுடன் தேசிய மதிப்பீட்டுக் கொள்கை செயற்படுத்தல் கட்டமைப்பு (NEPIF) வரைவிடப்பட்டது. NEPIF இன் இறுதி நோக்கம் வினைதிறன் மிக்க மதிப்பீட்டு முறைமையொன்றினை ஸ்தாபிப்பதாகும்.

NEPF இனை உருவாக்கும் ஆலோசனை செயற்பாட்டின் போது நாட்டில் வினைதிறன் மிக்க மதிப்பீட்டு முறைமையொன்றினை ஸ்தாபிப்பது பல்வேறு காரணங்களால் அதாவது மதிப்பீட்டுடன் தொடர்புடைய அறிவு, அனுபவம், வளங்கள், நிறுவனங்கள் மற்றும் முறைமை என்பன போதுமானளவு மதிப்பிடப்படாதிருந்தமை மற்றும் மதிப்பீட்டின் நோக்கத்துடன் சார்ந்திருக்காமை என்பன சவாலான செயலாகும் என்பது சுட்டிக்காட்டப்பட்டது. ஆகவே, NEPF ஆனது சிதறிய அறிவு, வளங்கள், நிபுணத்துவம் மற்றும் நிறுவனங்களை தேசிய மதிப்பீட்டு கொள்கையின் நோக்கத்தை வெளிக்கொணர்கின்ற ஒரு அமைப்பினுள் ஒருங்கிணைக்கும் குறிக்கோளுடன் வரையப்பட்டுள்ளது.

தேசிய மதிப்பீட்டு கொள்கையின் நோக்கமானது மேம்படுத்தப்பட்ட கொள்கை உருவாக்கம், திட்டமிடல், பாதிடல், கண்காணித்தல் மற்றும் அமல்படுத்தலினூடாக தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளக் கூடிய சாதகமான சூழ்நிலையை உருவாக்குதலாகும். அதனால், இவ்விறுதி நோக்கத்தினை அடைந்துகொள்வதற்காக அரச அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலில் ஒருங்கிணைந்த பகுதியாக மதிப்பிடல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் தேசிய மதிப்பீட்டு கொள்கையின் இலக்குகளாவன கொள்கையின் நோக்கத்தினை அடைந்துகொள்வதற்காக மற்றும் அதனூடாக நிலையான அபிவிருத்திக்கு சிறந்த சூழலை உருவாக்குவதற்காக: NEP ஐ செயல்படுத்தும் போது படிப்படியாக அடைந்துகொள்ளப்பட வேண்டிய முக்கிய செயற்றிறன் பகுதிகளை தேசிய மதிப்பீட்டு கொள்கையின் இலக்குகளாவன (கீழே i இலிருந்து a வரை பட்டியலிடப்பட்டுள்ளது) தெளிவாக சுட்டிக்காட்டப்படுகின்றன.

i. சான்று அடிப்படையிலான தீர்மானமெடுத்தல் மற்றும் திட்டமிடலை மேம்படுத்தல்

ii. நிலையான அபிவிருத்தி பெறுபேறுகள் மற்றும் வள பயன்பாடு என்பவற்றில், பொருத்தப்பாடு, வினைதிறன் மற்றும் விளைதிறனை உறுதிப்படுத்தல்

iii. அனைத்து பெறுபேற்று மட்டங்களிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தல்

iv. கொள்கைள், கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்களின் எதிர்மறையான விளைவுகள் மற்றும் தோல்விகளை குறைக்கும் அதேவேளை சிறப்பான நடைமுறைகள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களை ஊக்குவித்தல்

v. நாட்டில் மதிப்பீட்டு கலாசாரத்தை உருவாக்குதல்.

NEP அமல்படுத்தலுக்கு பின்வரும் முக்கிய கூறுகள் உள்ளடங்கிய ஆதரவான சூழல் அவசியமானதாகும்:

i. திறமையான மனித வளத்துடன் கூடிய நன்கு வரையறுக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பு

ii. திட்டமிடலாளர்கள், கொள்கை மற்றும் தீர்மானமெடுப்பவர்கள் மத்தியில் மதீப்பீட்டிற்கு நிலவும் கேள்வி

iii. மதிப்பீட்டினை வழமையான அடிப்படையில் செயற்படுத்துவதற்கான வருடாந்த அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்

iv. மதிப்பீடுகளை தெரிவுசெய்தல் மற்றும் முன்னிலைப்படுத்தல், மதிப்பீட்டை முன்னெடுத்தல் மதிப்பீட்டு கண்டுபிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை பரப்புதல் மற்றும் பரிந்துரைகள் அமல்படுத்தப்படுதலை கண்காணித்தல் மற்றும் முகாமைத்துவ பின்னூட்டங்களை கையாளுதல் என்பவற்றுக்கான வழிகாட்டுதல்கள்

v. மதிப்பீட்டின் நியமங்கள் மற்றும்

vi. மதிப்பீட்டு கண்டுபிடிப்புக்களை திட்டமிடல் மற்றும் தீர்மானமெடுத்தலுக்காக பயன்படுத்துதல்.

இலங்கை தேசிய மதிப்பீட்டு கொள்கையின் உள்ளடக்கம்:

i. NEP ஐ அமல்படுத்துவதற்கான நிறுவன கட்டமைப்பு

ii. வருடாந்த மதிப்பீட்டு நிகழ்ச்சி நிரல்

iii. மதிப்பீட்டு வழிகாட்டுதல்கள்

iv. இலங்கை மதிப்பீட்டு நியமம்

v. மதிப்பீட்டை அமல்படுத்துவதற்கான தந்திரோபாய அணுகுமுறை

அத்தியாயம் 1

# விரிவான தேசிய மதிப்பீட்டுக் கொள்கை

# விரிவான தேசிய மதிப்பீட்டுக் கொள்கை

## 1. அறிமுகம்

திட்டமிட்ட சமூக-பொருளாதார நோக்கங்களை உரிய நேரகாலத்திலும் வினைத்திறனுடன் கூடிய வகையிலும் நிறைவேற்றுவதற்கு தேவையான அபிவிருத்தி முகாமைத்துவ சுழற்சிப் பொறிமுறையில், மதிப்பீடு செய்தல் என்பது இன்றியமையாத அங்கமாக விளங்குகின்றது. இலங்கை அரசாங்கம் அதன் பொது நிர்வாகத்தில் மதிப்பீட்டு முறைமையை அறிமுகப்படுத்தியுள்ள போதிலும் அதனை நடைமுறைப்படுத்துவது வரையறுக்கப்பட்டதாகவும் சீரற்றதாகவும் விளங்குகின்றது. இதனால் மேலும் முறையானதும், நிறுவன ரீதியானதுமான அணுகுமுறை தேவைப்படுகின்றது.

இலங்கையர்களின் அபிலாசைகள் வளர்ந்து வருகின்றதாலும், உயர் நடுத்தர வருமானமுள்ள நாடென்ற நிலையை அடைவதை இலங்கை இலக்காகக் கொண்டுள்ளதாலும், பூகோளப் பொருளாதாரத்துடன் மேலும் ஒருங்கிணைவதாலும், உயர்தர உட்கட்டுமானங்கள் மற்றும் பொதுச் சேவைக்கான தேவை என்பன அதிவேகமாக அதிகரிக்கின்றன. அதேவேளை இலங்கை சலுகைமுறையிலான நிதி வழங்கலில் இருந்து முன்னேற்றம் கண்டுவருவதோடு நிதி வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டனவாகவுள்ளமையால் பயனுறுதிமிக்கவும் திறை மமிக்க வினைத்திறனுடன் கூடியதுமான பொது முதலீடுகள் இன்றியமையாததாகும்.

அரிதாகக் காணப்படும் பொது வளங்களை முன்னுரிமைப்படுத்துவதற்கும், அவற்றின் நடைமுறைப்படுத்தலை வழிப்படுத்துவதற்கும் அபிவிருத்திப் பெறுபேறுகளை அதிகபட்சமாக்குவதற்கும் பொதுக் கொள்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்கள் தொடர்பான எதிர்வுகூறல்களின் அடிப்படையிலும் உண்மைப் பெறுபேறுகளின் அடிப்படையிலானதுமான தாக்க மதிப்பீடு அவசியமாகும்.

இந்த நோக்கத்துடன் நல்லாட்சி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய அரசியல்யாப்பு கொள்கைகளை உறுதிப்படுத்துவதற்காக 2018 ஜுன் மாதத்தில் அமைச்சரவை தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை அங்கீகரித்தது.

## 2. நோக்கம்

மேம்பட்ட கொள்கை-உருவாக்கம், திட்டமிடல், வரவுசெலவு, கண்காணிப்பு மற்றும் நடைமுறைப்படுத்தும் போது பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல் ஆகியவற்றின் மூலமாக தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு ஏற்புடையதான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதே தேசிய மதிப்பீட்டுக் கொள்கையின் நோக்கமாகும். இதற்கு மேலதிகமாக பயிற்சி நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகத்தினூடாக நாடெங்கிலும் மதீப்பீட்டு திறனையும் தேர்ச்சியையும் விருத்திசெய்வதற்கு தேசிய மதிப்பீட்டுக் கொள்கை துணைபுரிகின்றது. மதிப்பீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது ஒரு மீளச்செயற்படுத்தப்படுகின்ற தகவமைப்பு செயன்முறையாகும் என்பதுடன் பயன்பாட்டுத்தன்மையையும் நடைமுறைகளையும் மேம்படுத்துவதற்கான மாற்றங்கள் தேவைப்படுகின்றன. அந்தவகையில் இக்கொள்கையானது நடைமுறைப்படுத்தலுக்கு தேவையான நெகிழ்வுத்தன்மையை அடிப்படையாகக்கொண்டுள்ளது.

## 3. தேசிய மதிப்பீட்டுக் கொள்கையின் கோட்பாடுகள்

தேசிய மதிப்பீட்டுக்கொள்கை பின்வரும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது:

3.1 **அபிவிருத்திப் பெறுபேறுகளை முகாமைத்துவம் செய்தல் (MfDR):** இதுவே அபிவிருத்தி செயன்முறைகளின் போது முழுவதிலுமாக வழிகாட்டல் கோட்பாடாக விளங்கும். தேசிய அபிவிருத்தி இலக்குகளோடு ஏற்கனவே பிரதானமாக இணைந்துக்கொள்ளப்பட்டுள்ளதான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு ஏற்புடையவகையில் பொதுத் துறையை மேலும் முடிவுகள் சார்ந்ததாக மாற்றுவதற்கு அபிவிருத்திப் பெறுபேறுகளை முகாமைத்துவம் செய்கின்ற முறைமையை அரசாங்கம் அறிமுகம் செய்திருந்தது.

3.2 **நல்லாட்சி மதிப்பீடு செய்யப்பட்ட தகவல்களைப் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் பரிந்துரைகளை பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாகவே நல்லாட்சி உறுதிப்படுத்தப்படும்.** நாட்டின் அரசியல்யாப்பிற்கு இணங்க பாராளுமன்றம் மற்றும் பிரஜைகள் மீது வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் பலப்படுத்துவதை தேசிய மதிப்பீட்டுக் கொள்கை நோக்காகக் கொண்டுள்ளது. அத்தோடு பொது வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் பொதுக் கொள்கைகள் நிகழ்ச்சிகள் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அரசாங்கத்தின் உள்ளக பொறுப்புக்கூறலையும் இது பலப்படுத்துகின்றது. வறுமையைக் குறைத்தல் மற்றும் “யாரையும் தவறவிட்டுவிடாமல்” இருக்கும் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பதை நோக்காகக் கொண்டதான அனைவரையும் உள்வாங்கிய அபிவிருத்தி செயன்முறைக்கு ஆதரவளிப்பதை இந்தக் கொள்கை நோக்காகக் கொண்டுள்ளது.

3.3 **மதிப்பீட்டு கலாசாரம்: நிலைபேறான மதிப்பீட்டிற்கான அத்தியாவசிய முன்நிபந்தனையாக ஊக்குவிக்கப்படும்.** தேசிய மதிப்பீட்டு கொள்கையானது சான்றுகளை ஆதாரமாகக் கொண்ட கொள்கை, வகுப்பு திட்டமிடல் மற்றும் வள ஒதுக்கீட்டிற்கு வழிகோலுகின்றது. மதிப்பீட்டு கலாசாரத்தை ஊக்குவித்து அதனை நிறுவனமயப்படுத்துவதற்கு தேசிய மதிப்பீட்டு கொள்கையானது மதிப்பீடுகளுக்கான கேள்வியை வலுப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துதலுக்கு ஆதரவளிப்பதற்கும் வெளிப்படைத்தன்மை மற்றும் கற்றலுக்கு வெகுமதியளிப்பதுமான ஒரு தொகுதி ஊக்க நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

*"அபிவிருத்திப் பெறுபேறுகளை முகாமைத்துவம் செய்தல் (MfDR): இதுவே அபிவிருத்தி செயன்முறைகளின் போது முழுவதிலுமாக வழிகாட்டல் கோட்பாடாக விளங்கும்.*

*நல்லாட்சி மதிப்பீடு செய்யப்பட்ட தகவல்களைப் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் பரிந்துரைகளை பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாகவே நல்லாட்சி உறுதிப்படுத்தப்படும்.*

*தேசிய மதிப்பீட்டு கொள்கையானது சான்றுகளை ஆதாரமாகக் கொண்ட கொள்கை, வகுப்பு திட்டமிடல் மற்றும் வள ஒதுக்கீட்டிற்கு வழிகோலுகின்றது."*

## 4. கொள்கைக் கூற்றுகள்

4.1 **தீர்மானங்களை எடுப்பதற்கு மிகவும் பொருத்தமான கற்றல் மற்றும் பின்னூட்டல் பொறிமுறையாக மதிப்பீடு அங்கீகரிக்கப்படும்.** மதிப்பீடுகள் மூலம் கிடைத்த முடிவுகள் திட்டமிடுதலிற்கும், எதிர்கால அபிவிருத்தி தலையீடுகளிற்கான வளங்களை ஒதுக்குவதற்கும் பயன்படுத்தப்படாத வரை மதிப்பீட்டின் கால எல்லை முடிவற்றதாகவே காணப்படும். சாத்தியமான பொது முதலீடுகள் மற்றும் செலவீனங்கள் மூலமாக தேசிய மதிப்பீட்டுக் கொள்கை, உயர்ந்த சமூக பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய போதிய தயார் நிலை மற்றும் நடைமுறைப்படுத்தும் திறன் உள்ள தற்போதைய திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகளிற்கு ஆதரவு வழங்குகின்றது.

*படம் 1 : கொள்கை மற்றும் கருத்திட்ட வட்டம்*




4.2 **தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக தற்போதுள்ள முறைமைக்குள்ளாக ஒரு மிகப்பொருத்தமான நிறுவன ஒழுங்கமைப்பு உருவாக்கப்படும்.** நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகளிற்காக தேசிய மதிப்பீட்டுக் கொள்கை, புதிய ஸ்தாபன ரீதியான ஏற்பாடுகளை கோரவில்லை மாறாக தற்போது நடைமுறையில் உள்ள அமைப்புகள் மற்றும் திணைக்களங்களின் ஆற்றலை ஒருங்கிணைப்பை வலுப்படுத்த முயல்கின்றது. மதிப்பீட்டு செயற்பாடுகள் ஒன்றிற்கு பொதுவானவை என்பதுடன் திட்டமிடல் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்தல் செயற்பாடுகளுடன் மிகவும் நெருக்கமானவை. தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது என்பது தேசிய மற்றும் பிராந்திய அளவில் திட்டமிடல், கண்காணிப்பு மற்றும் நிதி ஒதுக்கீடு செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் பொறுப்பான திணைக்களங்களின் கூட்டு முயற்சியிலேயே தங்கியுள்ளது. தேசிய மதிப்பீட்டு வழிகாட்டும் குழுவின் ஊடாகவும் ஏற்கனவே உள்ள பொறிமுறையான அமைச்சரவையினால் உருவாக்கப்பட்ட பொது முதலீட்டு குழுவின் ஊடாகவும் இந்த ஒருங்கிணைப்பு இடம்பெறும். ஏனைய இடங்களில் இந்த ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையை வலுப்படுத்தி முன்னெடுப்பதற்காக அர்ப்பணிப்புள்ள வழிகாட்டும் குழுக்கள் உருவாக்கப்படும். கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட தகவல் அமைப்பு முறையொன்று ஆதரவு வழங்கும். இதன் மூலம் முழுமையான துல்லியமாக தரவுகளை திரட்டுதல், மற்றும் அதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குதல் போன்ற பணிகள் முன்னெடுக்கப்படும். தற்போது நடைமுறையில் உள்ள கட்டமைப்பு முறை போதியளவு வளங்கள் மற்றும் நிபுணத்துவம் மூலம் மேலும் வலுப்படுத்தப்படும்.

4.3 **மதிப்பீட்டில் தொழில்சார் தன்மையை வலுப்படுத்துவதற்காக பொருத்தமான சாதனங்கள், விஞ்ஞான ரீதியான முறைமைகள் மற்றும் தகவல் அமைப்புகள் ஊக்குவிக்கப்படும்.**

மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஒத்திசைவான தன்மை, தராதரம் மற்றும் நம்பகதன்மையை பேணுவது தொடர்பிலும் பொருத்தமான ஸ்தாபனங்கள் தங்கள் செயற்பாடுகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான முக்கிய நடவடிக்கையாக மதிப்பீடுகளை உள்வாங்குவதை உறுதிசெய்வதற்காகவும் பொது அமைப்புகளிற்கு சுற்றுநிருபம் ஊடாக மதிப்பீடுகள் தொடர்பான நடைமுறைப்படுத்தும் வழிகாட்டுதல்கள் மற்றும் தராதரங்கள் குறித்த தெளிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்படும்.

இந்த வழிகாட்டுதல்கள் குறிப்பாக கட்டமைப்புகளின் முடிவுகளை உள்வாங்கியதாக காணப்படும், மேலும் பல்வேறுபட்ட மதிப்பீட்டு முறைகள் தொடர்பான தெளிவையும் வழங்கும். ஒவ்வொரு துறைக்கும் விசேடமான தகவல் அமைப்பு முறை மதிப்பீட்டின் முக்கிய தரவு மூலங்களை பிரதிநிதித்துவம் செய்யும். இதற்கு ஆதரவளிக்கும் விதத்தில் விசேட ஆய்வுகள் மற்றும் வெளி தரவுகள் காணப்படும்.

பல்வேறு விதமான அபிவிருத்தி சவால்களின் போதும் மதிப்பீட்டிற்கு தீர்வு காணப்படும், குறிப்பாக அபிவிருத்தி நடைமுறைகளை பாதிக்கும் காலநிலை மாற்றம், சூழலமைப்புகள், சொத்துக்கள் குறிப்பிட்ட ஆய்வுப்பொருள் சார்ந்த கொள்கைகள், மற்றும் திட்டங்கள் இச்சவால்களுக்கு சிறப்பான தீர்வை முன்வைக்கின்றன மற்றும் மட்டுப்படுத்தல் நடவடிக்கைகள் குறித்த யோசனைகளை முன்வைக்கின்றன என்பதை மதிப்பீடுகள் எடுத்தியம்பும்.

*படம் 2 : கருவிகள், முறைகள் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகளுக்கான அணுகுமுறைகள்*




4.4 **வெளிப்படைத்தன்மை, இணைந்த பொறுப்பு, நம்பகதன்மை மற்றும் அறிவை பகிர்ந்துகொள்ளுதல் ஆகியவற்றிற்காக ஆதாரங்களை அடிப்படையாக கொண்ட மதிப்பீடுகளில் இணைந்த பங்கேற்பு அணுகுமுறைகள் ஊக்குவிக்கப்படும்.**

திட்டம், வேலைதிட்டம் அல்லது கொள்கை ஆகியவற்றில் தொடர்புள்ளவர்களிற்கு பங்குபெறுவதற்கான வாய்ப்பே பங்கேற்பு அணுகுமுறை. மேலும் இது தேசிய மதிப்பீட்டுக் கொள்கை முடிவுகள் தொடர்பாக ஒருவகை உரிமை தன்மையை உருவாக்குகின்றது. பயனாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பின்னூட்டம் நடைமுறைப்படுத்தலில் இருந்து கற்றுக்கொள்வதற்கும் இடைப்பட்ட காலங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அதன் மூலம் முடிவுகளை முன்னேற்றகரமானதாக்குவதற்கும் உதவும். மூன்றாவது உருவப்படத்தில் பொதுமக்கள் பங்களிப்பு தொடர்பான பல்வேறு செயல்முறையியல்களும் நிலைகளும் காண்பிக்கப்பட்டுள்ளன. தேசிய மதிப்பீட்டுக் கொள்கை நடைமுறைப்படுத்தல் கட்டமைப்பில் இவை தெளிவாக குறிப்பிடப்படும்.

*படம் 3 : மதிப்பீடுகளில் குடிமக்களை அமர்த்திக்கொள்ளும் நடவடிக்கைகளை வகைப்படுத்தல்*

| | |
|---|---|
| **பிரஜைகளின் ஆலோசனை** | என்ன விடயங்களை மதிப்பீடு செய்தல், உள்ளீடுகள், மதிப்பீடுகளில் பின்னூட்டல் மற்றும் மதிப்பீட்டு செயன்முறை என்பவற்றில் ஆலோசனை பெறுதல் |
| **பங்குபற்று-தலுடனான மதிப்பீடு** | மதிப்பீட்டை வரைதல், செயற்படுத்துதல், விளக்குதல் என்ற விடயங்களில் முகவர்களின் பிரதிநிதிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் (பயனாளிகள் உள்ளடங்கலாக) என்பவர்களை ஈடுபடுத்துதல். |
| **சமூக கணக்காய்வு** | பிரஜைகள் (சிவில் சமூகம், கல்வியலாளர்கள் குழு, சமூக அங்கத்தவர்கள், தனியார் துறையினர்) என்போர் ஒன்றிணைந்து பொதுச்சேவைகளின் வழங்கல் மற்றும் அரசாங்க செயற்றிட்டங்கள் செயன்முறைகள் என்பவற்றினை கணக்காய்வு செய்வர். |

> *மதிப்பீடுகளிற்கு போதிய வளங்களை ஒதுக்கீடு செய்வது அவசியமாகும். முயற்சியொன்றை முன்னெடுப்பதற்கான திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் கட்டத்தின் போது மதிப்பீட்டிற்கான செலவினை கணிக்கவேண்டும். இதன் அடிப்படையில் மதிப்பீட்டிற்கு வருடாந்த நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்ளவேண்டும்.*

**4.5 தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபடும் பங்குதாரர்களின் திறனை வளர்த்தல் அவசியமாகும்.** புதிய கொள்கை என்ற அடிப்படையிலும் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற செயற்பாடு என்ற அடிப்படையிலும் பொதுத்துறையினர் கல்விச்சமூகம் மற்றும் பரந்துபட்ட பொதுமக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் திறனை வளர்த்தலும் அவசியமாகும். தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான தற்போதைய திறனை ஆய்வு செய்வது முக்கியமானதாகும், தற்போதுள்ள திறன், திறன் இடைவெளி மற்றும் மதிப்பீடு தொடர்பான அறிவு மற்றும் அனுபவத்தை வலுப்படுத்துவதற்கான தற்போதைய நடவடிக்கைகள். நடைமுறையில் உள்ள பொதுத்துறை ஸ்தாபனங்கள் மூலம் சான்றிதழ் திட்டமொன்றை உருவாக்கலாம். கொள்கைகளை முன்வைப்பதற்கு முன்னர் பயிற்சியாளர்களிற்கு பயிற்சிகள் வழங்கப்படும். அதிகளவு திறன் மற்றும் மதிப்பீட்டு திறனை கொண்ட மனித மூலதனத்திற்கான தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்வதை கருத்தில் கொண்டு கற்கைநெறிகளை உருவாக்குமாறு உயர்கல்வி நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும். கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புகளை அதிகரிப்பது மதிப்பீட்டு துறையில் உள்ள வேலைவாய்ப்புகளிற்கு ஏற்ற கல்வித்தகமையுடைய அதிகளவு கல்விமான்களை உருவாக்குவதற்கு உதவும். இதன் மூலம் இச்செயற்பாடு நம்பகதன்மை மற்றும் தரத்தை வலுப்படுத்த முடியும். இதேபோன்று சிவில் சமூக அமைப்புகள் கூட்டு மதிப்பீடுகளில் கலந்துகொள்வதற்கான திறனை விருத்தி செய்யவேண்டியிருக்கும்.

**4.6 மதிப்பீடுகளிற்கு போதிய வளங்களை ஒதுக்கீடு செய்வது அவசியமாகும்.** முயற்சியொன்றை முன்னெடுப்பதற்கான திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் கட்டத்தின் போது மதிப்பீட்டிற்கான செலவினை கணிக்கவேண்டும். இதன் அடிப்படையில் மதிப்பீட்டிற்கு வருடாந்தநிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்ளவேண்டும். வருடாந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள கொள்கை மற்றும் ஸ்தாபன ரீதியான மதிப்பீடுகளிற்கு மதிப்பீடு செலவுகள் வருடாந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்படவேண்டும்.

**4.7 மதிப்பீட்டு தகவல்களை அனைத்து பங்குதாரர்களும் இலகுவாக பெறக்கூடிய வழிமுறைகள் மூலம் பெற்றுக்கொள்ள வழிவகைசெய்யப்படும்.** மதிப்பீடுகள் மூலம் பெறப்பட்ட விடயங்களை வெளியிடுவது என்பது 2016இன் 12 இலக்க தகவல் உரிமை சட்டத்தின் 9ம் பிரிவின் கீழ் காணப்படுகின்ற சட்ட மற்றும் பொறுப்புக்கூறல் தேவைகளின் கீழான நெறிமுறை கடப்பாடாகும். இது திட்டங்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் வெளியிடவேண்டும் என ஆணையிடுகின்றது. உதாரணத்திற்கு செயலாக்க ஆய்வுகள், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் போன்றன. மத்திய, முழுமையான திட்ட தகவல் தொடர்பான தரவு சேமிப்பிடம் இல்லாததால் பொது முதலீடுகள் குறித்த தகவல்களை வெளியிடுவது கடினமாக உள்ளது. இதன் காரணமாக மதிப்பீடுகள் குறித்த தகவல்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்வதற்காக இணையத்தளத்தை அடிப்படையாக கொண்ட ஒருங்கிணைக்கப்பட்ட பொதுமக்கள் முதலீட்டு முகாமைத்துவ மற்றும் மதிப்பீட்டு தகவல் முறையொன்று ஏற்படுத்தப்படும். இத்தரவு திட்ட மதிப்பீடு, இடைக்கால ஆய்வுகள், தேசிய மதிப்பீட்டு குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகள் ஆகியவற்றை கொண்டிருக்கும். பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்காக செயற்கை மதிப்பீட்டு அறிக்கைகள் அமைச்சர்களிடம் வருடாந்த அடிப்படையில் வழங்கப்படும். மதிப்பீட்டு அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திடமும் செயற்பாட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும்.

## 5. தேசிய மதிப்பீட்டுக் கொள்கையின் இலக்குகள்

**5.1 ஆதாரங்களின் அடிப்படையிலான திட்டமிடல் மற்றும் தீர்மானங்களை எடுத்தல்.** பொதுக் கொள்கைகளின் உருவாக்கம் பற்றியும் மதிப்பீடு மற்றும் செயலாக்கக் கற்கைகள் அடிப்படையில் பெறப்பட்ட முடிவுகள் மற்றும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் திட்டங்களை பற்றியும் அறிவிக்க எண்ணியுள்ளது. கொள்கை மற்றும் திட்ட செயற்படுத்தல் ஆகியன நடுப்பகுதியில் செய்யப்படும் மீளாய்வு மூலம் பலப்படுத்தப்படும். திட்டங்களுக்கான செயலாக்கக் கற்கைகள் இற்றைப்படுத்தப்படவேண்டும். திட்டம்
மற்றும் கொள்கை மதிப்பீட்டுக்கு முன்னதான முடிவுகள் அந்தந்த நிறுவனங்களின் செயலாற்றுகைக் கொள்திறன் ஆகியன எதிர்கால இடையீடுகளுக்கான திட்டமிடல் மற்றும் முன்னுரிமையளித்தல் ஆகியவற்றுக்காக அறிவிக்கப்படும்.

**5.2 வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி முடிவுகளின் பேண்தகைமை ஆகியவற்றில் பொருத்தமான, வினைத்திறன் செயலாற்றல் விளைவுகளை உறுதிப்படுத்துதல்.** ஒவ்வொரு மதிப்பீடும் சம்பந்தப்பட்டவற்றின் பரிமாணங்கள், வினைத்திறன் மற்றும் நுண்ணிய செயலாற்றல் விளைவுகளை ஆராயும். பொதுச் சேவைகளின் விடயத்தைப் பொறுத்தவரையில் செயற்றிறனுடைய அளவானது அணுகக்கூடியதும் சேவைகளின் தரத்தையும் வைத்து அளவிடப்படும். கொள்கைகள் மற்றும் திட்டங்களுக்கான மதிப்பீடுகள் மாற்றங்களுக்கான கோட்பாட்டை ஆராய்வதன் மூலம் இடையீட்டின் முக்கியத்துவத்தையும் தேசிய

அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் கொள்கை நோக்கங்களுக்கு வழங்கப்படும் பங்களிப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதாக அமையும். பொது முதலீடுகள் மற்றும் திட்டங்கள் மீதான இன்னும் கடுமையான முன்னைய பின்னைய மதிப்பீடுகள் பொது வளங்களில் பற்றாக்குறை உள்ளவற்றை ஒதுக்கீடு செய்வதிலும் நிர்வாக செயற்றிறன் காண்பதிலும் உதவும். முக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கு மதிப்பீடானது பயனுடையதும் திறமையானதுமான ஆய்வுகளை மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்தி நோக்கத்தை அடைவதற்கு உதவுவதாக அமையும். இடையீடுகளின் இயல்பின் அடிப்படையில் (பொருளாதார அல்லது சமூக) வெவ்வேறு மதிப்பீட்டு நுட்பங்கள் மொத்த செலவுகள் மற்றும் நன்மைகள் (பண நோக்கமில்லாத) கணக்கிடுவதன் மூலம் பொது இடையீடுகள் மற்றும் அவற்றின் செயற்றிறனை கணக்கிட உதவும்.

> ***"வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி முடிவுகளின் பேண்தகைமை ஆகியவற்றில் பொருத்தமான, வினைத்திறன் செயலாற்றல் விளைவுகளை உறுதிப்படுத்துதல். ஒவ்வொரு மதிப்பீடும் சம்பந்தப்பட்டவற்றின் பரிமாணங்கள், வினைத்திறன் மற்றும் நுண்ணிய செயலாற்றல் விளைவுகளை ஆராயும். பொதுச் சேவைகளின் விடயத்தைப் பொறுத்தவரையில் செயற்றிறனுடைய அளவானது அணுகக்கூடியதும் சேவைகளின் தரத்தையும் வைத்து அளவிடப்படும்."***

> ***"முடிவுகளை வழங்குவதற்கான அனைத்து மட்டங்களிலும் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துதல். பொது நிறுவனங்கள் அடங்கலாக பொதுத்துறையில் பொதுச் சேவை விநியோக சங்கிலியானது பல படிகளையும் பங்குதாரார்களையும் ஈடுபடுத்துவதாக அமைந்துள்ளது. இது ஒத்தமைவின்றிய தகவல் மற்றும் வினைத்திறன் சவால்களை உருவாக்குகின்றது."***

5.3 **முடிவுகளை வழங்குவதற்கான அனைத்து மட்டங்களிலும் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துதல்.** பொது நிறுவனங்கள் அடங்கலாக பொதுத்துறையில் பொதுச் சேவை விநியோக சங்கிலியானது பல படிகளையும் பங்குதாரார்களையும் ஈடுபடுத்துவதாக அமைந்துள்ளது. இது ஒத்தமைவின்றிய தகவல் மற்றும் வினைத்திறன் சவால்களை உருவாக்குகின்றது.

இதற்கு தீர்வுகாண வெளி மதிப்பீடுகளைப் பயன்படுத்த முடியும். பெறுபேறுகளை நோக்காகக் கொண்ட மதிப்பீடு அனைத்து சேவை விநியோகச் சங்கிலி பூராகிலும் நிர்வாகத்திற்குள் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதற்கு உதவமுடியும். அத்தோடு இலகுபடுத்துதல் மற்றும் சரியான திருத்த நடவடிக்கைக்கு தகவலளிக்கின்றது. அத்தோடு பொதுச் சேவை வழங்குநர்கள் மற்றும் பொதுநிறுவனங்கள் முதற்கொண்டு கொள்கைவகுப்பாளர்கள் மற்றும் பாராளுமன்றம் என வெளியக பொறுப்புக்கூறலை அதனால் மேம்படுத்த முடியும். நேரடியான சந்தைச் சமிக்ஞை இல்லாத நிலையில் பொதுச் சேவைகளைப் பயன்படுத்துவோரிடம் இருந்து பெற்ற பின்னூட்டக் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு பொதுச் சேவைகளின் தரம் மற்றும் அவற்றை அணுகுதல் ஆகியவற்றை அத்தகைய மதிப்பீடுகள் மதிப்பாய்வு செய்ய வேண்டும்.

5.4 **சிறந்த நடைமுறைகள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களை ஊக்குவிக்கும் அதேவேளை கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்க்ள மற்றும் கருத்திட்டங்களில் ஏற்படும் தவறுகளையும் எதிர்மறையான தாக்கங்களையும் குறைத்தல்.** நிகழ்ச்சித்திட்டங்கள் கருத்திட்டங்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பான மதிப்பீடு அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு கற்றுக்கொண்ட பாடங்களை பரப்புவதை தேசிய மதிப்பீட்டுக் கொள்கை ஊக்குவிக்கும். இதனைச் செய்வதன் மூலமாக தேசிய மதிப்பீட்டுக் கொள்கை சரியாக திருத்தப்படவேண்டிய கொள்கை வழிகாட்டுதல்களை விடுப்பதற்கான நம்பகமானதும் பயனுள்ளதுமான தகவல்களை கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கு தேசிய மதிப்பீட்டுக்கொள்கை வழங்கும். அத்தோடு கட்டுப்படியாகக்கூடிய உயர் தாக்கம் கொண்ட சாத்தியமான திட்டங்களுக்கு முன்னுரிமையளிப்பதற்கு திட்டமிடுபவர்களுக்கு உதவுவதற்கும் அவற்றை வினைத்திறனுடன் கூடியவகையில் செயலூக்கத்துடன் நடைமுறைப்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டங்க்ள் மற்றும் முகாமையாளர்களை ஊக்கப்படுத்தும். அந்தவகையில் மதிப்பீட்டு செயன்முறை மற்றும் கண்டறிதல்களில் இந்த பங்குதாரர்களின் உகந்த ஈடுபாடும் உரிமையெடுத்துக்கொள்ளலும் மிகமுக்கியமாகும்.

5.5 **நாட்டில் ஒரு அபிவிருத்திக் கலாசாரத்தை உருவாக்குதல்.** விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் சலுகையளிப்புக்கள் ஆகியவை இணைந்ததாக கேள்வியை தோற்றுவிப்பதன் மூலமாக பொதுமக்கள் மத்தியில் வேரூன்றியிருப்பதான மதிப்பீட்டு கலாசாரத்தை ஊக்குவிப்பதனை தேசிய மதிப்பீட்டுக்கொள்கை நோக்காகக் கொண்டுள்ளது. இடையீட்டு வெளிப்பாடுகள் மற்றும் சரியான திருத்தக் கொள்கைகளை முன்னெடுப்பதில் கற்றுக்கொண்ட பாடங்களை ஒருங்கிணைத்தல் கொள்கை இடையீடுகளுக்கு முன்னுரிமையளித்தல் மற்றும் கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் உருவாக்குதல் ஆகியவை தொடர்பாக வேண்டுமென்றே அவதானிக்கப்பட்ட சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டுக் கலாசாரத்தை நாடுகின்றது. இந்த வகையில் மதிப்பீட்டை ஒரு முகாமைத்துவ சாதனமாகவும் தவறுகளைக் கண்டுபிடிக்கின்ற செயற்பாடாக அன்றி தவறுகளைச் சகித்துக்கொண்டு அவற்றில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள்கின்ற பொறிமுறையாகவும் தேசிய மதிப்பீட்டுக் கொள்கை அங்கீகரிக்கின்றது. மதிப்பீட்டு கலாசாரத்தை ஊக்குவிப்பதற்காக சிரேஸ்ட முகாமைத்துவத்தின் தலைமைத்துவ திறனை தேசிய மதிப்பீட்டு கொள்கை இனங்கண்டு ஊக்குவிக்கும். அத்தோடு நிறுவன ரீதியான ஒத்துழைப்புக்கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதன் மூலம் மதிப்பீட்டுக் கலாசாரத்தை ஊக்குவிக்கும்.

## 6. பயன்பாட்டுத்தன்மையும் நோக்கமும்

தேசிய மதிப்பீட்டுக் கொள்கையானது இலங்கையின் எல்லா தேசிய மாகாண உள்ளூராட்சி மட்டங்களில் அமல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உள்ளடக்குகின்றது. இதற்கு மேலதிகமாக பொதுக் கருத்திட்டங்கள் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான பொது நிறுவனங்களை மதிப்பீடு செய்வது தொடர்பிலும் தேசிய மதிப்பீட்டுக் கொள்கை அவதானம் செலுத்தும். நன்கொடை வழங்குநர்களால் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களைப் பொறுத்தவரையில் நிதி வழங்குநரால் விதந்துரைக்கப்பட்ட மதிப்பீட்டு வழிகாட்டுதல்களானவை மதிப்பீடு மீதான தேசிய வழிகாட்டுதல்களின் வழியில் பிரயோகிக்கப்படக்கூடியது. மேற்குறிப்பிட்ட பொதுவான கோட்பாடுகளைப் பகிர்ந்துகொள்ளும் அதேவேளை பொதுக் கொள்கைகள் பொது நிறுவனங்களை மதிப்பீடு செய்வதற்கும் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கும் இடையிலான முக்கியமான வேறுபாடுகளை பிறிதாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டியுள்ளது.

*படம் 4 : தேசிய மதிப்பீட்டுக் கொள்கையின் தழுவு அளவும் பொருந்துதலும்*

| மதிப்பீட்டு ஒழுங்குமுறைகள் | பொதுக் கொள்கைகள் மற்றும் நிறுவனங்கள் | நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் |
|---|---|---|
| முறை | தேசிய அபிவிருத்தி திட்டம், துறை, கொள்கைகள், MfDR மற்றும் ஞனுபுள | தூர நோக்கு / துறைசார் கொள்கை /PIP/ NPD வழிகாட்டிகள் மற்றும் பெறுபேற்று சட்டகம் |
| பொறுப்பு | கொள்கை உருவாக்கம், நிதியிடல், அமுலாக்கல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிறுவனங்கள் | திட்டமிடல், நிதியிடல், அமுலாக்கல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிறுவனங்கள் |
| உள்ளடக்கம் | கொள்கை மற்றும் பிரஜைகளால் உள்ளடக்கப்பட்ட பொது மற்றும் தனியார் சேவை வழங்குனர்கள் | நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள், பங்குதாரர்கள் மற்றும் பயனாளிகள் |
| நிகழ்ச்சித்திட்டமிடல் மற்றும் நிதியிடல | தேசிய மதிப்பீட்டுத்திட்டம்/ மதிப்பீட்டுத் தொழிற்பாட்டுக்கான குவிய மையம் | மொத்த மதிப்பீட்டுத் தொகையிலும் மற்றும் வருடாந்த பாதீட்டிலும் / தேசிய மதிப்பீட்டுத்திட்டத்திலும் உள்ளடக்கியுள்ளது |
| வகை | முற்கூட்டிய இலக்கு மதிப்பீடு/பின் மதிப்பீடு | மதிப்பீடு, இடைக்கால மீளாய்வு மற்றும் முன் மதிப்பீடு |

தேசிய மற்றும் உப தேசிய மட்டம், உரிய நிரல் அமைச்சுக்கள் மற்றும் அமுலாக்க முகவர்கள்

6.1 **பொதுக் கொள்கைகள் மற்றும் நிறுவனங்களை மதிப்பீடு செய்தல்.** பொதுக்கொள்கைகள் மற்றும் நிறுவனங்கள் மீதான மதிப்பீடுகள் பல்வேறு விடயங்கள் சார்ந்ததாக அன்றேல் குறித்த துறை சார்ந்ததாக இருக்க முடியும். கொள்கை மதிப்பீட்டின் நோக்கம் மாறக்கூடும் ஆனபோதிலும் விநியோகம் மற்றும் கேள்வி ஆகிய இரண்டு பக்கங்களையும் பார்த்துக்கொள்ளக்கூடியதாக மிகப்பெரியதும் வளங்கள் செறிந்ததுமான பொது அன்றேல் தனியார் சேவை வழங்குநர்களாக (உதாரணமாக சுகாதாரம் அன்றேல் கல்வி) இருப்பதும் அனைத்து பங்குதாரர்களும் அதன் நோக்கங்களுக்கு பங்களிக்கக்கூடியதாக இருக்கின்றது. தொடர்புபட்டதன்மை வினைத்திறன் தாக்கத்திறன் மற்றும் நிலைபேறானதன்மை ஆகிய பரிணாமங்களை மதிப்பீடு என்பது கவனத்திற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- பொருத்தப்பாடு என்பது நாட்டின் தூரநோக்குப்பார்வை, தேசிய அபிவிருத்தி திட்டம், சர்வதேச உடன்படிக்கைகள், துறைசார் மூலோபாயம் அன்றேல் வரவுசெலவுத்திட்ட உரை ஆகியவற்றில் வலியுறுத்தப்பட்ட தேசிய அன்றேல் துறைசார் சமூக- பொருளாதார அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு எதிராக மதிப்பாய்வு செய்தலாகும்.

> ***"தேசிய மதிப்பீட்டுக் கொள்கையானது இலங்கையின் எல்லா தேசிய மாகாண உள்ளூராட்சி மட்டங்களில் அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உள்ளடக்குகின்றது. பொதுக் கொள்கைகள் மற்றும் நிறுவனங்களை மதிப்பீடு செய்தல். பொதுக்கொள்கைகள் மற்றும் நிறுவனங்கள் மீதான மதிப்பீடுகள் பல்வேறு விடயங்கள் சார்ந்ததாக அன்றேல் குறித்த துறை சார்ந்ததாக இருக்க முடியும். கொள்கை மதிப்பீட்டின் நோக்கம் மாறக்கூடும் ஆனபோதிலும் விநியோகம் மற்றும் கேள்வி ஆகிய இரண்டு பக்கங்களையும் பார்த்துக்கொள்ளக்கூடியதாக மிகப்பெரியதும் வளங்கள் செறிந்ததுமான பொது அன்றேல் தனியார் சேவை வழங்குநர்களாக (உதாரணமாக சுகாதாரம் அன்றேல் கல்வி) இருப்பதும் அனைத்து பங்குதாரர்களும் அதன் நோக்கங்களுக்கு பங்களிக்கக்கூடியதாக இருக்கின்றது"***

- குறிப்பாக அது கொள்கையின் நோக்கங்கள் அதன் குறிகாட்டிகள் அதன் உள்வாங்கும்தன்மை உத்தேச இடையீட்டுக்கான தர்க்கம் மற்றும் நடைமுறைக்கிடல் ஏற்பாடுகள் ஆகிவற்றுடனான பொருத்தப்பாட்டைக் கொண்டுள்ளது.

- வினைத்திறன் என்பது கொள்கையொன்றின் எதிர்பார்க்கப்படும் முடிவுகளோடு வழிகளை ஒப்பிட்டு மதிப்பாய்வு செய்வதன் மூலம் மிகவும் செலவு தீர்வை அடையாளம் காணுதல், அவ்வகையில் இதற்கு வரவுசெலவுத்திட்ட தாக்க மதிப்பீடு தேவைப்படலாம். பொதுமக்களையும் தனியார் துறையினரையும் நேரடியாக பாதிக்கும் கொள்கைகளுக்கு எதிர்பார்க்கப்படும் இணக்கச் செலவுகளை மதிப்பீடு செய்ய பரிந்துரைக்கப்படுவதுடன் விரும்பத்தெரிவு மற்றும் வினைத்திறன் பகுப்பாய்வில் இதனை கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். இது குறிக்கோள்களுக்கு ஏற்றவகையில் வழிகள் இருப்பதை உறுதிப்படுத்துகின்றது. பொருத்தப்பாடு மற்றும் வினைத்திறன் ஆகியன சான்றுகளின் அடிப்படையிலும் எதிர்வுகூறலின் அடிப்படையிலும் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

- கொள்கை செயற்திறன் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகையிலும் மீண்டும் அதன் நிறைவிலும் மதிப்பீடு செய்யப்படுகின்றது. திட்டமொன்று எந்தளவில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்துகொண்டிருக்கின்றதா, எவ்வேகத்தில், எவ்வளவு செலவீனத்தில் (நிதி மனித வளம் நிர்வாகம் அன்றேல் இணக்கம்) முன்னெடுக்கப்படுகின்றது. இதன் போது ஏதேனும் எதிர்பார்க்கப்படாத விளைவுகள் (சாதக அன்றேல் பாதக வெளிப்புறங்களால்) ஏற்பட்டுள்ளனவா என்பதை தீர்மானிப்பதற்காகும். இத்தகைய மதிப்பீடு பங்குதாரர்கள் மற்றும் பயனாளர்களின் பின்னூட்டலையும் உள்ளடக்குவதுடன் அவசியப்படும் போது சரியான திருத்தநவடிக்கையை அறியத்தரமுடியும்.

- ஒரு கொள்கையின் நிலைபேறானதன்மை என்பது நிதிநிலை நிறுவனம் மற்றும் சுற்றாடல்/ காலநிலை முன்னோக்கிலிருந்து சான்றுகளின் அடிப்படையிலும் எதிர்வுகூறலின் அடிப்படையிலும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றது.

- தாக்க மதிப்பீடு என்பது சான்றுகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இது அதிகமாக வளங்களை சார்ந்ததாகவுள்ளது. உண்மையாக நடைபெறாத ஒருவிடயத்தை எழுந்தமானமாக எடுப்பதை அவர்கள் நோக்காகக் கொண்டுள்ளதுடன் அதனை அவர்கள் கொள்கை/ திட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலுமான ஒரு சூழ்நிலையுடன் ஒப்பிட்டுப்பார்ப்பார்கள்.

- அமைச்சுக்கள் மற்றும் முகவரமைப்புக்களால் தயாரிக்கப்படும் வருடாந்த செயல்திட்டங்களும் அறிக்கைகளும் நிதிநிலை விதிமுறைகளுக்கு அமைவாக இருக்கின்றனவா என்பதை நிறுவனங்கள் மீதான மதிப்பீடுகள் கவனத்திற்குட்படுத்தும். அரசிற்கு சொந்தமான நிறுவனங்கள் மீதான மதிப்பீடு நிறுவனத்தின் நோக்கம் அவற்றின் ஆண்டு அறிக்கைகள் மற்றும் நிதிநிலைக்கூற்றுக்களை கவனத்திற்குட்படுத்தும்.

**6.2 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல்.** நிலைபேறான சமூக-பொருளாதார அபிவிருத்தியை வளர்த்தெடுப்பதற்கான முக்கியமான பொருளாதார கொள்கைக் கருவியாக பொது முதலீடுகள் அமைந்துள்ளன. இருந்த போதிலும் நடைமுறைப்படுத்தலில் ஏற்படும் முக்கியமான தாமதங்கள் வினைத்திறனில் காணப்படும் இடைவெளிகள் ஆகியவற்றைச் சான்றாக வைத்துப்பார்க்கின்ற போது பொது முதலீடுகளினால் ஏற்படும் தாக்கம் மற்றும் அவற்றின் வினைத்திறன் ஆகியன உயர்தராதரத்திலும் பார்க்க சற்றே குறைவாகவே உள்ளன. உயரிய சமூக-பொருளாதார தாக்கம் மூலோபாய பொருத்தப்பாடு என்பவற்றை கொண்டுள்ளதுடன் பொருளாதார ரீதியாகவும் நிதியியல் ரீதியாகவும் நிலைபேறான தன்மையுடையதாகவும் கட்டுப்படியாகக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் கருத்திட்டங்களுக்கும் முன்னுரிமையளிப்பதை தெரியப்படுத்தும் பொது முதலீடுகள் திட்டங்கள் தொடர்பான இன்னமும் கடுமையான சான்றுகளின் அடிப்படையிலானதும் எதிர்வுகூறலின் அடிப்படையிலானதுமான மதிப்பீடுகள் பொது முதலீடுகள் தொடர்பான ஒதுக்கீட்டு மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை அதிகரிப்பதற்கு துணைபுரியும். நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் மதிப்பீடானது பொருத்தப்பாடு, வினைத்திறன், செயற்பாடு, தாக்கம் மற்றும் நிலைபேறானதன்மையை போன்ற அதே பரிமாணங்களை உள்ளடக்கியிருக்கும்.

திட்டமிடலுக்குப் பொறுப்பான திணைக்களத்தால் விடுக்கப்படும் குறிப்பிடத்தக்க வழிகாட்டுதல்கள் மற்றும் வரம்புவிதிமுறைகள் ஆகியவற்றுக்கு அமைவாக நிகழ்சித்திட்ட மற்றும் கருத்திட்ட மதிப்பீடுகள் திட்டக் காலப்பகுதியை உள்ளடக்கியிருக்கும். எதிர்வுகூறலை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகள் அவசியமான சாத்தியவள கற்கைள் உட்பட திட்ட மதிப்பாய்வுகள் இதில் இடம்பெறும். மதிப்பீடுகள் முறையே கருப்பொருள் மற்றும் துறைசார் உத்திகள் பொது முதலீட்டு திட்டம் அதேபோன்று ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் திட்டங்களை இலக்காகக்கொண்ட அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் பெறுபேறுகளின் கட்டமைப்புக்களைக் கவனத்திலெடுக்கும். எதிர்வுகூறலை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகளும் மதிப்பாய்வுகளும் அந்தவகையில் விசேடமாக அளவிடக்கூடியதான பொருத்தமான காலக்கிரமத்திற்குரிய குறிகாட்டிகளை அடிமட்ட மற்றும் தகவல் மூலங்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் வகையில் வலுவான பெறுபேற்று கட்டமைப்பைக் கொண்டதாக இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும். உரு 5ல் குறிப்பிடப்பட்ட அம்சங்களை கருத்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்ட மதிப்பாய்வுகள் உள்ளடக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

*படம் 5 : கருத்திட்ட கணிப்பீட்டு அறிக்கையின் கூறுகள்*




எதிர்வுகூறலை அடிப்படையாகக் கொண்ட மதிப்பாய்வுகளில் அடிப்படையான நிறைவு ஆய்வினை நடத்துவதற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கு அமைவாக உரிய நேரத்தில் நிதிஒதுக்கீட்டிற்கு

இணங்க திட்டமானது முடித்துத்தரப்பட்டதாக என்பதை மதிப்பிடுவதற்கான சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டை மேற்கொள்வதற்கும் தேவையான வழிகாட்டுதல்களை தேசிய மதிப்பீட்டுக்கொள்கை வழங்கும். ஏற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்து காலஅளவோ நிதியளவோ அன்றேல் வடிவமைப்போ பெரும் மாற்றத்திற்கு உட்பட்டிருப்பின் அவை

இனங்காணப்படுவதுடன் அதற்கான காரணங்களும் விளக்கப்படவேண்டும். ஏற்படக்கூடிய அபாயங்களின் பரிமாணமானது முன்கூட்டியே அனுமானிக்கக்கூடியதாக இருக்கும் நிலையில் அபாயங்களை முகாமைத்துவம் செய்கின்ற திட்டங்களும் அவற்றைக் குறைக்கும் போதுமான நடவடிக்கைகளும் கருத்திற்கொள்ளப்படவேண்டும். எதிர்காலத்தில் இதேபோன்றதான திட்டங்களை வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலில் ஏதேனும் முன்னேற்றகரமான படிப்பினைகள் இருக்குமானால் அவை இனங்காணப்பட்டு அந்தப்பரிந்துரைகள் எதிர்கால இடையீடுகளை வடிவமைக்கும் போது கருத்திற்கொள்ளப்படவேண்டும். புதிய அப்பரிந்துரைகள் திட்டமிடும் போது கற்றுக்கொண்ட பாடங்களின் உள்ளீடுகளை உள்வாங்கிக்கொள்வதை உறுதிப்படுத்துகின்ற நிறுவன ரீதியான ஏற்பாடுகளை தேசிய மதிப்பீட்டுக்கொள்கை நிறுவும்.

வெளிநாடுகளில் இருந்து நிதியளிக்கப்படும் கருத்திட்டங்கள் அதனோடு தொடர்புபட்ட அபிவிருத்திப் பங்காளரின் மதிப்பீட்டுத் தேவைகள் மற்றும் முறைமைகளைக் கவனத்தில் கொள்ளும்

## 7. தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது அனைத்து விடயம் சார்ந்த அமைச்சுக்கள் மாகாண சபைகள் உள்ளூராட்சி சபைகள் மற்றும் ஏனைய பொது நிறுவனங்கள் அவற்றின் சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புக்களுக்கு அமைவான கடமைகளும் பொறுப்புக்களுமாகும். ஒரு தேசிய மதிப்பீட்டுத் திட்டம் (இது ஆண்டு தோறும் புதுப்பிக்கப்படும் மூன்றாண்டு காலத்திற்கு முன்நகரும் திட்டமாகும்) வழிகாட்டுதல்களில் நிறுவப்படும் முன்னுரிமைக் கொள்கையின் அடிப்படையில் வடிவமைக்கப்படும்.

### 7.1 நிறுவன ஒழுங்குபடுத்துகையும் பொறுப்புக்களும்

7.1.1 தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் தேசிய குவிய மையமாக கருத்திட்ட முகாமைத்தும் மற்றும் கண்காணிப்பு திணைக்களம் (DPMM) செயற்படும். இத்திணைக்களமானது உரிய விடயப்பொறுப்பு அமைச்சின் ஊடாக:

அ. தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டங்களில் தேசிய மதிப்பீட்டுக்கொள்கையை அமல்படுத்துவதற்கான தலைமைத்துவத்தையும், வழிகாட்டுதல்களையும் வழங்குவதுடன் ஆதரவையும் அளிக்கும்.

ஆ. தொழில்சார் ரீதியான மதிப்பீட்டுக்காக சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களினதும் திட்டமிடல் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தலுடன் தொடர்புடைய இயலுமையைக் கட்டியெழுப்புதலுக்கு வழிவகைசெய்தல்.

இ. மதிப்பீட்டின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக நெறிமுறைகள் நியமங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை அமைத்துக்கொள்ளுதல்.

ஈ. நிரல் அமைச்சுக்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து தேசிய மதிப்பீட்டுக் கொள்கையின் நடைமுறைப்படுத்தலை மீளாய்வு செய்தல்.

உ. மதிப்பீடுகளில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் பரிந்துரைகளை தீர்மானம் மேற்கொள்ளுதல் மற்றும் கொள்கை உருவாக்கலில் பயன்படுத்தப்படுவதை ஊக்குவித்தல்.

ஊ. மதிப்பீடுகளிலிருந்து கண்டறியப்பட்ட முக்கிய விடயங்களை அமைச்சரவைக்கு அறிக்கையிடுவதனூடாக தகவலுடன் கூடிய தீர்மானம் மேற்கொள்ளலுக்கு வழிவகைசெய்தல்.

7.1.2 தேசிய மதிப்பிட்டுக் கட்டமைப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு தேசிய மதிப்பீட்டுக் கொள்கையின் சுமூகமான நடைமுறைப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு வழிகாட்டுவதற்காகவும் வழிவகை செய்வதற்காகவும் ஒரு வகிபாகத்தை வகிப்பதற்காகவும் தேசிய மட்டத்திலும் உப தேசிய மட்டங்களிலும் திட்டமிடல், நிதிவழங்கல் மற்றும் நடைமுறைப்படுத்தலில் தொடர்புடைய முகவர் அமைப்புக்களின் கூட்டுப் பங்களிப்புடன் தேசிய மதிப்பீட்டு வழிகாட்டல் குழுவொன்று (NESC); நிறுவப்படும்

*படம் 6 : தே.ம.கொ. அமுலாக்க ஏற்பாடு*



அத்தியாயம் 2

# தேசிய மதிப்பீட்டு கொள்கையை அமல்படுத்துவதற்கான நிறுவன கட்டமைப்பு

# தேசிய மதிப்பீட்டு கொள்கையை அமல்படுத்துவதற்கான நிறுவன கட்டமைப்பு

இலங்கை தேசிய மதிப்பீட்டு கொள்கையின், கொள்கை அறிக்கை 4.2 இன் படி, NEP ஐ அமல்படுத்துவதற்கான நிறுவன கட்டமைப்பினை அரசாங்கத்தின் தற்போதைய நிறுவன கட்டமைப்புக்குள் இனங்காண வேண்டியுள்ளது. பின்வருவனவற்றை அடைந்துகொள்வதற்காக முன்மொழியப்பட்ட நிறுவன ஏற்பாட்டின் கீழே நன்கு வரையறுக்கப்பட்டுள்ளது:

i. மதிப்பீட்டு தகவல் கிடைப்பதை உறுதி செய்தல்:

ii. மதிப்பீட்டு தகவல்களின் அடிப்படையில் பொருத்தமான தீர்மானங்களை எடுத்தல்

iii. மதிப்பீட்டு முடிவுகளை பரிந்துரைகளுடன் வெளிப்படுத்துதல் மற்றும் பரப்புதல்

iv. திட்டமிடல் செயற்பாடுகளுக்கு மதிப்பீட்டு பாடங்களை பயன்படுத்துதல்

v. முகாமைத்துவ பின்னூட்டங்களை பின்தொடர்தல்.

நிறுவன கட்டமைப்பானது, பங்குதாரர்களின் பாத்திரங்கள், பொறுப்புக்கள் மற்றும் பணியின் நோக்கம் என்பவற்றை இனங்காண்பதற்கும் மற்றும் கீழ் மட்ட அமல்படுத்தலிருந்து உயர் மட்ட கொள்கை மற்றும் தீர்மானமெடுத்தல் வரையில் தேசிய மதிப்பீட்டு கொள்கையை வினைத்திறன் மற்றும் சுமூகமான முறையில் அமல்படுத்துவதற்காக கீழே தரப்பட்டுள்ள உதவிகளை விபரிக்கின்றது.

1. **மாவட்ட நிர்வாகம், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள்** பொருத்தமான மதிப்பீடுகளை இனங்காணுதல் மற்றும் முன்மொழிவுகளை உரிய செயற்படுத்தும் முகவர்களிடம் (மாகாண சபைகள் மற்றும் நிரல் அமைச்சுக்கள்) சமர்ப்பித்தல் என்பவற்றினூடாக தேசிய மதிப்பீட்டுக் கொள்கையின் நடைமுறைப்படுத்தலை ஆரம்பித்தல். NEPஇல் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கமைய, மதிப்பீட்டு செய்ற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் இந்நிறுவனத்தின் தற்போதைய கட்டமைப்பு வலுப்படுத்தப்படும். மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான அவற்றின் திறன் நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளின் ஆலோசனைகளுடன் தொடர்ச்சியாக கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் மேம்படுத்தப்படும்.

2. **நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகள்** ஆகியவையே மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் மதிப்பீட்டு முடிவுகள் மற்றும் பரிந்துரைகளை தமது திட்டமிடல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்துதல் ஊடாக தேசிய மதிப்பீட்டு கொள்கையை அமல்படுத்துதலின் முன்னோடிகளாக காணப்படுகின்றன. தற்போது காணப்படுகின்ற நிறுவன கட்டமைப்புக்களில் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான வலுமிக்க அலகுகளை அல்லது பிரிவுகளை நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளே அடையாளம் காணும். மேலும், திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பற்றிய நிறுவன நினைவகம் என்பன முக்கியமான வெற்றிக் காரணிகளாக இருப்பதால் பின்வரும் செயற்பாடுகளை வழங்குவதற்காக நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளின் தற்போதைய திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவுகள்/ அலகுகள் பலப்படுத்தப்படும்.

**நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளின் தொழிற்பாடுகள் :**

i. அரச துறை நிறுவனங்களின் திறனை மேம்படுத்தல் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு செயற்பாட்டினை முக்கியப்படுத்தல் என்பவற்றிற்காக தமக்கு கீழ் இயங்கும் நிறுவனங்களுடன் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் தொடர்பாடல் மற்றும் ஒருங்கிணைத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

ii. அவற்றின் கீழ் இயங்கும் திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களிடமிருந்து அடுத்த நிதியாண்டிற்கான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான முன்மொழிவுகளுக்கான அழைப்புவிடுத்தல்.

iii. பொருத்தமான முன்மொழிவுகளை தெரிவுசெய்தல் (தெரிவு அளவுகோல்களின் அடிப்படையில் தெரிவு செய்தல் - இணைப்பு -I) மற்றும் தெரிவு செய்த முன்மொழிவுகளை DPMMக்கு சமர்ப்பித்தல் (அவற்றை மதிப்பீடு செய்தல் மற்றும் அனுமதியளித்தல் செயற்பாட்டிற்காக மற்றும் தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு குழுவிற்கு சமர்ப்பித்தல்).

iv. உத்தியோகத்தர்களின் மதிப்பீட்டு திறனை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவியை பெற்றுக்கொள்ளுதல், மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல், தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்தல் மற்றும் மதிப்பீட்டு முடிவுகளை பகிரங்கப்படுத்தல் போன்றவற்றுக்காக DPMM உடன் இணைந்து செயற்படல்.

v. தீர்மானமெடுத்தல் மற்றும் திட்டமிடலில் மதிப்பீட்டு முடிவுகளை பயன்படுத்துவதை உறுதிபடுத்தல்.

3. **தேசிய பாதீட்டு திணைக்களம் (DNB) தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு** குழுவின் நிரந்தர அங்கத்தவர் என்ற வகையில் தேசிய மதிப்பீட்டு திட்டத்தினை அமல்படுத்துவதற்கு சாத்தியக்கூறு வாய்ந்த நிதி ஒதுக்கீட்டினை உறுதிப்படுத்தல் அல்லது சாத்தியக்கூறு வாய்ந்த மூலாதாரங்களை இணங்காணுதல்

என்பவற்றின் மூலம் கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு தேசிய மதிப்பீட்டு திட்டத்தினை முடிவுறுத்துவதற்கு உதவி புரிதல். மேலும்,மதிப்பீட்டினை நிறுவனமயப்படுத்துதலை உறுதி செய்வதற்காக DNB ஆனது உரிய மதிப்பீட்டு முடிவுகளை கவனத்திற்கொண்டு அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பாக முடிவு செய்தல் மற்றும் தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட மதிப்பீட்டு முன்மொழிவுகளுக்கு நிதி ஒதுக்கீட்டினை வழங்குதல்.

4. **தேசிய திட்டமிடல் திணைக்களம் (NPD) தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு குழுவின் நிரந்தர அங்கத்தவர் என்ற வகையில்** மதிப்பீட்டு முடிவுகளை தேசிய மற்றும் துறைசார் திட்டமிடலுக்கு பயன்படுத்திக்கொள்வதனை உறுதிப்படுத்தும் பொருட்டு கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்துடன் இணைந்து செயலாற்றல். மேலும், மதிப்பீட்டினை நிறுவனமயப்படுத்துதலை உறுதி செய்வதற்காகNPD ஆனது DPMM இற்கு தேசிய மதிப்பீட்டு திட்டத்தினை (ஆண்டு/அரையாண்டு கால) முடிவுறுத்துவதற்கு தேவையான தொழில்நுட்பம் உதவிகளை வழங்குதல் மற்றும் மதிப்பீட்டு திறனை விருத்தி செய்வதற்கான தந்திரோபாயங்களை இனங்காணுதல்.

5. **கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது** தேசிய மதிப்பீட்டு கொள்கையினை அமல்படுத்துவதற்காக பின்வரும் பாத்திரங்களை ஏற்கின்றது.

i. தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு குழுவின் நிரந்தர அங்கத்தவர் (பதவி வழி)

ii. தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு குழு செயலகம் மற்றும்

iii. அரச துறையில் மதிப்பீட்டினை நிறுவனமயமாக்குவதற்கான தேசிய மையம்.

**கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்:**

i. தொழில்நுட்ப உதவியை வழங்கும் தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு குழுவின் செயலகமாக செயற்படல்

ii. அமல்படுத்தும் முகவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற மதிப்பீட்டு முன்மொழிவுகளை மதிப்பிடுதல், தெரிவு செய்தல் மற்றும் உரிய அமல்படுத்தும் முகவர், திறைசேரியின் உரிய திணைக்களங்கள் மற்றும் ஏனைய முகவர்களின் ஆலோசனைகளுடன் தேசிய மதிப்பீட்டு திட்டங்களை தயாரித்தல்.

iii. தேசிய மதிப்பீட்டு திட்டத்தினை அமல்படுத்துவதற்காக தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு குழுவின் அனுமதியை பெறல்.

iv. தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு குழுவின் தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட பின்தொடர் செயற்பாடுகள் அமல்படுத்தப்படுதலினை கண்காணித்தல்.

v. தேசிய மதிப்பீட்டு திட்டத்தினை செயல்படுத்துவது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல், எளிதாக்குதல் மற்றும் வழிகாட்டுதல்.

vi. மதிப்பீட்டின் தரத்தை உறுதிப்படுத்துவற்காக நெறிமுறைகள், நியமங்கள் மற்றும் வழிமுறைகளை விருத்தி செய்தல் புதுப்பித்தல் மற்றும் மதிப்பீட்டு செயற்பாட்டிற்கு பயன்படுத்திக்கொள்வதற்கான புதுப்பிக்கப்பட்ட கருவிகள் மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் வார்ப்புக்களை வழங்குதல்

vii. குறிப்பாக அரச துறைக்கு மதிப்பீடுகளை முன்னெடுப்பதற்கு தேவையான முன்னணிகள், வழிகாட்டல்கள் மற்றும் தொடர்ச்சியான திறன் அபிவிருத்தி நடவடிக்கைகளை வழங்ககுதல்

viii. அரச துறை நிறுவனங்கள் மதிப்பீடுகளை முன்னெடுப்பதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

ix. வெளியக மதிப்பீட்டாளர்களுடன் இணைந்து தெரிவுசெய்யப்பட்ட மதிப்பீடுகளை முன்னெடுத்தல்

x. நடைபெற்றுக்கொண்டிருக்கும் மதிப்பீடுகளை கண்காணித்தல் மற்றும் அறிக்கைகளை தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு குழுவிற்கு சமர்ப்பித்தல்.

xi. பரிந்துரைகள் மற்றும் அனுமதிகளை வெளியிடுவதற்காக மதிப்பீட்டு முடிவுகளை வருடாந்த அடிப்படையில் தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு குழுவிற்கு அறிக்கையிடுதல்

xii. தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட மதிப்பீட்டு தகவல்களை பரப்புவதற்காக மதிப்பிடல் தகவல் முறைமையை பேணுதல்.

xiii. திட்டமிடுதல் மற்றும் தீர்மானம் எடுத்தலில் மதிப்பீட்டு முடிவுகளின் பயன்பாட்டை மதிப்பிடுதல் மற்றும் தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு குழுவிற்கு அறிக்கையிடுதல்.

xiv. தேசிய மதிப்பீட்டு கொள்கையினை மீளாய்வு செய்தல் மற்றும் மேம்படுத்துதல்.

**6. நிதி சம்பந்தமான விடங்களுக்கு பொறுப்பான அமைச்சு** தேசிய வழிநடத்தல் மதிப்பீட்டு குழுவிற்கு பிரதானியாக இருப்பதுடன் நேரடியாக (தேவையேற்படும் போது) அமைச்சரவைக்கு பதிலளிக்கும். மேலும், மதிப்பீட்டுடன் தொடர்புடைய பின்வரும் விடயங்கள் நிதி அமைச்சினால் மேற்கொள்ளப்படும்.

i. மதிப்பீட்டின் தரத்தினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக வழிகாட்டல்கள், நெறிமுறைகள் மற்றும் நியமங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்

ii. பின்வருவனவற்றுக்காக அமைச்சரவையின் அனுமதிகளை கோருதல் : (i) தேசிய மதிப்பீட்டுத் திட்டம் (ii) மதிப்பீட்டு முடிவுகள், பரிந்துரைகள் மற்றும் கற்றுக்கொண்டவைகள் என்பனவற்றை பரப்புவதற்கு தேசிய மதிப்பீட்டு வழிநடத்தல் குழு அமைச்சரவையின் அனுமதிகளை பெற்றுக்கொள்ளப் பரிந்துரைக்கும் பட்சத்தில் ;

iii. தேசிய மதிப்பீட்டு வழிநடத்தல் குழு செயலகம் என்ற வகையில் DPMM ஊடாக தேசிய மதிப்பீட்டு வழிநடத்தல் குழுவின் கீழ் அனைத்து தொழிற்பாடுகளையும் ஒழுங்குபடுத்துதல்.

**7. தேசிய மதிப்பீட்டு வழிநடத்தல் குழுவிற்கு நிதி அமைச்சு செயலாளர் தலைமைத்துவம் வகிப்பதுடன் இக்குழுவின் உள்ளடக்கமானது:**

i. தேசிய திட்டமிடல் வெளிநாட்டு வளங்கள், தேசிய வரவு செலவுத் திட்டம், பொது நிறுவனங்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்கள தலைவர்கள் (நிரந்தர அங்கத்தவர்)

ii. செயலாளர், நிதி ஆணைக்குழு (நிரந்தர அங்கத்தவர்)

iii. மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாவட்ட நிர்வாகம் என்பவற்றுக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர் (நிரந்தர அங்கத்தவர்)

iv. ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் செயலகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஸ்ட உத்தியோகத்தர் (நிரந்தர அங்கத்தவர்)

v. நிரல் அமைச்சுக்களின் செயலாளர் (அழைப்பினால்)

vi. தேசிய கணக்காய்வு அலுவலகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஸ்ட உத்தியோகத்தர் (அவதானிப்பாளர்)

- தேசிய மதிப்பீட்டு வழிநடத்தல் குழுவினால் ஒழுங்குபடுத்தப்படும் கூட்ட நிகழ்ச்சி நிரல்களுக்கேற்ப கலந்துரையாடல்களில் பங்களிப்பு செய்வதற்கு பொருத்தமான பங்குபற்றல் அழைப்புக்களின் அடிப்படையில் ஏனைய உரிய திணைக்களங்கள், அரசுக்கு சொந்தமான கம்பனிகள், மாகாண சபைகள், மாவட்ட நிர்வாகம், உள்ளூராட்சி சபைகள்,ஏதாவது வேறு நிறுவனங்கள், தொழில் துறை அலகுகள் அல்லது நிறுவனங்கள் என்பனவும் தேசிய மதிப்பீட்டு வழிநடத்தல் குழுவின் அங்கத்தவர்களாக இருக்க முடியும்.

- தேசிய மதிப்பீட்டு வழிநடத்தல் குழுவின் செயலகமாக DPMM தொழிற்படும்.

**தேசிய மதிப்பீட்டு வழிநடத்தல் குழுவின் பிரதான தொழிற்பாடுகள் :**

i. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் உரிய அமல்படுத்தும் முகவர்களின் ஆலோசனைகளுடன் விருத்தி செய்யப்பட்ட தேசிய மதிப்பீட்டு திட்டத்தினை மதிப்பிடுதல் மற்றும் தேவையான திருந்தங்களுக்குரிய பரிந்துரைகளுடன் அனுமதியளித்தல்.

ii. தேசிய மதிப்பீட்டு திட்டத்தினை அமல்படுத்துவதன் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தல்.

iii. மதிப்பீட்டு முடிவுகளை மீளாய்வு செய்தல் மற்றும் தேவையான பரிந்துரைகளை வழங்குதல்.

iv. மதிப்பீடுகளின் முக்கியத்துவம் மற்றும் உணர்திறனை கவனத்திற்கொண்டு பொருத்தமான மதிப்பீட்டு முடிவுகளை பகிரங்கப்படுத்துவதற்கான தீர்மானங்களை எடுத்தல்.

v. மதிப்பீடுகளின் முகாமைத்துவ பின்னூட்டல்கள் மற்றும் மதிப்பீட்டு முடிவுகளின் அடிப்படையில் உரிய தரப்பினரால் மேற்கொள்ளப்படும் பின்னூட்டல் நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல்.

vi. பின்வருவன தொடர்பாக முறையான வழிகாட்டல்கள் மற்றும் உதவிகள் ஊடாக அரச துறையில் மதிப்பீட்டினை நிறுவனமயப்படுத்தல்: மதிப்பிட்டு திறனை விருத்தி செய்தல் (ECD); மதிப்பீடுகளின் முடிவுகளை திட்டமிடல் மற்றும் பாதீட்டிற்கு பயன்படுத்துதல் தீர்மானம் மேற்கொள்ளும் தரப்பினருக்கு மதிப்பீட்டு முடிவுகளை வினைதிறனான வகையில் தொடர்பாடல் செய்வதற்கான உபாயம்.

vii. மதிப்பிட்டு திறன் மற்றும் அரசாங்கத்தின் மதிப்பீட்டு நடைமுறை என்பவற்றை விருத்தி செய்தற்காக மதிப்பீட்டினை அமல்படுத்துவதற்கான வழிமுறைகள், கருவிகள் மற்றும் நியமங்களை அனுமதியளித்தல்.

viii. மதிப்பீட்டுடன் தொடர்புடைய எந்தவொரு திட்டம், நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தகவல்களை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு பரிந்துரை செய்தல். (தேவைகளின் அடிப்படையில்)

## அத்தியாயம் 3

# வருடாந்த மதிப்பீட்டு நிகழ்ச்சி நிரல்

# வருடாந்த மதிப்பீட்டு நிகழ்ச்சி நிரல்

இலங்கையின் தேசிய மதிப்பீட்டு கொள்கையின் குறிக்கோளானது நாட்டில் மதிப்பீட்டினை விருத்தி செய்வதற்கு திட்டமிடல், அமல்படுத்தல் மற்றும் கண்காணித்தல் போன்ற செயற்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் வலுப்படுத்தலினூடாக பல்வேறுபட்ட அபிவருத்தி முயற்சிகளின் மூலம் பொது மக்களுக்கு பெற்று கொடுக்கப்படும் நன்மைகளானது வினைதினான மற்றும் நிலைபேறான வகையில் அவர்களை சென்றடைவதினை உறுதிப்படுத்திக் கொள்தலாகும். எனவே மதிப்பீடானது ஒரு வழமையான நடைமுறையாக பங்குதாரர்களிடையே ஊக்குவிக்கப்படுவதுடன் வருடாந்த மதிப்பீட்டு நிகழ்ச்சி நிரலானது நாட்டின் அபிவிருத்தி செயற்பாட்டில் தீவிரமாக செயற்படும் அனைத்து பங்குதாரர்களுக்கும் வருடம் முழுவதும் தெரிவு செய்யப்பட்ட மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பமளிக்கின்றது.

வருடாந்த மதிப்பீட்டு நிகழ்ச்சி நிரலானது இலங்கை அரச துறையினால் எதிர்ப்பார்க்கப்படுகின்ற தொடர்ச்சியான மதிப்பீட்டு செயற்பாட்டினை விளக்குகின்றது.

| நிகழ்ச்சி நிரல் விபரம்# | பிரதான தொழிற்பாடுகள் | கால அளவு | பொறுப்புடைய தரப்பினர் |
|---|---|---|---|
| 1. ஆண்டு மதிப்பீட்டு முன்மொழிவுகளுக்கு அழைப்பு விடுத்தல் | நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளிலிருந்து அடுத்த நிதியாண்டுக்கான மதிப்பீட்டு முன்மொழிவுகளுக்கு (“மதிப்பீட்டு அழைப்பு”) அழைப்பு விடுத்தல்<br><br>[DPMM ஆனது நெறிமுறைகள், மாதிரிப்படிவங்கள், வார்ப்புருக்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் என்பவற்றை நேரடியாகவோ அல்லது மதிப்பீட்டு துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஊடாகவோ நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு (மற்றும் அவற்றின் கீழுள்ள நிறுவனங்களுக்கு) வழங்குவதன் மூலம் விரிவான முன்மொழிவுகளை உருவாக்குவதற்கு வசதியளிக்கின்றது.] | ஜனவரி (1ம் - 15ம் திகதி) | DPMM |
| 2. மதிப்பீட்டு முன்மொழிவுகளை DPMM க்கு சமர்ப்பித்தல் | i. உள்ளக அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளின் கீழுள்ள நிறுவனங்களின் மதிப்பீட்டு முன்மொழிவுகளை நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு சமர்ப்பித்தல். | (ஜனவரி 16 ம் திகதி - பெப்ரவரி 07 ம்திகதி) | நிரல் அமைச்சுக்கள், மாகாண சபைகள், நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளின் கீழுள்ள நிறுவனங்கள் |
| | ii. நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளில் தேர்தெடுக்கப்படுகின்ற முன்மொழிவுகள் நிரல் அமைச்சின் செயலாளரினாலும் மாகாண சபைகளின் பிரதம செயலாளரினாலும் அங்கீகரிக்கப்படும். | பெப்ரவரி (08 ம்திகதி - 15ம் திகதி) | நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகள் |
| | iii. தெரிவு செய்யப்பட்ட முன்மொழிவுகள் தேவையான ஆதார தகவல்களுடன் நிரல் அமைச்சுகள் மற்றும் மாகாண சபைகளினால் DPMM இற்கு சமர்ப்பிக்கப்படல். | பெப்ரவரி (16 - 20ம் திகதி) | நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகள் |
| 3. மதிப்பீட்டு முன்மொழிவுகளை மீளாய்வு செய்தல் மற்றும் தேசிய மதிப்பீட்டு வழிகாட்டல் குழுவிற்கு சமர்ப்பித்தல் | ii. நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் அனைத்து முன்மொழிவுகளினதும் உண்மைத்தன்மை, பொருத்தப்பாடு மற்றும் போதுமான தகவல்களை கொண்டிருக்கும் தன்மை என்பவை DPMM இனால் (NPD, NBD மற்றும் நிதி ஆணைக்குழு என்பவற்றுடன் ஆலோசனை செய்து) மீளாய்வு செய்யப்பட்டு மற்றும் தெரிவு செய்வதற்கான அளவுகோல்களுக்கமைய உரிய முன்மொழிவுகளை தெரிவு செய்தல்.<br><br>ii. முன்னிலைப்படுத்தப்பட்ட மதிப்பீட்டு முன்மொழிவுகள் மற்றும் தகுதியற்ற முன்மொழிவுகளின் பட்டியல்கள் DPMM இனால் NESC இற்கு சமர்ப்பிக்கப்படும். | பெப்ரவரி - மார்ச் (பெப் 21ம் - மார்ச் 10ம் திகதி) | DPMM |
| 4. NESC இனால் மதிப்பீட்டு முன்மொழிவுகள் மீளாய்வு செய்யப்பட்டு அனுமதியளிக்கப்படல் | i. சிறப்பு அளவுகோல்களின் அடிப்படையில் DPMM இனால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை NESC இனால் மதிப்பிடுதல் மற்றும் அடுத்த நிதியாண்டில் முன்னெடுப்பதற்கான மதிப்பிடுகளின் பட்டியல்களை பரிந்துரைத்தல். | மார்ச் 11ம் - 31ம் திகதி | NESC |

| நிகழ்ச்சி நிரல் விபரம்# | பிரதான தொழிற்பாடுகள் | கால அளவு | பொறுப்புடைய தரப்பினர் |
|---|---|---|---|
| 4. NESC இனால் மதிப்பீட்டு முன்மொழிவுகள் மீளாய்வு செய்யப்பட்டு அனுமதியளிக்கப்படல் | ii. NESCஇன் பரிந்துரைகளின் பின் தேவையேற்படின் அசல் முன்மொழிவுகளை மேம்படுத்துவதற்காக, திருத்தங்களை செய்வதற்காக அல்லது தீர்மானமெடுத்தலுக்கு மேலதிக தகவல்களை வழங்குவதற்காக (உரிய நிறுவனங்களுக்கு) கால அவகாசம் வழங்குதல்.<br>iii. தகுதிவாய்ந்த முன்மொழிவுகளுக்கு அனுமதி வழங்குதல் மற்றும் அனுமதியளிக்கப்பட்ட மதிப்பீட்டு பட்டியல்கள் மற்றும் தகுதி பெறாத முன்வொழிவுகளின் விபரங்கரங்களை உரிய முகவர் நிறுவனங்களுக்கு வழங்குதல். | மார்ச் 11ம் - 31ம் திகதி | NESC |
| 5. அங்கீகரிக்கப்பட்ட முன்ொழிவுகளுக்கான பாதீடு | i. உரிய பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களினால் அடுத்த நிதியாண்டில் முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு தேவையான நிதிக்கான வேண்டுகோள் விடுத்தல் (பொதுவான பாதீட்டு செயன்முறைக்கமைய) | ஜூலை - செப்டெம்பர் | உரிய நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகள் |
| | ii. அனுமதியளிக்கப்பட்ட மதிப்பீடுகளை ஒப்புக்கொள்ளப்பட்ட கால வரையறைக்குள் நடாத்துவதற்கு உரிய நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளின் ஆயத்த செயற்பாடுகள் குறித்து கண்காணித்து NESCக்கு அறிக்கையிடல். | ஜனவரி - டிசெம்பர் | DPMM |
| 6. மதிப்பீடுகளை முன்னெடுத்தல் | மதிப்பீடுகளை முன்னெடுத்தல் | ஏப்ரல் மாதத்திலிருந்து | அமல்படுத்தும் முகவர்கள் (அனுமதியளிக்கப்பட்ட முன்மொழிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி) |
| 7. மதிப்பீட்டு முடிவுகள், பரிந்துரைகள் மற்றும் கற்றுக்கொண்டவைகளை அறிக்கையிடல், அனுமதியளித்தல் மற்றும் வெளியிடல் (NEPF அமலாக்கத்தின் 2வது ஆண்டிலிருந்து தொடங்குகிறது). | i. நிறைவு செய்யப்பட்ட மதிப்பீடுகளின் அறிக்கைகளை DPMM க்கு சமர்ப்பித்தல்<br>ii. முடிவுகள் மற்றும் பரிந்துரைகளை மீளாய்வு செய்தல். | ஜூன் மற்றும் டிசெம்பர் | i. நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகள்ளை. DPMM |
| | iii. அனைத்து மதிப்பீட்டு முடிவுகளினதும் பொழிப்புகள் மற்றும் பரிந்துரைகளை NESC க்கு சமர்ப்பித்தல் | ஜனவரி மற்றும் ஜூலை (வருடத்திற்கு இரு தடவை) | DPMM |
| | iv. மதிப்பீட்டு முடிவுகள், பரிந்துரைகள் மற்றும் கற்றுக்கொண்டவைகளை அவற்றின் உணர்திறன் மற்றும் பயன்பாடு என்பனவற்றினை கவனத்திற் கொண்டு பங்குதாரர்கள் மத்தியில் வெளியிடுவதற்கு NESCஇன் அனுமதி பெறல். | மார்ச் மற்றும் ஆகஸ்ட் (வருடத்திற்கு இரு தடவை) | NESC |
| | v. மதிப்பீட்டு தகவல்களை தொடர்புடைய நிறுவனங்கள் மத்தியில் பரப்புதல் மற்றும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | மார்ச் மற்றும் ஆகஸ்ட் (வருடத்திற்கு இரு தடவை) | நிதி அமைச்சு |
| | vi. அனுமதியளிக்கப்பட்ட மதிப்பீட்டு பரிந்துரைகள் அமல்படுத்தப்படுதலை கண்காணித்தல். | ஜனவரி - டிசெம்பர் | PMMD |
| | vii. முகாமைத்துவ பின்னூட்டல்களை பின்தொடர்தல். | ஜனவரி - டிசெம்பர் | DPMM மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள்* (*பின்தொடர்தல் செயல்களின் தன்மையைப் பொறுத்தது) |

## மதிப்பீட்டை செயல்படுத்துவதற்கான பணிப்பாய்வு

ஒரு முறையான மதிப்பீட்டை முன்னெடுப்பது மற்றும் இறுதி மதிப்பீட்டறிக்கையை முழுமைப்படுத்துதல் என்பவற்றினை உறுதிப்படுத்தும் முகமாக, உரிய அனைத்து நிறுவனங்களும் மதிப்பீட்டு செயற்பாட்டின் பிரதான நடவடிக்கைகளை வருடாந்திர மதிப்பீட்டு நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஒரு வரிசை முறையில் நிறைவு செய்திருக்க வேண்டும்.

மதிப்பீட்டு செயன்முறையின் பணிப்பாய்வானது, மதிப்பீடுகளை முன்மொழியும் நிறுவனங்கள் (மாகாண சபைகள், நிரல் அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அமல்படுத்தும் முகவர்கள்) மற்றும் தேசிய மட்டத்தில் பரிந்துரை மற்றும் அங்கீகாரம் வழங்கும் அதிகார நிறுவனங்களால் (DPMM மற்றும் NESC) மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளின் வரிசைமுறை பற்றி விளக்குகின்றது. அனைத்து அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளும் வருடாந்திர மதிப்பீட்டு நிகழ்ச்சி நிரலின்படி நடத்தப்பட்டு அறிக்கை செய்யப்படுவதை உறுதிசெய்ய, அனைத்து நிறுவனங்களுக்கிடையில் முறையான ஒருங்கிணைப்பு மற்றும் ஆலோசனை அவசியமாகும்.

பின்வரும் அட்டவணையானது மதிப்பீட்டு செயன்முறையின் முக்கிய செயற்பாடுகளின் வரிசையையும் மற்றும் அவ் ஒவ்வொரு செயற்பாட்டினையும் நிறைவேற்றுவதற்கு பொறுப்புடைய நிறுவனங்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

| வரிசைக் கிரமம் | பிரதான செயற்பாடு | பொறுப்புடைய நிறுவனம் |
|---|---|---|
| 1 | மதிப்பீட்டு சாத்திய மதிப்பாய்வு | நிரல் அமைச்சுக்கள் / மாகாண சபை (சம்பந்தப்பட்ட செயல்படுத்தும் நிறுவனத்தின் ஆலோசனைக்கமைய) |
| 2 | மதிப்பீட்டின் தெரிவு மற்றும் முன்னுரிமை | |
| 3 | பங்குதாரர் பகுப்பாய்வு | |
| 4 | பொருத்தமான மதிப்பீட்டு வகையை தீர்மானித்தல் | |
| 5 | செலவு மதிப்பீடு மற்றும் செயற்திட்டத்தை தயாரி-த்தல். | |
| 6 | உள்ளக அனுமதிக்கான கருத்துக் குறிப்பினை தயாரித்தல். | |
| 7 | முகாமைத்துவ குழு மற்றும் குறிப்பு குழுவை ஸ தாபித்தல் | |
| 8 | மதிப்பீட்டு விதிமுறைகளைத் தயாரித்தல் | |
| 9 | மதிப்பீட்டு முன்மொழிவைத் தயாரித்தல் | |
| 10 | மதிப்பீட்டு முன்மொழிவுகளை மதிப்பாய்வு செய்தல். | 1வது படிமுறை - NBD,NPD,ERD ஆகியவற்றின் ஆலோசனையுடன் DPMM ஆல<br>2வது படிமுறை - NESC |
| 11 | மதிப்பீட்டு முன்மொழிவுகளை தெரிவு செய்தல். | NESC (DPMM இன் ஆலோசனையுடன்) |
| 12 | தெரிவு செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு அனுமதியளித்தல் | NESC |
| 13 | மதிப்பீட்டாளர் / மதிப்பீட்டுக் குழுவை தெரிவு செய்தல் | செயற்படுத்தும் நிறுவனங்கள், (மதிப்பீட்டு குழுவினால்), முகாமைத்துவ குழுவின் வழிகாட்டுதலின் கீழ் |
| 14 | தரவு சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் | |
| 15 | மதிப்பீட்டின் தரத்தை மதிப்பிடல் | முகாமைத்துவ குழு |
| 16 | இறுதி அறிக்கையை தயாரித்தல் | செயற்படுத்தும் நிறுவனங்கள், (மதிப்பீட்டு குழுவினால்), முகாமைத்துவ குழுவின் வழிகாட்டுதலின் கீழ் |
| 17 | இறுதி மதிப்பீட்டு அறிக்கையை மீளாய்வு செய்தல் மற்றும் அனுமதித்தல் | NESC |
| 18 | அறிக்கைகளை பரப்புதல் (NESC இன் அறிவுறுத்தலுக்கமைய) | DPMM (நிதி அமைச்சின் அனுமதியுடன்) |
| 19 | முகாமைத்துவ பின்னூட்டல்கள் மற்றும் பின்தொடர்பு | PMMD மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள்* (*பின்தொடர்தல் செயல்களின் தன்மையைப் பொறுத்தது) |

## மதிப்பீட்டை அமல்படுத்துவதற்கான பணிப்பாய்வு விளக்கம்



அத்தியாயம் 4

# மதிப்பிடலை அமல்படுத்துவதற்கான வழிகாட்டல்

# மதிப்பிடலை அமல்படுத்துவதற்கான வழிகாட்டல்

மதிப்பிடலின் பல்வேறு கட்டங்களில் பின்பற்றுவதற்கான முக்கியமான படிமுறைகளுக்கான அறிவுறுத்தல்களை கருத்திற்கொண்டு மதிப்பிடலை அமல்படுத்துவதற்கான வழிகாட்டல் வழங்கப்படுகின்றது மற்றும் மதிப்பீட்டின் ஒவ்வொரு படிமுறைகளையும் எதுவித சந்தேகமுமின்றி முன்னெடுப்பதற்கு தேவையான கருவிகள், மாதிரி படிவங்கள் மற்றும் வார்ப்புக்களை அறிமுகப்படுத்துகின்றது.

மதிப்பீட்டின் ஒவ்வொரு கட்டத்திலும் பின்பற்ற வேண்டிய முக்கிய படிமுறைகள்:

| மதிப்பீட்டின் கட்டங்கள் | பின்பற்ற வேண்டிய படிமுறைகள் |
|---|---|
| திட்டமிடல் | 1. மதிப்பீட்டை மதிப்பீடு செய்தல் |
| | 2. தெரிவு செய்தல் முன்னிலைப்படுத்தல் |
| | 3. வகை, அணுகுமுறை, முறைமை மற்றும் மதிப்பீட்டு அளவீடுகளை தீர்மானித்தல். |
| | 4. பங்குதாரர் பகுப்பாய்வு |
| தயாரித்தல் | 1. முகாமைத்துவ குழு மற்றும் குறிப்புக் குழுவை நிறுவுதல் |
| | 2. பாதீட்டு மற்றும் செயல் திட்டத்தை தயாரித்தல் |
| | 3. மதிப்பீட்டு கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளை விருத்தி செய்தல் (ToR) |
| | 4. மதிப்பீட்டாளர்/மதிப்பீட்டு குழுவை தெரிவு செய்தல் |
| முன்னெடுத்தல் | 1. ஆரம்ப அறிக்கை |
| | 2. தகவல்களை சேகரித்தல் |
| | 3. தகவல்களை பகுப்பாய்வு செய்தல் மற்றும் மாதிரி/ தொடக்க அறிக்கை |
| | 4. மதிப்பீட்டு நடைமுறைகளின் தர மதிப்பீடு |
| அறிக்கையிடல் | 1. மாதிரி அறிக்கையில் பின்னூட்டல்களை பெறல் மற்றும் பங்குதாரர்களின் மீளாய்வு |
| | 2. மேம்படுத்தப்பட்ட மாதிரி அறிக்கையின் தரத்தை மதிப்பிடல் |
| | 3. இறுதி அறிக்கை தயாரித்தல் |
| | 4. அறிக்கையை வெளிப்படுத்தல் |
| பயன்படுத்தல் மற்றும் பின்னூட்டல் | 1. முகாமைத்துவ பின்னூட்டல்களைக் கையாளுதல் |

மதிப்பீட்டினை முன்னெடுக்கும் போது இந்த பிரிவில் காணப்படுகின்ற 16 வழிகாட்டல்கள் (நிறுவன மட்டத்தில்) மற்றும் தேசிய மட்டத்திற்கு பொருத்தமான 02 வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும் :

## I. மதிப்பீட்டினை திட்டமிடல் மற்றும் தயாரிப்பதற்கான வழிகாட்டல்

### வழிகாட்டல் 1: மதிப்பீட்டினை தெரிவு செய்தல் முன்னிலைப்படுத்தல்

மதிப்பீட்டிற்கான பல முன்மொழிவுகளிலிருந்து அதிக சாத்தியப்பாடு உள்ள தலையீட்டினை* தெரிவு செய்தல் மதிப்பீட்டிற்கு வரையறுக்கப்பட்ட வளங்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில் அது ஒரு சவாலான விடயமாகும். அதனால், பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாகக் காணப்படும் தெரிவுக்கு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் அளவுகோலானது இச்சவாலை நியாயமான முறையில் வெல்வதற்கு உதவியாக காணப்படுகின்றது.

(*இந்த கட்டமைப்பில் தலையீடு என குறிப்பிடப்படுவது மதிப்பீட்டிற்காக தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டம், நிகழ்ச்சித்திட்டம், கொள்கை அல்லது நிறுவனமாகும்)

***இணைப்பு I இனை பார்க்கவும்: தெரிவு மற்றும் முன்னுரிமைக்கான கருவி***

- நிரல் அமைச்சுக்கள் அல்லது மாகாண சபைகள் (அல்லது நிரல் அமைச்சுக்கள் அல்லது மாகாண சபைகளின் கீழ் வரும் ஏனைய நிறுவனங்கள்) முன்மொழிவு செய்யப்பட்ட மதிப்பீடு/கள் பெரும்பான்மையான அளவுகோல்களுடன்

இணங்குகின்றனவா என தெரிவு மற்றும் முன்னுரிமைக்கான கருவியின் உதவியுடன் பரிசீலிக்கப்பட வேண்டும்.

- உள்ளக ரீதியாக் அதிக பக்க சார்பற்ற தன்மையுடன் மிக முக்கியமான முன்மொழிவை தெரிவு செய்வதற்காக அத் தலையீட்டுக்கான விழிப்புணர்வு மற்றும் அறிவை பெற்றிருக்கும் உத்தியோகத்தர்களை கொண்ட குழுவுடன் முன்மொழியப்பட்ட மதிப்பீடுகளின் மதிப்பீட்டை திட்டமிடல் செயன்முறையின் முதல் படிமுறையில் முன்னெடுத்தல் அவசியமாகும்.

- அளவீடுகளின் தேவைப்பாடுகளினை முற்றுமுழுதாக பூர்த்தி செய்யும் முன்மொழியப்பட்ட தலையீடுகளுக்கு அதி உயர்ந்த புள்ளிகள் வழங்கப்படும் (5 புள்ளி) மற்றும் வழங்கப்பட்ட அளவீடுகளுடன் கவனத்தில் கொள்ளும் போது தலையீடானது திருப்திகரமற்ற அல்லது பலவீனமான தொடர்பினை கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் வழங்கப்பட வேண்டிய மிகக் குறைவான புள்ளிகள் ஒன்று (1) ஆகும்.

- எந்தவொரு முன்மொழியப்பட்ட தலையீடும் அதனுடைய ஆரம்பகட்ட தெரிவு மற்றும் நிறுவனமட்ட தகுதியைப் பெற்றுக்கொள்வதற்கு ஆகக்குறைந்தது 55% புள்ளிகளை பெற்றுக்கொள்ளுவது அவசியமாகும், இதன் பின்னரே DPMM இடம் சமர்ப்பித்து அது தேசிய மதிப்பீட்டு வழிகாட்டல் குழுவிடம் அதன் கவனத்திற்குட்படுத்துவதற்காக சமர்ப்பித்து அடுத்த நிதியாண்டுக்குறிய மதிப்பீட்டு நிகழ்ச்சி நிரலில் முன்மொழியப்பட்ட மதிப்பீட்டினை உள்ளடக்குவதற்கான அனுமதியினை NESC இடமிருந்து பெறுவதற்கான பரிந்துரையை பெறுதல் அவசியம்.

- மேலும், அரசாங்கத்தினால் தேசிய முக்கியத்துவம் கருதி எதாவதொரு மதிப்பீட்டிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அதற்கு அதியுயர் முன்னுரிமை வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

**வழிகாட்டல் 2 : மதிப்பிடலுக்கான மதிப்பீட்டினை முன்னெடுத்தல்**

மதிப்பிடலை மதிப்பிடல் என்பது ஒரு தலையீடு எந்த அளவிற்கு உண்மையானதும் மற்றும் நம்பகமானதுமான ரீதியில் மதிப்பீடு செய்யப்படலாம் என்பதை ஆராய்வதற்கான முறையான அணுகுமுறையாகும். மதிப்பீட்டினை முன்னெடுப்பதற்கு விரும்புகின்ற எந்தவொரு அரசதுறை நிறுவனமும், NESC இன் அனுமதியினை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் DPMM க்கு உத்தியோகபூர்வமாக முன்மொழிவை வழங்கி மதிப்பீட்டினை மதிப்பீடு செய்திருத்தல் வேண்டும். மதிப்பீட்டின் சாத்தியத் தன்மையை தீர்மானிப்பதற்காக கருத்திட்டம், நிகழ்ச்சித்திட்டம், கொள்கை மற்றும் நிறுவனத்தின் பின்வரும் அம்சங்கள் பரீட்சிக்கப்பட்ட மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட வேண்டும்: அவை சாத்தியப்படும் பட்சத்தில் மதிப்பீடு வடிவமைக்கப்பட வேண்டும்.

i. மாற்றத்திற்கான கோட்பாடு அல்லது தெரிவு செய்யப்பட்ட தலையீட்டின் தர்க்க ரீதியான மாதிரி.

ii. மதிப்பீட்டிற்கு பொருத்தமான பிரதான தகவல்களின் கிடை தன்மை (குறிப்பாக செயற்திறனுடன் தொடர்புடைய தொடர்ச்சியான கண்காணிப்புத் தகவல்)

iii. மதிப்பீடு மேற்கொள்ளப்படும் சூழலின் கடத்துத் திறன்.

மதிப்பீட்டில் சிறந்த தீர்ப்பினை வழங்க மேற்கண்ட 03 முக்கிய அம்சங்களை விரிவாக கூற தொடர்ச்சியான கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்.

***இணைப்பு II பார்க்கவும் - மதிப்பீட்டினை மதிப்பிடுவதற்கான கருவி***

**வழிகாட்டல் 3 : மதிப்பீட்டு வகையை தெரிவு செய்தல்**

இலங்கையின் சூழலுக்கு ஏற்ற பல்வேறு வகையான மதிப்பீடுகள் குறித்த போதுமான புரிதல் மதிப்பீட்டை முன்னெடுப்பதிலுள்ள அனைத்து மட்டங்களிலும் தீர்மானமெடுப்பதில் முக்கியமானது.

***இணைப்பு III இனை பார்க்கவும்:*** பின்வருவற்றை கவனத்திற் கொண்டு மிகவும் பொருத்தமான மதிப்பீட்டின் வகையை தீர்மானிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குகின்றது

i. மதிப்பீட்டின் நோக்கம்

ii. தெரிவு செய்த தலையீட்டின் அமல்படுத்தல் கட்டம் மற்றும்

iii. மதிப்பீட்டின் முடிவுகளிலிருந்து எதிர்ப்பார்க்கப்படும் பயன்பாடுகள்.

**வழிகாட்டல் 4: மதிப்பீட்டின் அணுகுமுறையை தெரிவுசெய்தல்**

மதிப்பீட்டில் பக்கச்சார்பற்ற தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நிபுணத்துவத்தை பராமரிக்கும் நோக்கில் அறிவு, நிபுணத்துவம் மற்றும் வளங்கள் (செயல்படுத்தும் நிறுவனத்திற்கு உள்ளேயும் வெளியேயும்) கிடைப்பதைக் கருத்தில் கொண்டு மதிப்பீட்டின் அணுகுமுறையை தீர்மானிக்க வேண்டும். வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் மதிப்பீட்டிற்கான நிதி போதுமான அளவு ஒதுக்கப்படாதிருந்த போதும் மதிப்பீட்டை நிர்வகிப்பதற்கும் நடத்துவதற்கும் தேவையான திறன்களும் நிபுணத்துவமும் இலங்கையில் உள்ள பொதுத்துறை நிறுவனங்கள், மேம்பாட்டு பங்காளிகள், கல்வியாளர்கள் மற்றும் தனியார் துறை தொழில்முறை மதிப்பீட்டாளர்களுக்கு பல்வேறு மட்டங்களில் கிடைக்கின்றன.

இந்த சந்தர்ப்பமானது தர்க்க ரீதியானதும் மற்றும் விஞ்ஞான ரீதியானதுமான தீர்மானமெடுத்தலுக்கு உண்மையானதாகவும் மற்றும் உயர் தரத்திலான மதிப்பீட்டு தகவல்களை உள்நாட்டில் காணப்படுகின்ற வளங்களை பயன்படுத்தி நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இலங்கையின் எதிர்கால மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு பொருத்தமான அணுகுமுறையை பின்வரும் 04 அணுகுமுறைகளிலிருந்து மிகக் கவனமாக தெரிவு செய்வதனை வேண்டி நிற்கின்றது:

i. தனிப்பட்ட (வெளிவாரி) மதிப்பீடு

ii. சுய (உள்ளக) மதிப்பீடு

iii. இணைந்த மதிப்பீடு

iv. பங்குபற்றல் மதிப்பீடு

***இணைப்பு - IV ஐப் பார்க்கவும்*** இது இலங்கைச் சூழலுக்கு பொருத்தமான பல்லேறுபட்ட அணுகுமுறைகள் பற்றிய போதுமான புரிந்துணர்வை வழங்குகின்றது.

**வழிகாட்டல் 5: மதிப்பீட்டு அளவுகோல்**

மதிப்பீட்டு அளவுகோல்கள் பிரதிபலிக்க வேண்டியது: மதிப்பீட்டின் நோக்கம் மற்றும் குறிக்கோள் மற்றும் இது பிரதேச, தேசிய மற்றும் உலக அளவில் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் முன்னுரிமைகளுடன் ஒருங்கிணைக்கப்படுகின்றது. ஒவ்வொரு அளவுகோலும் மதிப்பீட்டு விடயத்தை (கருத்திட்டம், நிகழ்ச்சித்திட்டம், கொள்கை, நிறுவனம்) வெவ்வேறு கோணத்தில் நோக்கும் அளவிற்கு வலுவாக காணப்படல் வேண்டும்.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு/ அபிவிருத்தி உதவிக் குழு (OECD/DAC) 1991 இல் முதலாவதாக அறிமுகப்படுத்திய மதிப்பீட்டு அளவுகோல்கள் (பொருத்தம், வினைதிறன், விளைதிறன், தாக்கம் மற்றும் நிலைபெறும் தன்மை) 2019இல் OCED/ DAC மதிப்பீட்டு மேம்பாட்டு இணையம் (EvalNet) அளவுகோல்களை மறுபரிசீலனை செய்து மேற்கூறப்பட்ட 05 அளவுகோல்களுக்கு மேலதிகமாக 'இசைவு' என்பதனை சேர்த்து அதனை மேம்படுத்தியது.

சீர்திருத்தப்பட்ட OECD/DAC அளவுகோலே இலங்கையின் மதிப்பீட்டிற்கு பயன்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது மற்றும் பிரதான பங்குதாரா்களின் ஒப்புதலுடன் மதிப்பீட்டின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களுக்கு பொருத்தமான மேலதிக அளவுகோலினை பயன்படுத்துவது சாத்தியமானதாகும்.

***இணைப்பு Vஜப் பார்க்கவும் - OECD/DAC மதிப்பீட்டிற்கான அளவுகோல்***

**வழிகாட்டல் 6 - பங்குதாரர் பகுப்பாய்வு**

பங்குதாரர் பகுப்பாய்வு என்பது மதிப்பீட்டினை முகாமை செய்வதில் பங்குதாரர்களுக்கு காணப்படக்கூடிய முக்கியத்துவத்தினை மதிப்பிடல் மற்றும் இனங்காணுவதற்கான ஒரு முறைமையான அணுகுமுறையாகும். இந்த நடைமுறையானது முன்மொழியப்பட்ட மதிப்பீட்டில் பல்வேறுபட்ட குழு அல்லது தனிப்பட்ட பங்குதாரர்களின் ஆர்வம் மற்றும் செல்வாக்கு என்பவற்றினை அறிந்துகொள்ள உதவுகின்றது. அனைத்து பங்குதாரர்களும் ஒரே மாதிரியான ஆர்வத்தினையொ அல்லது செல்வாக்கினையோ கொண்டிருப்பதில்லை ஏனெனில் திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் அமல்படுத்தல் கட்டங்கள் மற்றும் பயனைபெற்றுக்கொள்ளும் தன்மை என்பவற்றினை பொறுத்து தெரிவு தலையீடு வேறுபடுகின்றது. மதிப்பீட்டின் பணிகளை நியமனப்படுத்தும் வேளையில் பங்குதாரர்களின் எதிர்மறையான செல்வாக்கு மற்றும் தடைகளை குறைத்துக்கொள்வதற்காக எந்தவொரு மதிப்பீட்டினதும் திட்டமிடல் கட்டத்திலேயே முழு பங்குதாரர்களினதும் பட்டியல் தயாரிக்கப்படல் வேண்டும்.

பங்குதாரர் பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கு பின்வரும் படிமுறைகளை பின்பற்றுதல் அவசியமாகும்:

**i. பங்குதாரர்களை இனங்காணுதல்:** தெரிவு செய்யப்பட்ட மதிப்பீட்டின் வாழ்க்கை சுழற்சி முழுவதும் தொடர்புறும் அனைத்து பங்குதாரர்களையும் இனங்கண்டு மற்றும் அவர்களை பொருத்தமான குழுவிற்கு வகைப்படுத்துதல் அதாவது திட்டமிடுபவர்கள், அமல்படுத்தும் முகவர்கள் மற்றும் அமல்படுத்துவதில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள் கண்காணித்தல் முகவர்கள் நிதி பங்காளிகள் பயனாளிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் அரசியல் மற்றும் சமூக குழு தலைவர்கள் போன்றும திப்பீட்டின் அமல்படுத்தல்களில் இணைந்து செயற்பட ஆர்வமுடையவர்கள் மதிப்பீட்டு பெறுபேறுகளின் சாத்தியமான பயனாளர்கள் ஆகியோர்.

**ii. ஓவ்வொரு பங்குதாரரினதும் முக்கியத்துவம் மற்றும் சாத்தியமான தாக்கம் மற்றும் திட்டமிடல் செயற்பாட்டில் இணைத்துக்கொள்ளப்படும் பங்குதாரர்களின் பங்களிப்பு மற்றும் பொறுப்பினை இனங்காணுதல்:** மதிப்பீட்டு நடைமுறையில் பங்குபற்றும் அனைத்து பங்குதார்களையும் சிறந்த பங்கேற்பாளர்களாக அங்கீகரிக்க தேவையில்லை ஆனால் மதிப்பீட்டினை திட்டமிடும் போதும் நடைமுறைப்படுத்தும் போதும் அவர்களின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பது அவசியமானதாகும். மதிப்பீட்டினை ஒரு தொழில் துறை அடிப்படையில் முன்னெடுப்பதற்காக பயன்படுத்திக்கொள்ளக்கூடிய பங்குதாரர்களின் மதிப்பீட்டு நிபுணத்துவம் மற்றும் திறமையை சுருக்கமாக மதிப்பிடுதல் இக்கட்டத்தில்

சாத்தியமானதாகும்.

**iii. மதிப்பீட்டின் வெவ்வேறு கட்டங்களில் பங்குதாரர்களின் உச்சமட்ட ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான தந்திரோபாயங்களை விருத்தி செய்தல் மற்றும் அவர்களின் பங்குபற்றுதலுக்கான சம்மதத்தை உறுதிப்படுத்திக்கொள்ளல்:** மதிப்பீட்டு செயற்பாட்டுக்காக அனைத்து முக்கியமான பங்குதாரர்களினதும் உதவியை பெற்றுக்கொள்வதற்காக ஒரு சுருக்கமான தெளிவுபடுத்தல் மற்றும் ஆலோசனை செயன்முறை அவசியமாகும் மேலும் தேவையற்ற தாமதங்கள் மற்றும் முரண்பாடுகளை குறைத்துக்கொண்டு அவர்களின் ஈடுபாட்டுக்கு உகந்த மட்டத்தை இணங்காணுதல் அவசியமானதாகும்.

***இணைப்பு VI ஐப் பார்க்கவும்: பங்குதார்களின் பகுப்பாய்விற்கான கருவி***

## II. மதிப்பீட்டினை முன்னெடுப்பதற்கான வழிகாட்டல்

**வழிகாட்டல் 7: முகாமைத்துவ குழுவை நிறுவுதல்**

ஒரு முகாமைத்துவ குழுவானது தயார்படுத்தல் கட்டத்தில் அதாவது பங்குதாரர் பகுப்பாய்வு முடிவடைந்த பின்னரும் மதிப்பீட்டு செயன்முறையை திட்டமிடுவதற்கு முன்னரும் நிறுவப்படுவது அவசியமாகும்.

- முகாமைத்துவ குழுவின் பிரதான பொறுப்புக்களாவன மதிப்பீட்டின் செயற்பாடுகள், தரம், காலப்பகுதி மற்றும் துல்லியம் போன்றவற்றை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பிடல் பணிகளை செயற்படுத்தும் போது முகங்கொடுக்கும் பிரச்சனைகளை தீர்த்துக்கொள்வதற்காக தேவையான போது தலையீடு மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல்
- இக் குழு உள்ளடக்குவது: மதிப்பீடு செய்யும் நிறுவனத்தின் சிரேட்ட முகாமைத்துவம் அமல்படுத்தும் பங்குதாரர்களின் பிரதிநிதித்தவம் (தலையிடும் நிறுவனம்) உரிய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் நேரடியாக நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள்இ தலையீட்டின்மேற்பார்வை மற்றும் அமல்படுத்தல்கள் இணங்காணப்படல் மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு நியமித்தல்.
- முகாமைத்துவ குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையானது நிர்வாக தாமதங்களை தவிர்த்துக்கொண்டு நிர்வகிக்கக் கூடியவாறு இருத்தல் வேண்டும். (அதிகபட்சம் 10 உறுப்பினர்கள்).

**முகாமைத்துவ குழுவின் தொழிற்பாடுகள்:**

- முன்னுரிமை கொடுக்க வேண்டிய மதிப்பீடுகள் மற்றும் மதிப்பீட்டிற்காக கவனத்தில் கொள்ள வேண்டிய தந்திரோபாயங்கள், நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை தீர்மானித்தல் பற்றி அறிவுரை வழங்குதல்.
- வலுவானதும் நம்பகமானதுமான மதிப்பீட்டு செயற்பாட்டினை விருத்தி செய்வதற்கு உதவுதல் மற்றும் மதிப்பீட்டு அணுகுமுறைக்கு பொருத்தமான கருத்துக்களை வழங்குதல்.
- மதிப்பீட்டு ToR, வினாப்பட்டியல் மற்றும் மதிப்பீட்டு செயற்பாட்டுத் திட்டம் மற்றும் செயற்பாடு தொடர்பாக மீளாய்வு மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மதிப்பீட்டு குழுவின்/ மதிப்பீட்டாளரின் தகுதி பற்றி அறிவுரை வழங்குதல்/ பின்னூட்டலை பெற்றுக்கொள்ளல்.
- தொடக்க அறிக்கை வரைவு மதிப்பீட்டு அறிக்கை மதிப்பீட்டு கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் பரப்புதல் தொடர்பாடல் உத்திகள் போன்றவை தொடர்பாக எழுத்து மூலமான அல்லது வாய்மொழி மூலமான பின்னூட்டல்களை வழங்குதல்.
- மதிப்பீட்டின் தரத்தை உறுதிப்படுத்துதல்.
- தேவையான போது தீர்மானங்களை எடுத்தல் மற்றும் பிரச்சனைகளை தீர்த்தல்.
- மதிப்பீட்டு முகாமையாளர் (ஒட்டுமொத்த மதிப்பீட்டையும் ஒருங்கிணைப்பதற்காக பரிந்துரைக்கப்பட்டவர்) முகாமைத்துவ குழுவின் ToR ஐ உறுப்பினர் மத்தியில் வழங்குதல் வேண்டும்.

***இணைப்பு VII ஐப் பார்க்கவும்: முகாமைத்துவ குழு ToR இன் வார்ப்புக்கள்.***

**வழிகாட்டல் 8: மதிப்பீட்டு குறிப்பு குழுவை நிறுவுதல் (ERG)**

- மதிப்பீட்டு குறிப்புக் குழு என்பது மதிப்பீட்டின் தரத்தினை மேம்படுத்துவதற்காக மேலதிக அறிவு மற்றும் தொழிநுட்ப சிந்தனையை பிரதான பங்குதாரர்களுக்கு வழங்கும் அறிவுரை குழுவாகும். ERG உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட தலையீட்டினை திட்டமிடல் அல்லது அமல்படுத்தல் அல்லது நிபுணர்களை மதிப்பீட்டிற்கு கொண்டு வருதல் என்பற்றில் பிரதான பங்கேற்பை கொண்டிருக்க வேண்டும்.
- மதிப்பீட்டு குறிப்பு குழுவானது (ERG) பங்குதாரர் பகுப்பாய்விற்கும் பின்னர், தயாரிப்புக் கட்டத்தின் போது ஸ்தாபிக்கப்பட வேண்டும்.
- மதிப்பீட்டு குறிப்பு குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை முகாமை செய்யக்கூடியதாகவும் மற்றும் வினைதிறனானதுமாக இருக்க வேண்டும். (அதிகபட்சம் 10-12 உறுப்பினர்கள்).

- ERG யானது மதிப்பீடு செய்யும் நிறுவனத்துடன் (அல்லது மதிப்பீட்டு முகாமையாளருடன்) நெருங்கி செயற்படும் மற்றும் மதிப்பீட்டின் ToR, மதிப்பீட்டு தொடக்க அறிக்கை மற்றும் வினாப்பட்டியல்,மற்றும் மதிப்பீட்டு கண்டுபிடிப்புக்கள் மற்றும் வரைவு அறிக்கைகளுக்கான பின்னூட்டல் மற்றும் உள்ளீடுகளை வழங்கும்.
- TORயானது மதிப்பீட்டின் முகாமைத்துவத்தில் ஈடுபட மாட்டாது ஆனால் தொழில்நுட்ப மற்றும் நடைமுறை திறன்களுக்கான துணைக்குழுவாக மதிப்பீட்டின் முக்கிய குழுவுடன் செயற்படும்.
- மதிப்பீட்டு முகாமையாளர் ToR ஐ ERG உறுப்பினர்கள் மத்தியில் வழங்குதல் வேண்டும்.

**மதிப்பீட்டு குறிப்பு குழுவின் தொழிற்பாடுகள்:**

- மதிப்பீட்டு குழுவிற்கு தேவைப்படும் மேலதிக விஞ்ஞான, தொழில்நுட்ப நிபுணர்களை துணையாக வழங்குதல்.
- மதிப்பீட்டின் ToR, மதிப்பீட்டின் தொடக்க அறிக்கை மற்றும் கேள்வித்தாள், மதிப்பீட்டு கண்டுபிடிப்புக்கள் மற்றும் வரைவு அறிக்கை தொடர்பான சுயாதீனமாக கருத்துக்களை பகிர்தல்.
- மதிப்பீட்டிற்காக சேகரிக்கப்பட்ட தகவல்களின் வெற்றிடங்களையும் தவறான விளக்கங்களையும் கண்டறிந்து தெரிவித்தல்.
- மதிப்பீட்டில் பங்குதாரர்களின் பங்களிப்பை எளிதாக்குதல்.
- மதிப்பீட்டு கண்டுபிடிப்புக்களின் பரவல் மற்றும் பயன்பாட்டுக்கு உதவி செய்தல்.

***இணைப்பு VIII ஐப் பார்க்கவும்: ERG இன் ToR க்கான வார்ப்புக்கள்.***

**வழிகாட்டல் 9: மதிப்பீட்டு திட்டத்தை உருவாக்குதல்**

மதிப்பீட்டின் ஒவ்வொரு கட்டத்தின் அனைத்து செயல்பாடுகள் மற்றும் துணை நடவடிக்கைகளும் செயற்படுத்தல் கால அளவு மற்றும் செலவுடன் இனங்காணப்படல் வேண்டும்.

செயற்பாடுகள் மற்றும் துணை செயற்பாடுகளுக்கான பிரதான செயற்திறன் குறிகாட்டிகளை இனங்காண்பது அவசியம் இது மதிப்பீட்டில் கண்காணிக்க வேண்டிய பிரதான செயற்பாடுகள் மற்றும் செயற்றிட்டத்திலிருந்து அகற்றப்பட வேண்டிய முக்கியமற்ற செயற்பாடுகளை இனங்காணவும் உதவுகின்றது. (உ+ம் : நிர்வாகம் அல்லது முகாமைத்துவத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் அல்லது முக்கியத்துவமற்ற செயற்பாட்டு வெளியீடுகள்)

ஒட்டுமொத்த செயற்பாட்டினதும் வேலைப்பழுவினை பகிர்ந்தளித்தல் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு செயற்காடுகளை இலகுபடுத்தும் நோக்கத்திற்காக ஒவ்வொரு செயற்பாடு மற்றும் துணை செயற்பாடுகளை அமல்படுத்தும் பொறுப்புக்களை இனங்காணுதல்.

***இணைப்பு IX ஐப் பார்க்கவும் - மதிப்பீட்டு திட்டத்திற்கான வார்புருக்கள்***

**வழிகாட்டல் 10 - மதிப்பீட்டிற்கான பாதீடு**

மதிப்பீட்டின் பணிகளை வெற்றிகரமாகவும் சுமூகமாகவும் மேற்கொள்வதற்கு பிரதான காரணியாக இருப்பது யதார்த்தமான பாதீட்டு மதிப்பீடாகும்.

மதிப்பீட்டிற்கான பாதீட்டினை திட்டமிடும் போது பின்வரும் பிரதான பகுதிகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்:

i. **மதிப்பீட்டின் எல்லை:** பங்குதாரர் ஆலோசனை தொடர்பான களப்பணிகள் தொடர்பான உள்ளடக்கம் மற்றும் தகவல் சேகரித்தல் ஆகியன கவனத்தில் கொள்ள வேண்டிய பிரதான காரணிகளாகும். நேரடியான அவதானிப்புக்களுக்காக மேற்கொள்ளப்படும் கள விஜயங்களின் எண்ணிக்கை மற்றும் பயன்படுத்தும் போக்குவரத்து மற்றும் தங்குமிடங்களின் தன்மை ஆகியன களப்பணிகளின் கிரயங்களை தீர்மானிக்கும் காரணிகளாகும். மாதிரி அளவு(பயனாளர்களின் தொகை) மற்றும் களத்தில் தகவலறிந்தவர்களிடம் தொடர்பாடும் முறை (வீடு வீடாக செல்லுதல், கூட்டங்கள், இணைய வழியுனூடான கலந்துரையாடல்கள் போன்றவை) என்பன தகவல்களை சேகரிப்பதற்கான செலவீனங்களை தீர்மானிக்கும். தகவல் சேகரிக்கும் வகை மற்றும் முறைமை தகவல் பகுப்பாய்வு மற்றும் விளக்கங்களை முன்னெடுப்பதற்கு தேவையான தொழிநுட்ப நிபுணர்களின் மட்டம் மற்றும் நேரம் என்பற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டியது யதார்த்தமான பாதீட்டிற்கு அவசியமானதாகும். தகவல்களை பகுப்பாய்வு செய்வதற்கு அதிநவீன புள்ளிவிவர முறைகளை பயன்படுத்துவதற்கு தொழிநுட்ப நிபுணர்கள் அவசியமாகும் இது மதிப்பீட்டின் செலவீட்டை அதிகரிக்கச்செய்யும்.

ii. **மதிப்பீட்டிற்கான அணுகுமுறை:** மதிப்பீட்டின் தன்மை மற்றும் நோக்கம் என்பவற்றை பொருத்து வெளிப்புற மதிப்பீட்டாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தல் செலவு வேறுபடும். மதிப்பீட்டாளர்களை பணிக்கமர்த்தும் போது முறையான விலை மதிப்பீட்டை மேற்கொள்வது இன்றியமையாததாகும். சுய மதிப்பீடுகள் செலவு குறைந்தனவாக காணப்படுகின்றன ஆனால், நிறுவனத்தில் காணப்படுகின்ற வளங்களிலிருந்து வெளியில் வாங்க வேண்டிய அல்லது வாடகைக்கு பெற்றுக்கொள்ள வேண்டிய வளங்கள் பற்றி வேறுபடுத்தி அறிந்து கொள்வதற்கு முறையான

செலவு திட்டமிடல் மிக முக்கியமானதாகும். கூட்டு மதிப்பீடுகளின் செலவு மதிப்பீடுகளில் பங்காளர்களினால் பகிர்ந்துகொள்ளப்பட்ட செலவுகள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். கூட்டு மற்றும் பங்கேற்பு மதிப்பீடுகளின் தொடர்பாடல் மற்றும் ஒருங்கிணைத்தல் செலவானது சுய மதிப்பீட்டினை விட எப்போதும் அதிகமானதாகவே காணப்படும்.

**iii.** **அறிக்கையிடும் மற்றும் பரப்பும் முறை:** மதிப்பீட்டின் எல்லை மற்றும் மதிப்பீட்டின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றை பொருத்து மதிப்பீட்டின் கண்டுபிடிப்புக்களை வரைதல், மீளாய்தல் மற்றும் அறிக்கையிடுதலுக்கான நேரம் மற்றும் முயற்சி வேறுபடும்.

பிரதான செலவு விடயங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

i. மதிப்பீட்டு திட்டமிடல் மற்றும் தயாரித்தல்
ii. தரவு சேகரிப்பு மற்றும் பதிவிடல்
iii. தகவல் பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல்
iv. அச்சிடுதல் மற்றும் பரப்புதல்
v. தொடர்பாடல் மற்றும் கூட்டங்கள்
vi. பயணம் மற்றும் தொடர்புடைய வசதிகள்

**வழிகாட்டல் 11: மதிப்பீட்டு வினாப்பட்டியல்களை விருத்தி செய்தல்**

- மதிப்பீட்டு கேள்விகளாவன மதிப்பீட்டின் நோக்கம் மற்றும் மதிப்பீட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட அளவுகோல்களுக்கும் இடையிலான இணைப்பினை தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

- ஒவ்வொரு மதிப்பீட்டு அளவுகோலுக்கு கீழும் ஒரு குறிப்பிட்ட கேள்வித் தொகுப்பு தெரிவு செய்யப்பட்ட தலையீட்டிற்கு பொருத்தமாக தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். மதிப்பீட்டு நோக்கத்திற்கு நேரடியாக மற்றும் பாரியளவில் உதவக்கூடிய சுமார் 5-7 வரையான முக்கிய மதிப்பீட்டு கேள்விகள் குறிப்புக் குழுவின் உதவியுடன் இணங்காணப்பட வேண்டும் (இணைப்பு - VI பார்க்கவும்).அதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக இந்த கேள்விகள் பொது கேள்விகள் கொண்ட தொகுப்பாக பிரிக்கப்படலாம்.

- மதிப்பீட்டு கேள்விகளின் எண்ணிக்கையானது மதிப்பீட்டின் விடயப்பரப்பில் தங்கியுள்ளதுகுறிப்புக்குழு மற்றும் முகாமைத்துவ குழுவின் ஆலோசனையுடன் ஆகக் குறைந்தது ஆனால் போதுமானளவிலான கேள்விகள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

- மூடிய கேள்விகள் மற்றும் திறந்த கேள்விகளின் முறையான கலவையானது, தரமான மற்றும் தொகையிலான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு வினாப்பட்டியலின் வலுவினை மேம்படுத்துகின்றது.

- மூடிய கேள்விகள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட நேரடி பதில்களை பெற்றுக்கொள்வதனை பரிந்துரைக்கிறது (உம்: i. ஆம்/ இல்லை ii. உயர்/ சராசரிக்கு மேல்/ சராசரி/ திருப்தி/ குறைவான iii. வலுவாக ஒப்புக்கொள்ளப்படுகின்றது/ ஒப்புக்கொள்ளப்படுகின்றது/ ஒப்புக்கொள்ளப்படவில்லை/ வலுவாக ஒப்புக்கொள்ளப்படவில்லை/ பதிலளிக்க முடியாதுள்ளது) மற்றும் விரைவானதும் மற்றும் பொருளாதார ரீதியானதுமான முடிவினை இலகுவாக ஆய்வு செய்யக்கூடிய வகையில் தரவுகளை சேகரித்தல்). பெரும்பாலான பதில்களை வழங்கக்கூடியவர்கள் அவர்களது அறிவுடன் மூடிய கேள்விகளுக்கு பதிலளிக்க முடியும், ஏனெனில் நிலையான பதில்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது ஆனால் பதிலளிப்பவர்களுக்கு மேலதிக தகவல்களை வழங்குவதற்கு அல்லது அவர்களது கருத்துக்களை சுதந்திரமாக தெரிவிப்பதற்கு வரையறுக்கப்பட்ட இடமே காணப்படுகின்றது.

- திறந்த கேள்விகள் சிக்கலான பிரச்சினைகளுக்கான தகவல்களை போதுமான அறிவு மற்றும் கல்வி தகைமைகளை உடைய உரிய தனிநபர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமானவை் நிலையான பதில்களை பயன்படுத்துவதனால் பங்குதாரர்களின் பின்னூட்டல்களை பெற்றுக்கொள்ள முடியாத போது பதிலளிப்பவர்கள் தங்களது அனுபவம், நோக்கு மற்றும் கருத்துக்களை அவர்களது சொந்த வார்த்தைகளில் விவரிப்பதற்கு இந்த வகையான கேள்விகள் அனுமதியளிக்கின்றன. உயர் தரம் வாய்ந்த தரவுகளை திறந்த கேள்விகளினூடாக பெற்றுக்கொள்ள முடியும் ஆனால் பதில்களை பெற்றுக்கொள்வதற்கும் அதே போன்று தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கும் நீண்ட காலம் தேவைப்படும். ஆகையினால்,அதிகளவிலான மூடிய கேள்விகள் குறைந்த எண்ணிக்கையிலான அவசியமான திறந்த கேள்விகளுடன் பரிந்துரைக்கப்படுகின்றன.

**இணைப்பு - V ஐப் பார்க்கவும் மதிப்பீட்டிற்கான OECD/DAC அளவுகோல் -** ஒவ்வொரு மதிப்பீட்டு அளவுகோலின் கீழும் முக்கியமான பதில்கள்.

- வினாப்பட்டியலை தயாரிக்கும் போது பின்வரும் படிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்:

  i. தெரிவு செய்யப்பட்ட தலையீட்டின் திட்டமிடல், அமல்படுத்தல் மற்றும் கண்காணிப்புக் கட்டங்களில் ஈடுபட்ட அனைத்து பங்குதாரர்களினதும் உள்ளீட்டினை பெற்றுக்கொள்ளல் (அல்லது வரைபு கேள்விகளை பகிர்ந்து அவற்றின் உள்ளீடுகளை பெற்றுக்கொள்ளல்)

ii. தெரிவு செய்யப்பட்ட தலையீட்டின் திட்டமிடல், பாதிடல், கண்காணித்தல், மதிப்பிடல்,முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுக்கான ஆதாரங்களை உள்ளடக்கிய ஆவணங்களை மீளாய்வு செய்தல்.

iii. வினா பட்டியலை மதிப்பீட்டின் விடயப்பரப்பு, குறிக்கோள், இலக்கு மற்றும் முன்னிலைப்படுத்தலுடன் சீரமைப்பதற்கு மற்றும் நன்றாக மெருகேற்றுவதற்காக ஆலோசனை மற்றும் மூளைச்சலவைகளை (மதிப்பீட்டு குறிப்புக் குழு மற்றும் முகாமைத்துவ குழுவுடன்) முன்னெடுத்தல்.

iv. கள வேலைகளுக்காக வளங்களை பகிர்தல் மற்றும் தகவல்களை சேகரித்தலுக்கான திட்டமிடலுக்கு உதவுவதற்காக பங்குதாரர் குழு அல்லது வகைகளுக்கமைய மதிப்பீட்டு கேள்விகளை வகைப்படுத்தல். கள விஜயத்தை மேற்கொள்ளாமல் மற்றும் கிடைக்கக்கூடிய ஆவண ஆதாரங்களை பயன்படுத்தி பதிலளிக்கக்கூடிய கேள்விகளை இணங்காணல்.

v. ஆரம்ப சோதனையை முன்னெடுப்பதன் மூலம் மதிப்பீட்டின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உதவக்கூடிய வகையில் போதுமான அளவு தகவல்கள் மற்றும் தரவுகளை சேகரிப்பதற்கான கேள்விகளின் வலுவினை உறுதிப்படுத்துதல்.

vi. யதார்த்தமான காலப்பகுதி, தரவு மூலம், கிரய வகை, நெறிமுறை தேவைகள் (பொருத்தமானதாக இருப்பின்) மனித வளங்கள் மற்றும் ஏனைய தேவையான வளங்கள் என்பவற்றுடன் தகவல் சேகரிப்பு திட்டத்தினை விருத்தி செய்தல்.

### வழிகாட்டல் 12: மதிப்பீட்டிற்கான குறிப்பு விதிமுறைகள் (ToR)

மதிப்பீட்டிற்கான குறிப்பு விதிமுறைகள் என்பன மதிப்பீட்டின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக மதிப்பீட்டு பணிகளை முன்னெடுக்கும் முன்னனி நிறுவனங்களினால் இணங்காணப்பட்ட எதிர்பார்ப்புக்கள் மற்றும் தேவைகளின் விரிவான விளக்கமாகும். பங்குதாரர்களுடனான ஒரு பரந்துபட்ட ஆலோசனையினால் அவர்களின் எதிர்ப்பார்ப்புக்களை புரிந்துகொள்ளுதலானது அனைத்து தேவையான தகவல்களையும் உள்ளடக்கிய ஒரு விரிவான மதிப்பீட்டு குறிப்பு விதிமுறைகளை வரைவதற்கான முன்நிபந்தனையாகும் மற்றும் இதன் மூலம் மதிப்பீட்டை வெற்றிகரமாக முன்னெடுக்க கூடியதாகவும் இருக்கும்.

முறையாக வெளியிடப்பட்ட குறிப்பு விதிமுறையானது மதிப்பீட்டின் நோக்கம்விடயப்பரப்பு அது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் மதிப்பீட்டு கண்டுபிடிப்புக்களின் பயன்பாடுகள் மற்றும் கண்டுபிடிப்புக்களையும் பரிந்துரைகளையும் பயன்படுத்தும் நோக்கமுள்ளோர் என்பவற்றை உள்ளடக்கியதாக காணப்பட வேண்டும். குறிப்பு விதிமுறையினை உருவாக்க எடுத்துக்கொள்ளப்பட்ட நேரம் மற்றும் ஆக்கபூர்வமான முயற்சிகள் என்பவற்றினாலேயே மதிப்பீட்டின் இறுதி உற்பத்தியின் தரம், பொருத்தப்பாடு மற்றும் பயன் என்பன பெரும்பாலும் தீர்மானிக்கப்படுகின்றது.

***இணைப்பு X ஐப் பார்க்கவும் - மதிப்பீட்டு குறிப்புரைகளுக்கான வார்ப்பு***

### வழிகாட்டல் 13: மதிப்பீட்டாளரை தெரிவு செய்தல;

வெளிப்புற மதிப்பீடுகளுக்காக மதிப்பீட்டாளரை (அல்லது மதிப்பீட்டு குழுவை) தெரிவு செய்தல் மதிப்பீட்டினை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கான மிக முக்கியமான காரணியாகும்.

- இலங்கையில் தற்போதைய சூழலில் போதுமான மதிப்பீட்டாளர்கள் இல்லாத நிலையில், உயர் தரத்திலான மதிப்பீடுகளை மேற்கொண்டு அதற்கான பதிவுகளை நிரூபித்தவர்கள் பற்றிய முறைசாரா ஆய்வினை மேற்கொள்வது உதவியாக இருக்கும்.
- வெளிப்புற மதிப்பீட்டாளரை தெரிவு செய்யும் போது அரச கேள்வி முறைமை பின்பற்றப்பட வேண்டும். வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களை பொருத்த வரையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி முறைகள் பின்பற்றப்பட வேண்டும்.
- தெரிவு செய்யப்படக்கூடிய மதிப்பீட்டாளர் பின்வரும் தகுதிகளை கொண்டிருக்க வேண்டும்:

i. மதிப்பீட்டிற்கான முறையான பயிற்சி

ii. தெரிவு செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு பொருத்தமான நோக்கம், வகை மற்றும் அணுகுமுறைகளுடன் தொடர்புடைய அனுபவம்

iii. இதே மாதிரியான தலையீடுகள் மற்றும் துறையின் மதிப்பீட்டை நடாத்திய அனுபவம்.

iv. நாடு அல்லது பிராந்திய அனுபவம்.

v. முன்மொழியப்பட்ட மதிப்பீட்டை குறித்த நேரத்தில் நிறைவு செய்வதற்கான திறன் (அறிவு, திறமை மற்றும் தொழிலாளர் குழாம்).

vi. உள்நாட்டு மக்கள் மற்றும் உள்ளக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களிடம் வினைதிறனாக தொடர்பாடலை மேற்கொள்வதற்கான திறமை.

vii. திறன் விருத்திக்கான திட்டம். (மதிப்பீட்டு பணியை மேற்கொள்வதற்கு பொருத்தமான).

**வழிகாட்டல் 14: தொடக்க அறிக்கையை விருத்தி செய்தல்**

பொருத்தமான ஆவணங்களின் ஆரம்ப மீளாய்வின் பின்னர் மதிப்பீட்டாளரினால் (மதிப்பீட்டு குழு) தொடக்க அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும்.இது மதிப்பீட்டின் மார்க்கத்தை (மதிப்பீட்டு அமைப்பு) தெளிவாக குறிப்பிடுவதுடன் மதிப்பீட்டு செயற்பாட்டின் போது எவ்வாறு மதிப்பீட்டாளர் மதிப்பீட்டு நிறுவனத்துடன் மதிப்பீட்டு முகாமையாளரினூடாக இணைந்து செயற்படுகின்றார் என்பதனையும் குறிப்பிடும்.

***இணைப்பு XI ஐப் பார்க்கவும் - மதிப்பீட்டு அளவீட்டுக்கான வார்ப்புரு***
***இணைப்பு X II ஐப் பார்க்கவும் - தொடக்க அறிக்கைக்கான வார்ப்புரு***

**வழிகாட்டல் 15: மதிப்பீட்டு அறிக்கையை தயரித்தல்**

தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் மதிப்பீட்டாளரினால் அல்லது மதிப்பீட்டு குழுவினால் வரைவு மதிப்பீட்டு அறிக்கை தொகுக்கப்பட வேண்டும்.

இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கு முன்பதாக வரைவு அறிக்கையானது முகாமைத்துவ குழுவினால் மற்றும் குறிப்பு குழுவினால் மீளாய்வு செய்யப்படல் வேண்டும் வரைவின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை உறுதிபடுத்திக்கொள்வதற்காக முகாமைக் குழு உறுப்பினர்கள் மற்றும் குறிப்புக்குழுவின் உறுப்பினர்கள் உள்ளடக்கங்களின் நிலைத்தன்மை, வரைவு அறிக்கையின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை மூல தரவுகளுடன் சரிபார்த்து பகுப்பாய்வு செய்த பின்னர் சுருக்குதல் வேண்டும். அதனால்ஒட்டுமொத்த மதிப்பீட்டு செயன்முறைகள் நிறைவடையும் வரையில் மதிப்பீட்டாளர் மூல தரவுகள் மற்றும் பகுப்பாய்வு தாள்களை சரியான ஒழுங்கில் வைத்திருப்பது அவசியமாகும். இறுதி மதிப்பீட்டு அறிக்கையை தயாரிக்கும் போது முகாமைத்துவ குழு முற்றும் குறிப்புக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட மேம்படுத்தல்கள், திருத்தங்கள் அல்லது சீரமைத்தல்களை பொருத்தமான வகையில் உட்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

மதிப்பீட்டின் இறுதி அறிக்கையானது தர்க்க ரீதியாக கட்டமைக்கப்பட்ட, ஆதாரம் சார்ந்த கண்டுபிடிப்புக்கள் கற்றுக்கொண்டவைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்டவைகள் உள்ளடக்கப்பட்டதுமானதாக காணப்படல் வேண்டும். இது தற்போது நடைமுறையிலுள்ள வடிவத்திலேயே தலையீட்டினை தொடர்வதா அல்லது மேம்படுத்தப்பட்ட அல்லது திருத்தப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதா என்பது பற்றிய வலிமைவாய்ந்த பகுத்தறிவான தீர்மானத்தினை வழங்குதல் வேண்டும்.

மதிப்பீட்டு அறிக்கையானது பயன்படுத்துபவர்களுக்கு இலகுவானதாக இருத்தல் வேண்டும்: உள்ளடக்கங்களின் நீளம்மொழி (அதிக தொழிநுட்ப வசனங்கள் இல்லாத) மற்றும் மதிப்பீட்டின் நோக்கத்திற்கு பொருத்தமற்ற தகவல்கள் இல்லாதிருத்தல் வேண்டும்.

***இணைப்பு XIII ஐப் பார்க்கவும் - மதிப்பீட்டின் இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கான வார்ப்பு***

**வழிகாட்டல் 16: மதிப்பீட்டு தரத்தினை உறுதிபடுத்தல்**

மதிப்பீட்டின் தரமானது மதிப்பீட்டின் உற்பத்திகளின் (கண்டுபிடிப்புக்கள், பரிந்துரைகள் மற்றும் கற்றுக்கொண்டவைகள்) நம்பகத்தன்மை மற்றும் பயன்பாட்டினை உறுதிப்படுத்தும் முக்கியமான காரணியாகும். அதனால் மதிப்பீட்டின் முடிவில் தர மதிப்பீட்டில் அதிக புள்ளியை பெறுவதற்கு மதிப்பீட்டு செயல்பாடு முழுவதும் தரக்கட்டுப்பாட்டினைப் பேணுவது அவசியமாகும் மேலும் இதன் மூலம் மதிப்பீட்டு பெறுபேறுகளின் பயன்பாடு மற்றும் ஏற்றுக்கொள்ளும் தன்மையினை உச்சப்படுத்திக்கொள்ள முடியும். இலங்கை மதிப்பீட்டு தரவுகள், மதிப்பீட்டு பயிற்சியாளர்களுக்கு உயர் தரமான மதிப்பீடுகளை மேற்கொள்ள வழிகாட்டுகின்றது.
மதிப்பீட்டிற்கான இலங்கை தரநிலைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட தர மதிப்பீட்டு அளவுகோலின் அடிப்படையில் மதிப்பீடுகள் மதிப்பிடப்பட வேண்டும். (இணைப்பு XIV பார்க்கவும்)

## III. மதிப்பீட்டு செயல்பாடுகளுக்கான வழிகாட்டுதல்கள் தேசிய மட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

**வழிகாட்டல் 17: மதிப்பீட்டு முன்மொழிவுகளை DPMM இற்கு சமர்ப்பித்தல்:**

- மதிப்பீட்டை மேற்கொள்ள விரும்பும் எந்தவொரு அரச துறை நிறுவனமும் அவர்களின் முன்மொழிவினை உரிய நிரல் அமைச்சுக்கள் அல்லது மாகாண சபைகளினூடாக DPMM சமர்ப்பிக்க வேண்டும்.
- தெரிவுசெய்யும் செயல்முறை, தேசிய மதிப்பீட்டு வழிகாட்டல் குழு மற்றும் அமைச்சரவையின் பரிந்துரைகள் மற்றும் அனுமதி என்பவற்றை நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் ஒவ்வொரு நிதியாண்டிலும் பெப்ரவரி மாதம் முடிவடைவதற்கு முன்பதாக மதிப்பீட்டு முன்மொழிவு DPMM ஐ வந்தடைய வேண்டும்.
- அனைத்து முன்மொழிவுகளும் வழங்கப்பட்ட மாதிரி படிவத்திற்கமைய தயாரிக்கப்படல் வேண்டும். (இணைப்பு- XV):
- தாமதமற்ற தீர்மானமெடுத்தலுக்கு பின்வரும் ஆவணங்கள் முன்மொழிவுடன் இணைக்கப்படல் வேண்டும்:
    - i. மதிப்பாய்வு மதிப்பீட்டுத் தாள் (இணைப்பு-II)
    - ii. மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கான செயற்பாட்டுத் திட்டம் (இணைப்பு-III-மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கான திட்டத்திற்கான மாதிரி படிவம்)

**இணைப்பு - XV ஐப் பார்க்கவும் - மதிப்பீட்டு முன்மொழிவுகளை DPMM க்கு சமர்ப்பிப்பதற்கான மாதிரிபடிவம்**

**வழிகாட்டல் 18: NESC இன் கருத்தில் கொள்வதற்கான முன்னுரிமை வழங்கப்படும் மற்றும் குறுகிய பட்டியல் படுத்தப்பட்ட மதிப்பீட்டு முன்மொழிவுகள்**

ஒரு வருடத்திற்குள் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டினை விட முன்மொழியப்பட்ட மதிப்பீடுகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்படும் போது (மதிப்பீட்டினை முன்னெடுப்பதற்கான நாட்டின் திறனை கருத்திற்கொண்டு) முன்மொழியப்பட்ட மதிப்பீடானது அடுத்துவரும் நிதியாண்டில் நிதியினை ஒதுக்குவதற்கு தகுதியானதா என்பதை உறுதி செய்து கொள்வதற்கு ***இணைப்பு - XVI இலுள்ள அளவுகோல்கள் DPMM மற்றும் NESC இனால் பயன்படுத்தப்படும். இதன் மூலம் முன்மொழியப்பட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முன்மொழிவுகளை பட்டியல்படுத்தவும் மற்றும் முன்னுரிமைபடுத்தக் கூடியதாகவும் இருக்கும்.***

அத்தியாயம் 5

# இலங்கை மதிப்பீட்டு நியமம்

# இலங்கை மதிப்பீட்டு நியமம்

தீர்மானமெடுத்தலை மேம்படுத்தல் மற்றும் கற்றுக்கொள்ளலுக்காக மதிப்பீட்டின் தரம் என்பது மதிப்பீட்டு உற்பத்திகளின் (கண்டுபிடிப்புக்கள், பரிந்துரைகள் மற்றும் கற்றுக்கொண்டவைகள்) பயன்பாடு மற்றும் அவற்றினை பரந்தளவில் ஏற்றுக்கொள்ளச் செய்வதனை தீர்மானிக்கும் மிக முக்கிய காரணியாக காணப்படுகின்றது. மதிப்பீட்டின் தரநிலைகள் மதிப்பீட்டின் தரத்தை அதிகரித்தல் மற்றும் மதிப்பீட்டினை பயன்படுத்தும் நோக்கம் கொண்ட பயனாளர்களை மதிப்பீட்டின் உற்பத்திகளை பயன்படுத்துதலை ஊக்குவித்தலை நோக்காக கொண்டுள்ளன.

மதிப்பீட்டினை முன்னெடுத்தல் மற்றும் திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டு திறன் விருத்திக்கான வழிகாட்டல் (பயிற்சி) மற்றும் மெட்டா (meta) மதிப்பீடு (மதிப்பீடுகளின் மதிப்பீடு) என்பவற்றுக்கு உறுதியான ஆலோசனைகளை வழங்கக்கூடியதாக தரநிலைகள் காணப்பட வேண்டும். மதிப்பீட்டு செயன்முறை முழுவதும் மதிப்பீட்டின் தரத்தினை உறுதிப்படுத்தல் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளை கடைபிடித்தல் என்பன மதிப்பீட்டின் தரத்தினை உறுதிபடுத்தும் மற்றும் மேம்படுத்தும்.

இலங்கையின் மதிப்பீட்டு தரநிலைகளை தயாரிப்பதற்கு ஐக்கிய நாடுகள் மதிப்பீட்டு குழுவின் (UNEG) மதிப்பீட்டு நியமங்கள் மற்றும் தரநிலைகள்(2016) வழிகாட்டல் ஆவணமாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள ஆனால் பின்வரும் பகுதிகளுக்கான நியமங்கள் நாட்டு சூழலை கவனத்திற் கொண்டு தரநிலைகளுக்கான நாட்டின் உரிமையை உறுதிபடுத்தும் நோக்கில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (நிறுவன கட்டமைப்பு, மதிப்பீட்டுதிறன், கிடைக்கும் வளங்கள், மதிப்பீட்டிற்கான கேள்வி, ஏனையன):

**நியமம் 1: மதிப்பீட்டிலுள்ள தேர்ச்சி:** மதிப்பீட்டைத் திட்டமிடுதல், நடத்துதல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நபர்கள் தொழில்முறை தரநிலைகள் மற்றும் நெறிமுறை மற்றும் தார்மீகக் கொள்கைகளுக்கு இணங்க உயர்தர மதிப்பீட்டை நடத்த தகுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்..

**நியமம் 1.1 : தேர்ச்சி**

- மதிப்பீட்டின் எந்தவொரு கட்டத்திலும் இணைந்து கொள்ளும் நபர்கள்: வழங்கப்பட்ட பாத்திரங்கள் மற்றும் பொறுப்புக்களைச் செய்யத் தேவையான பொருத்தமான கல்வித் தகைமைகள்: நிரூபிக்கப்பட்ட அனுபவம்: மற்றும் பொருத்தமான திறன்களை கொண்டிருத்தல் வேண்டும் மற்றும்
- அவர்களின் திறமைகளை தொடர்ச்சியாக பேணுதல் மற்றும் மேம்படுத்தல்.

**நியமம் 1.2: ஒழுக்கவியல்**

- மதிப்பீட்டில் ஈடுபடும் தனிப்பட்ட நபர்கள் நெறிமுறைக்குட்பட்டு மதிப்பீட்டினை முன்னெடுப்பதற்காக பின்வரும் பிரதான அம்சங்களுக்கு ஒத்திசைந்து செயற்படல் வேண்டும்:

i. மதிப்பீட்டின் தேவைப்பாடு மற்றும் பயன்பாடு என்பவற்றினை கருத்திற்கொண்டு (மதிப்பீட்டின் இலக்கு மற்றும் குறிக்கோள் என்பவற்றினை கருத்திற்கொள்ள வேண்டும்) மதிப்பீட்டின் நடுநிலைத்தன்மை மற்றும் பக்கச்சார்பற்ற தன்மை என்பவற்றினை உறுதிபடுத்திக்கொள்ளுவதற்கு முகாமைத்துவ குழு மற்றும் மதிப்பீட்டு குறிப்புக்குழுவிலிருந்து (நுசுபு) பங்குதாரர்கள் மற்றும் நிபுணர்களின் சரியான கலவையை தெரிவுசெய்தல்.

ii. முரண்பாடுகளை தவிர்த்தல் பக்கச்சார்பற்று, சுயாதினமாக, நேர்மை மற்றும் பொறுப்புணர்வுடன் இருத்தல்.

iii. பங்கேற்பாளர்களின் இரகசியத்தன்மை, பன்முகத்தன்மை (இன, கலாசாரம், பாலினம்), கண்ணியம் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றிற்கு உரிய மரியாதை அளிப்பதன் மூலம் பங்கேற்பாளர்களுடன் சரியான முறையில் தொடர்பு கொள்வது.

iv. வெளிப்படையான, உள்ளடக்கிய மற்றும் பாகுபாடற்ற முறையில் வேலையை நடத்துவதன் மூலம் தகவல் பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடலின் துல்லியம், நம்பகத்தன்மை மற்றும் முழுமையை உறுதிப்படுத்துதல்.

**நியமம் - 2: நிறுவன ஏற்பாடு:** மதிப்பீட்டை நடத்துவதற்கு எதிர்பார்கின்ற நிறுவனமானது மதிப்பீட்டு செயற்பாட்டை வினைதிறனாக முகாமை செய்வதற்கு போதுமான நிறுவனகட்டமைப்பை கொண்டிருத்தல் வேண்டும்.

- உயர் தரத்திலான மதிப்பீட்டினை முன்னெடுப்பதற்கு பின்வரும் தேவைப்பாடுகள் நிறுவனத்தினால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கப்பட வேண்டும்:

i. மதிப்பீட்டினை புரிந்துகொண்டு அதற்கு உதவும் உயர் மட்ட முகாமைத்துவம் இருத்தல்.

ii. அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டுடன் நிறுவன செயல் திட்டத்தில் மதிப்பீடு உள்ளடக்கப்பட்டிருத்தல்.

iii. பக்கச்சார்பற்ற மதிப்பீட்டு செயல்முறைக்கு வசதியளிப்பதற்காக மதிப்பீட்டு செயற்பாட்டினை ஒரு தன்னிச்சையான செயற்பாடாக கருத்திற் கொள்ளுதல் (உயர் மட்ட முகாமைத்துவத்தினால்).

iv. மதிப்பீட்டு தலைவர் தலைமை நிறுவனத்துடன் நேரடியாக அறிக்கையிடுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்.'. அதிகாரமளிக்கப்படுகிறார் (மதிப்பீட்டு தீர்மானமெடுத்தல் நோக்கத்திற்காக).

v. மதிப்பீட்டிற்கு போதுமான நிதி மற்றும் மனித வளங்கள் ஒதுக்கப்பட்டிருத்தல்.

vi. முகாமைத்துவ பின்னூட்டல்களினூடாக பரிந்துரைக்கப்படும் செயல்களின் அமலாக்கத்தை மேற்பார்வை செய்வதற்கு ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருத்தல்.

## நியமம் - 3: மதிப்பீட்டை முன்னெடுத்தல்:

மதிப்பீட்டின் இலக்கு மற்றும் குறிக்கோள்களுக்கு ஒத்திசைவாக உயர் தரத்திலான மதிப்பீட்டு உற்பத்திகளை சரியானநேரத்தில் வழங்குவதை உறுதிப்படுத்திகொள்வதற்காக மதிப்பீடு நடாத்தப்படல் வேண்டும்.

**நியமம் - 3.1: கால எல்லை:** பயனாளர்களின் தேவையை பூர்த்தி செய்தல் மற்றும் ஆக்க பூர்வமான தீர்மானமெடுத்தலுக்காக மதிப்பீட்டினூடாக மிகவும் பொருத்தமான பயனுள்ள மற்றும் சரியான நேரத்தில் தகவல்கள் வழங்கப்படுவதை மதிப்பீட்டு திட்டம், நோக்கம் மற்றும் வடிவமைப்பு என்பன உறுதிசெய்தல் வேண்டும்.

**நியமம் - 3.2 : மதிப்பீட்டின் மதிப்பீடு:** தீர்மானமெடுத்தலின் பொருட்டு மதிப்பீடானது உரிய நேரத்தில் நம்பகமான தகவல்களை வழங்குவதனின் சாத்தியப்பாட்டினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக மதிப்பீட்டினை திட்டமிடுவதற்கு முன்பதாக மதிப்பீட்டின் மதிப்பீட்டை முன்னெடுக்க வேண்டும்.

**நியமம் - 3.3 : குறிப்பு விதிமுறைகள்:** மதிப்பீட்டின் இலக்கு, குறிக்கோள்கள், நோக்கம், மதிப்பீட்டு அளவுகோல், வகை மற்றும் அணுகுமுறைகள் (முறை), முகாமைத்துவ ஏற்பாடுகள், கால அளவுமற்றும் மதிப்பீட்டின் வெளியீடுகள் என்பவற்றை தெளிவாக வரையறுத்துக்கொள்வதற்காக முகாமைத்துவ குழு மற்றும் மதிப்பீட்டு குறிப்பு குழுவின் ஆலோசனைகளுடன் குறிப்பு விதிமுறைகள் விருத்தி செய்யப்படல் வேண்டும்.

**நியமம் - 3.4: மதிப்பீட்டு நோக்கம் மற்றும் விடயப்பரப்பு:** யதார்த்தமானதும் மற்றும் அடைந்துகொள்ளக் கூடியதுமான மதிப்பீட்டு நோக்கம் மற்றும் விடயப்பரப்புகளையும் தெளிவாக வரையறுத்துக்கொள்வது முக்கியமாதாகும், ஏனெனில் மதிப்பீட்டு இலக்கானது மதிப்பீட்டின் பகுத்தறிவு மற்றும் அதனை எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது என்பதனை விளக்குகின்றது மேலும் எதனை அடைந்து கொள்வதற்கும் உள்ளடக்குவதற்கும் மதிப்பீடு எதிர்பார்க்கின்றது என்பதனை இலக்கு மற்றும் குறிக்கோள் விளக்குகின்றது.

**நியமம் - 3.5: மதிப்பீட்டு முறைமை :** முறைமையானது மதிப்பீட்டு கேள்விகளுக்கு நம்பகமான பதில்களை வழங்குவதை நோக்கமாக கொண்டிருக்க வேண்டும். மதிப்பீட்டு குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு முறைமையானதாக சேகரிக்கப்பட்ட தகவல்கள் செல்லுபடியானதும், நம்பகரமானதாகவும் மற்றும் போதுமானதுமாகவும் மற்றும் தரவு பகுப்பாய்வு தர்க்கரீதியாக ஒத்திசைவு மற்றும் முழுமையானதாக இருப்பதனை உறுதிப்படுத்த வேண்டும். (மற்றும் ஊகம் மற்றும் கருத்து அடிப்படையிலற்றதாக இருத்தல்).

**நியமம் - 3.6: பங்குதாரர் பங்குபற்றல்:** ஒட்டுமொத்த மதிப்பீட்டு செயன்முறை முழுவதும் பங்குதாரர்களின் பங்குபற்றலை போதுமான மட்டத்தில் உறுதிப்படுத்துதல் முக்கியமான விடயமாகும். இந்நோக்கத்திற்காக இலங்கையின் தேசிய மதிப்பீட்டு கொள்கை கட்டமைப்பின் வழிகாட்டலுக்கமைவாக (NEPF) குறிப்பு குழு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

**நியமம் - 3.7: மதிப்பீட்டாளரை/ மதிப்பீட்டு குழுவை தெரிவு செய்தல்:** பொருத்தமான கேள்வி முறையை பின்பற்றுவதனூடாக திறந்த, வெளிப்படையான செயன்முறையில் ஒரு தேர்ச்சியான மதிப்பீட்டாளர் அல்லது மதிப்பீட்டு குழுவை தெரிவு செய்தல் வேண்டும். இலங்கையின் NEPFஇன் 13வது அத்தியாயத்தின் 3வது அத்தியாயத்திற்கமைய மதிப்பீட்டாளர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

**நியமம் - 3.8: மதிப்பீட்டு அறிக்கை மற்றும் உற்பத்திகள்:** மதிப்பீட்டு தகவல்களை பயன்படுத்தும் நோக்கம் கொண்டபயனாளர்களுக்கு வசதியளிக்க கூடிய வகையில் இறுதி மதிப்பீட்டு அறிக்கையானது ஆதார அடிப்படையிலான கண்டுபிடிப்புக்கள், முடிவுகள் மற்றும் பரிந்துரைகளுடன் தர்க்கரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கப்படல் வேண்டும் (தெளிவான மற்றும் இலகுவான மொழிநடை, அணுகக்கூடியமுறை).

**நியமம் - 3.9: பரிந்துரைகள்:** கண்டுபிடிப்புக்கள் மற்றும் தெளிவாக ஆதாரங்களின் அடிப்படையில் (கருத்துக்களின் அடிப்படையில் அல்ல) மற்றும் யதார்த்தமான அமல்படுத்தல்களின் அடிப்படையில் பரிந்துரைகள் வெளியிடப்பட வேண்டும்.

**நியமம் 3.10: தொடர்பாடல் மற்றும் பரப்புதல்:** மதிப்பீட்டின் திட்டமிடல் கட்டத்தில் வினைதிறனான தொடர்பாடல் மற்றும் பரப்புதல் தந்திரோபாயம் இணங்காணப்படல் வேண்டும். வினைதிறன் வாய்ந்த பின்னூட்டல் மற்றும் பயன்பாட்டிற்காக கண்டுபிடிப்புக்கள், பரிந்துரைகள் மற்றும் கற்றுக்கொண்டவைகளை பொருத்தமான பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளித்தல் வேண்டும். (NEPF,ன் அத்தியாயம் - 02 வருடாந்த மதிப்பீட்டு நிகழ்ச்சிநிரலுக்கமைய),

## நியமம் 4: மதிப்பீட்டு முகாமைத்துவம்:

மதிப்பீட்டுக் குழு தலைவரின் வினைதிறன் மற்றும் விளைதிறன் வாய்ந்த தொழிற்பாடு அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு வழிகாட்டல்களை பின்பற்றுவது ஆகியன வினைதிறனான மதிப்பீட்டு முகாமைத்துவத்திற்கு முக்கியமானதாகும்.

### நியமம் 4.1: மதிப்பீட்டு தலைவர்:

பின்வருவனவற்றை உறுதிபடுத்திக்கொள்வதற்காக மதிப்பீட்டு குழு தலைமை உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

i. மதிப்பீட்டு திட்டத்தினை வழிகாட்டுதல்களுக்கமைய திட்டமிட்டவாறு அமல்படுத்துதல்

ii. மதிப்பீட்டு பாதீடானது பொருளாதார ரீதியாகவும் வினைதிறனாகவும் முகாமை செய்யப்படல்

iii. பொருத்தமான மதிப்பீட்டு முறைகளை பின்பற்றல்

iv. முக்கிய பங்குதாரர்கள்/ பயனர்களுக்கான பயன்பாட்டை மையமாகக் கொண்டு மதிப்பீடுகள் நடத்தப்படுகின்றன்

v. மதிப்பீட்டு கண்டுபிடிப்புக்கள், கற்றுக்கொண்டவைகள் மற்றும் பரிந்துரைகள் என்பன சுருக்கப்பட்டு உரிய பயனாளர்கள் மத்தியில் பகிரப்படவேண்டும் மற்றும்

vi. முகாமைத்துவ பின்னூட்டல்களை அமல்படுத்துவதற்கு போதுமான பின்தொடர்தல் வழிமுறை நிறுவப்பட்டு அமல்படுத்தப்படல்.

**நியமம் 4.2: மதிப்பீட்டு வழிகாட்டல்கள்:** வலுவான மற்றும் பொருத்தமான மதிப்பீட்டு வழிகாட்டுதல்கள் இருக்கவேண்டும் மற்றும் மதிப்பீட்டில் ஈடுபடும் நபர்கள் வழிகாட்டுதல்களை எவ்வாறு பின்பற்றுவது என்பதை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

**நியமம் 5: தர உத்தரவாதம்:** மதிப்பீட்டின் செயல்முறை முழுவதும் மதிப்பீட்டின் தர உத்தரவாதம் அவசியமாகும்.

**நியமம் 5.1: திட்டமிடல் மற்றும் தயாரிப்பு கட்டத்தின் போது தர உத்தரவாதப்படுத்தல் :**

பின்வரும் தர அம்சங்கள் தர உத்தரவாதப்படுத்தலாக கருதப்படுதல் வேண்டும்:

i. குறிப்பு விதிமுறைகள் தெளிவானவையாகவும் மற்றும் அனைத்து தேவையான கூறுகளையும் கொண்டிருத்தல்

ii. நோக்கமானது ஒதுக்கிடப்பட்ட பாதீடு மற்றும் நேரத்திற்குள் முன்மொழியப்பட்ட முறைமையினூடாக உள்ளடக்கப்பட்டிருத்தல்

iii. மதிப்பீட்டின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு பொருத்தமான முறைமை

iv. குறித்த முறைமையானது வலுவான மற்றும் முக்கோண தகவல் சேகரிப்பினை உறுதிப்படுத்துவதனுடன் நம்பகமான பகுப்பாய்வு மற்றும் கண்டுபிடிப்புக்களுக்கு வழிவகுக்கின்றது.

v. மதிப்பீட்டு செயன்முறையானது அதன் பொருத்தத்தையும் பயனையும் உறுதிப்படுத்த போதுமான ஆலோசனை கொண்டவையாக இருத்தல்

vi. மதிப்பீட்டு குழுவில் போதுமான நிபுணத்துவம் உள்ளடக்கப்பட்டுள்ளமை

vii. மதிப்பீட்டாளர்களை தெரிவுசெய்யும் செயன்முறையானது மிகவும் பொருத்தமான வேட்பாளர்களை ஆட்சேர்ப்பதனை உறுதிப்படுத்தலுடன் முரண்பாடுகள் மற்றும் நெறிமுறை சிக்கல்கள் தவிர்க்கக் கூடியதாக இருத்தல்.

**நியமம் - 5.2: இறுதி கட்டத்தில் தர உறுதி:** மதிப்பீட்டின் இறுதி நிலை தர உறுதிப்பாட்டின் போது பின்வரும் தர அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்:

i. நம்பகத்தன்மையை உறுதிபடுத்திக் கொள்வதற்காக தரவுகள் பொருத்தமானதும் நம்பகமானதுமான மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்டிருத்தல்

ii. ஆதார அடிப்படை மற்றும் பொருத்தமான பகுப்பாய்வுக்குட்பட்ட கண்டுபிடிப்புக்களாயிருத்தல்

iii. கண்டுபிடிப்புக்கள், முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் என்பன தர்க்கரீதியாக ஒத்திசைவானவையாக இருத்தல்.

iv. மதிப்பீட்டின் துல்லியம், செல்லுபடியாகும் தன்மை, பொருத்தப்பாடு மற்றும் பயன்பாடு என்பவற்றை உறுதிபடுத்திக்கொள்வதற்காக மதிப்பீட்டுச் செயன்முறை முழுவதும் பங்குதாரரிடம் போதுமானளவு ஆலோசனையை பெற்றிருத்தல்

v. பரிந்துரைகள் செயல்படுத்த கூடியதாக (பிரயோகிக்க கூடியதாயிருத்தல்) இருத்தல் மற்றும் பொறுப்புடைய தரப்பினர் அமல்படுத்தும் போது இலகுவாக புரிந்துகொள்ளக் கூடியதாயிருத்தல்

vi. பரிந்துரைகள் மதிப்பீட்டின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட விடயங்களுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தாதிருத்தல்

vii. அறிக்கையானது அனைத்து மதிப்பீட்டு கேள்விகளுக்கும் மற்றும் குறிப்பு விதிமுறைகளுக்கும் பதிலளிக்ககூடியதாக இருத்தல்

viii. இறுதி மதிப்பீட்டு அறிக்கையின் கட்டமைப்பானது வழிகாட்டல்களுக்கு ஒத்திசைந்திருத்தல்.

அத்தியாயம் 6

# தேசிய மதிப்பீட்டு கொள்கையை அமல்படுத்துவதற்கான தந்திரோபாய அணுகுமுறை

# தேசிய மதிப்பீட்டு கொள்கையை அமல்படுத்துவதற்கான தந்திரோபாய அணுகுமுறை

தேசிய மதிப்பீட்டு கொள்கை கட்டமைப்பானது. நாட்டின் தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் எவ்வாறு மதிப்பீட்டு செயன்முறையை செயற்படுத்துவது என்பதற்கான வழிகாட்டல் மற்றும் பணிப்புரைகளை வழங்குகின்றது. வலுவானதும் அதிகாரம் மிக்கதுமான நிறுவன உதவி மற்றும் மதிப்பீட்டு திறன்: மதிப்பீட்டு தகவல்களை அணுகுவதற்க் தரமான மதிப்பீடு மற்றும் திட்டமிடலுக்கு மதிப்பீட்டை பயன்படுத்துதல் தொடர்பாக அரசியல் மற்றும் தீர்மானமெடுப்பவர்களிடம் இருக்கும் அறிவு மற்றும் உதவி ஆகிய இயலுமான சூழலினால் தேசிய மதிப்பீட்டு கொள்கையின் வெற்றிகரமான அமல்படுத்தல் தீர்மானிக்கப்படுகின்றது.

அதனால், NEPயை வெற்றிகரமாக அமல்படுத்தக்கூடிய சூழலை உருவாக்கிக்கொள்வதற்காக பின்வரும் 06 தந்திரோபாய பகுதிகளில் இடைவெளிகள் மற்றும் பிரச்சனைகளை அடையாளப்படுத்தும் முக்கியமான தந்திரோபாய திட்டமிடலை அமல்படுத்துவது முக்கியமானதாகும்:

## தந்திரோபாய பகுதி 1: மதிப்பீட்டினை நிறுவனமயப்படுத்தல்

தேசிய மதிப்பீட்டு கொள்கையானது அதனை அமல்படுத்துவதற்கு புதிதான நிறுவன ஒழுங்குபடுத்தலை எதிர்பார்க்கவில்லை அனைத்து அரசதுறை மட்டத்திலும் காணப்படுகின்ற திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு அலகுகள் போதுமான வளங்கள் மற்றும் நிபுணர்களுடன் வலுப்படுத்தப்பட வேண்டும். தற்போது காணப்படுகின்ற ஆளணியினரில் திறமைவாய்ந்த நபர்களை மதிப்பீட்டில் முதன்மையானவர்களாக இணங்காணுதல் நிறுவன வலையமைப்பிற்குள் நிபுணர்களை பகிர்ந்துகொள்ளுதல் திட்டமிடல் மற்றும் பாதீட்டில் மதிப்பீட்டிற்கான போதுமான வளங்களை (பாதிடல்) ஒதுக்கிக்கொள்ளுதல் மற்றும் மதிப்பீட்டு முடிவுகளை பயன்படுத்திக்கொள்கின்றமை ஆகியன நிறுவனமயமாக்கிலின் முக்கியமான தயார்படுத்தல் படிமுறைகளாகும்.

## தந்திரோபாய பகுதி 2: மதிப்பீட்டு திறன் அபிவிருத்தி (ECD)

அரச துறை நிறுவனங்களில் தற்போது காணப்படும் மதிப்பீட்டினை முன்னெடுப்பதற்கு தேவையான திறமையினை (மனித வளங்கள், அறிவு மற்றும் திறமை, தலைமைத்துவம் மற்றும் பௌதீக வளங்களின் அடிப்படையில்) இணங்காணுதல் மற்றும் போதுமான வளங்கள் மற்றும் பயிற்சிகளை கொண்டு திறமை தொடர்பான இடைவெளியை நிரப்புதல் என்பன கருத்திற்கொள்ள வேண்டிய பிரதான பகுதிகளாகும். மதிப்பீட்டினை முன்னெடுப்பதற்கு அல்லது முகாமை செய்வதற்கு ஒரு விரிவான திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை அரச துறைக்கு புதிதாக உள்வாங்கப்படுகின்றவர்களின் பயிற்சி தேவையில் உட்படுத்துதல் மற்றும் அரச துறையின் உரிய உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் திறனை விருத்தி செய்தல் என்பவற்றுக்காக அமல்படுத்த வேண்டும். ஏனைய பாடங்கள் மற்றும் துறைகளில் அறிவு மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களை பயன்படுத்தி ஒரு உயர் தரமான மதிப்பீட்டு நிபுணத்துவ குழாத்துடன் மதிப்பீட்டுக்கான உள்நாட்டு திறனை மேம்படுத்தும் பொருட்டு மதிப்பீட்டு பயிற்சி மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் என்பன மதிப்பீட்டு பாடநெறிக்கான நோக்கம் மற்றும் முதலீடுகளை விரிவுபடுத்தல் ஊக்குவிக்கப்படுகின்றது.

## தந்திரோபாய பகுதி 3: கொள்கை பங்காளர்கள், சிரேஷ்ட அரச துறை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்திப பங்காளர்களின் உணர்திறன்

மதிப்பீட்டை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசியல்வாதிகளின் தலைமைத்துவம் மற்றும் ஆதரவு, அரச துறை உத்தியோகத்தர்கள் (குறிப்பாக தலைமைத்துவத்தில்) மற்றும் அபிவிருத்தி பங்காளர்களின் அர்ப்பணிப்பு ஆகியன இன்னும் முக்கியமான காரணிகளாக காணப்படுகின்றன, NEP இன் நோக்கத்தை பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் 03 நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்:

i. மதிப்பீட்டினை முக்கியத்துவப்படுத்துவதில் அரசதுறை உத்தியோகத்தர்களின் செயல்திறன் வாய்ந்த ஈடுபாடு மற்றும் அர்பணிப்பு

ii. அபிவிருத்தி செயன்முறையில் மதிப்பீட்டினை ஒரு பொதுவான நடைமுறையாக முன்னெடுப்பதற்கு அபிவிருத்தி பங்காளர்களிடமுள்ள உதவி மற்றும் அர்பணிப்பு

iii. தகவலறிந்த தீர்மானமெடுத்தலுக்காக அரசியல்வாதிகள் மதிப்பீட்டு முடிவுகளை ஏற்றுக்கொள்ளுதல், கோருதல் மற்றும் பயன்படுத்துதல்.

மதிப்பீட்டிற்கான விழிப்புணர்வு, கோரிக்கை மற்றும் ஏற்றுக்கொள்ளலை அதிகரிப்பதற்காக மற்றும் அபிவிருத்தி பங்காளர்களின் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக அரசியல்வாதிகள் மற்றும் அரச துறை சிரேஸ்ட உத்தியோகத்தர்களினால் வினைதிறனான நிகழ்ச்சித்திட்டமொன்று அமல்படுத்தப்பட வேண்டும். தொழில் வல்லுனர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் வலையமைப்பினூடாக நடைமுறை சமூகத்தை (CoP) நிறுவுதல் மதிப்பீட்டை மேம்படுத்துவதற்கான ஒரு சிறந்த படிமுறையாகும்.

## தந்திரோபாய பகுதி 4 : மதிப்பீட்டின் தரத்தை உறுதிப்படுத்துதல்

மதிப்பீட்டை முன்னெடுக்கும் போது மதிப்பீட்டின் தரத்தை பேணுவதற்காக தேசிய மதிப்பீட்டு கொள்கை கட்டமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்ட

இலங்கை மதிப்பீட்டு நியமம் மற்றும் தர மதிப்பீட்டு கருவிகளை பின்பற்றுதல் மற்றும் பயன்படுத்துதல் அவசியமாகும் மற்றும் தேவை ஏற்படும் போது தேவையான மேம்படுத்தல்கள் மற்றும் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

## தந்திரோபாய பகுதி 5 : பரப்புதல், அறிவு முகாமைத்துவம் மற்றும் பொறுப்புக் கூறல்

2016 ஆம் ஆண்டு 12ம் இலக்க தகவலறியும் உரிமை சட்டதிற்கமைய மதிப்பீட்டு முடிவுகளை பரப்புதல் பொறுப்பு கூறலுடன் தொடர்புடைய நெறிமுறை தேவையாகும். பொது முதலீடுகளின் பொறுப்புணர்வை மேம்படுத்தவதற்காக மதிப்பீட்டு அறிக்கைகளின் தொகுப்பினை வருடாந்த அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகம் மற்றும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பரப்ப வேண்டிய தகவல்களின் தன்மை மற்றும் தரம், பரப்ப வேண்டிய தடவை மற்றும் விதம் மற்றும் பொது மக்கள் மற்றும் பிரதான பங்குதாரர்களினால் அணுக வேண்டிய தகவல்களின் மட்டம் என்பன தொடர்பாக அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்தினால் (தேசிய மதிப்பீட்டு வழிநடத்தல் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில்) தீர்மானம் எடுக்கப்படும்.
தேசிய மதிப்பீட்டு வழிகாட்டல் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு மற்றும் செல்லுபடியாக்கப்பட்ட மற்றும் அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்தினால் அனுமதியளிக்கப்பட்ட மதிப்பீட்டு தகவல்களின் அணுகலை மேம்படுத்துவதற்கு ஒரு இணைய அடிப்படையிலான மதிப்பீட்டு தகவல் அமைப்பு (EIS) நிறுவப்பட வேண்டும். EIS ஆனது மதிப்பீட்டு தகவல்களின் களஞ்சிய நோக்கம் மற்றும் கற்றல் தளத்திற்கான தொடர்பாடல் என்பவற்றின் நோக்கத்திற்கு உதவுகின்றது.

## தந்திரோபாய பகுதி 6: மதிப்பீட்டினை திட்டமிடல் மற்றும் பாதீட்டுடன் இணைத்தல்

அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் திட்டமிடல் மற்றும் பாதீட்டில் மதிப்பீட்டு முடிவுகளின் பயன்பாட்டினை அதிகரிப்பதனை உறுதி செய்வதற்கு தந்திரோபாய அணுகுமுறை இணங்காணப்பட வேண்டும். கருத்திட்ட முன்மொழிவுகளை MNPEA/PLN/PI/2019 சுற்றிக்கைக்கு ஒத்திசைவாக (குறிப்பாக பகுதி 15.2 இல் உள்ள கருத்திட்ட சமர்பிப்பு மாதிரி படிவம்) கருத்திட்ட முன்மொழிவுகளை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் இவ்விடயம் தொடர்பாக கட்டாய அடிப்படை தேவையாகும்.

# இணைப்புகள்

# இணைப்பு I:

| | அளவுகோல் | அளவுகோலின் விவரணம் | மொத்த தகுதி மதிப்பெண் | உண்மையான மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 01 | கொள்கையின் பொருத்தப்பாடு | அரசாங்கத்தின் தற்போது காணப்படுகின்ற கொள்கையுடன் மற்றும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட துறைகள் ஆகியவற்றுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட தலையீட்டின் நோக்கம் தெளிவாகவும் வலுவாகவும் ஒத்திசைந்திருத்தல் | 15 | |
| 02 | பொருத்தப்பாடு | நிலையான தீர்வை அடைந்து கொள்வதற்காக முன்மொழியப்பட்ட மதிப்பீட்டின் தற்போதைய அல்லது எதிர்கால பிரச்சனைகள் மற்றும் அனைத்து பங்குதாரர்களினதும் கோரிக்கை என்பவற்றினை போதுமானளவு அடையாளப்படுத்தகூடிய தன்மை | 15 | |
| 03 | வினைத்திறன் | வினைதிறனான வளப்பயன்பாடு, திட்டமிட்ட வெளியீட்டினை வழங்குதலை உறுதிப்படுத்தும் அறிகுறி (அல்லது கிடைக்கக்கூடிய சான்று) | 10 | |
| 04 | விளைதிறன் | தலையீட்டின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்படுவதற்கு உத்தரவாதமான அறிகுறிகள் (அல்லது கிடைக்கக்கூடிய சான்று). | 10 | |
| 05 | நிலைத்தன்மை | தொடர்ச்சியாக மற்றும் படிப்படியாக நடத்தையில் (இலக்கில்) ஏற்படக்கூடிய மாற்றங்கள் மற்றும் வழங்கல்களை (வெளியீடுகள்) பேணுவதற்கான சாத்தியக்கூறு. | 10 | |
| 06 | சாத்தியக் கூறு | முதலில் ஒத்துக்கொள்ளப்பட்ட நோக்கம், செலவு மற்றும் கால எல்லை என்பவற்றிலிருந்து பாரியளவு வேறுபடாமல் அமுல்படுத்தக் கூடிய சாத்தியப்பாடு. (மதிப்பீட்டின் குறிக்கோளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட வேண்டும், அதாவது தோல்வி அல்லது வெற்றியிலிருந்து பாடங்களை கற்றுக்கொள்ளல்) | 10 | |
| 07 | பிரதியெடுப்பதற்கும் அளவிடுவதற்கும் உள்ள சாத்தியம் | முன்மொழியப்பட்ட மதிப்பீட்டின் முடிவுகள் மீண்டும் மீண்டும் ஏற்படக்கூடிய தலையீட்டின் தன்மைக்கு நேரடியாக தொடர்புடையதாகும் மற்றும் எதிர்காலத்தில் அதே துறைகளின் அல்லது ஏனைய துறைகளின் ஒத்த தன்மையுடைய தலையீட்டின் திட்டமிடல் அல்லது மேம்படுத்தல் அல்லது மீள் கட்டமைத்தலுக்கு பயன்படுத்தப்படும். | 15 | |
| 08 | மதிப்பிடக்கூடிய தன்மை | நம்பகமானதும் மற்றும் யதார்த்தமானதுமான முறையில் மதிப்பீட்டினை முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாடு (பார்க்க: வழிகாட்டல் இல. 02 - மதிப்பீட்டை) | 10 | |
| 09 | புத்தாக்க தன்மை | ஒட்டுமொத்த தலையீடு அல்லது அவற்றின் ஒரு பகுதி அமல்படுத்தலின் போது புத்தாக்க அணுகுமுறையை கொண்டுள்ளமை | 05 | |
| மொத்தம் | | | 100 | |

* புதிய கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பாய்வு செய்யும்போது மதிப்பீட்டு கண்டுபிடிப்புக்களின் பயன்படுத்தும் பிரதான பயன்பாட்டாளர் தேசிய மதிப்பீட்டு திணைக்களமாகும். (தேசிய மதிப்பீட்டு திணைக்களத்தின் கருத்திட்ட சமர்பிப்பு படிவத்தின் 15ம் பிரிவை பார்க்கவும் - இணைப்பு - XVII). கடந்தகால தலையீட்டின் பிரிவுகள் மற்றும் குறிக்கோள்களுடன் ஒத்த புதிய அபிவிருத்தி கருத்திட்டங்களை மதிப்பிடும் போது கடந்தகால அபிவிருத்தி தலையீடுகளின் மதிப்பீட்டு தகவல்களின் கிடைக்கக்கூடிய தன்மையானது பெரிதும் உதவக்கூடியதாக இருக்கும்.

# இணைப்பு II: மதிப்பீட்டினை மதிப்பிடுவதற்கான கருவி

| மதிப்பீட்டின் பிரதான அம்சங்கள் | 'ஆம் அல்லது இல்லை' என்ற பதிலை பெற்றுத்தரும் சரிபார்த்தல் பட்டியல் | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| மாற்றத்திற்கான கோட்பாடு * | 1. கருத்திட்டம், நிகழ்ச்சித்திட்டம், கொள்கை அல்லது நிறுவனத்திற்கு தெளிவான நிகழ்ச்சி கோட்பாடு உள்ளது, ஏன் இருக்கின்றது/இருந்தது என்பதை அது விளக்குகின்றது. | | |
| | 2. கருத்திட்டம், நிகழ்ச்சித்திட்டம், கொள்கை அல்லது நிறுவனத்திற்கு பதிவு சட்டகத்துடனான கண்காணிக்கக்கூடிய செயலற்றிறன் குறிகாட்டிகள் உள்ளன. | | |
| | 3. கருத்திட்டம், நிகழ்ச்சித்திட்டம், கொள்கை அல்லது நிறுவனம் தெளிவாக தீர்மானிக்கப்பட்ட இலக்கு மற்றும் குறிக்கோள்களை கொண்டுள்ளன. | | |
| | 4. நோக்கமுள்ள மற்றும் நோக்கமற்ற நன்மைகளுடன் இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் அடைந்துகொள்ளக் கூடியதாகவுள்ளன. | | |
| | 5. கருத்திட்டம், நிகழ்ச்சித்திட்டம், கொள்கை அல்லது நிறுவனம் யதார்த்தமான மற்றும் அளவிடக்கூடிய இலக்குகளை கொண்டுள்ளன. | | |
| | % 'ஆம் மற்றும் இல்லை' | | |
| மதிப்பீட்டிற்கு பொருத்தமான முக்கிய தகவல்களின் கிடைக்கும் தன்மை | 1. தலையீட்டிற்கு பொருத்தமான அடிப்படை தகவலகள் கிடைக்கக்கூடியதாக உள்ளன | | |
| | 2. கருத்திட்ட ஆவணம் / மதிப்பீட்டு அறிக்கை / பொருத்தமான தகவல்கள் அடங்கிய ஏதேனும் துணை ஆவணங்கள் கிடைக்கக்கூடியதாக உள்ளன | | |
| | 3. வழமையான கண்காணிப்பு மற்றும் முன்னேற்ற தரவுகள் கிடைக்கக்கூடியதாக உள்ளது | | |
| | 4. கூட்ட அறிக்கை கிடைக்கக்கூடியதாக உள்ளது | | |
| | 5. கள/தள விஜய அறிக்கைகள் கிடைக்கக்கூடியதாக உள்ளது | | |
| | 6. நிதி அறிக்கைகள் (பாதீட்டு மற்றும் திருத்தப்பட்ட) கிடைக்கக்கூடியதாக உள்ளது | | |
| | % 'ஆம் மற்றும் இல்லை' | | |
| சூழலின் கடத்துத்திறன் | 1. மதிப்பீட்டின் நேரம் பொருத்தமானது (முன்மொழியப்பட்ட காலப்பகுதியிலேயெ மதிப்பீட்டினை முன்னெடுக்கும் போதே மதிப்பீட்டினை பெற்றுக்கொள்ள முடியும்) | | |
| | 2. வள ஒதுக்கீடு, கலந்துரையாடல் மற்றும் மதிப்பீட்டினூடாக கற்றுக்கொள்ளல் என்ற அடிப்படையில் நிறுவன (தலைமைத்துவம்) உதவி கிடைக்கக்கூடியதாக உள்ளது | | |
| | 3. அரசியல் சூழ்நிலை மதிப்பீட்டிற்கு தடையாக இருக்கவில்லை. | | |
| | 4. சுற்றுப்புறச் சூழல் நிலைமையானது (காலநிலை) மதிப்பீட்டை முன்னெடுப்பதற்கு பொருத்தமானதாக இருத்தல். | | |
| | 5. கள வேலைகளுக்கு பாதுகாப்பு சூழ்நிலைகள் உதவியாக இருத்தல் | | |
| | 6. முக்கிய பங்குதாரர்கள்/தகவலறிந்தவர்கள்/பயனாளிகள் களத்தில் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றனர் | | |
| | 7. மதிப்பீட்டிற்காக போதுமான பாதீடு மற்றும் ஏனைய வளங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. | | |
| | % 'ஆம் மற்றும் இல்லை' | | |

- மேற் கூறப்பட்ட 03 அம்சங்களில் ஒவ்வொன்றும் 50% மதிப்பெண்களை பெற்றிருந்தால் அல்லது அதிகமான 'ஆம்' என்ற பதில்களை பெற்றிருந்தால் இது மதிப்பீடு செய்யக்கூடிய கருத்திட்டம், நிகழ்ச்சித்திட்டம், கொள்கை அல்லது நிறுவனம் என கருத்தில் கொள்ளப்படும்.

  *கருத்திட்டம், நிகழ்ச்சித்திட்டம் அல்லது கொள்கை என்பவற்றிற்கான மாற்றத்திற்கான கோட்பாடு மற்றும் பதிவு சட்டகம் என்பன மதிப்பீட்டு கட்டத்தில் காணப்படவில்லையெனில் அல்லது திட்டமிடல் கட்டத்தில் தயாரிக்கப்பட்டிருக்காவிட்டால் மதிப்பீட்டு நோக்கத்திற்காக திட்ட ஆவணத்தில் உள்ள விபரங்களின் அடிப்படையில் அவற்றை உருவாக்குவதற்கான தீர்மானத்தை எடுக்க முடியும்.

- மேலேயுள்ள சரிபார்த்தல் பட்டியலில் உள்ள சில அம்சங்கள் முன்கூட்டிய மதிப்பீட்டிற்கு பொருந்தாததாக இருக்கலாம் (உதாரணமாக சில முக்கியமான தகவல்கள் முன்கூட்டிய மதிப்பீட்டில் கிடைப்பதில்லை) அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்த அம்சங்கள் மதிப்பெண்களை வழங்கும் போது கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

# இணைப்பு III: மதிப்பீட்டின் முக்கிய வகைகள்

| வகை | நோக்கம் | கட்டம் | பயன் |
|---|---|---|---|
| முன்கூட்டிய | • எதிர்கால தலையீட்டினை நியாயப்படுத்தல் மற்றும் சிறந்த தேர்வு மற்றும் அணுகுமுறையைக் தெரிதலுக்கு தந்திரோபாய தகவல்களை பெற்றுக்கொள்ளல்<br>• ஒரு முதலீட்டிலிருந்து மிகப்பெரிய நன்மைகளை தருவதற்கான சிறந்த மாற்றீட்டை அடையாளம் காணல் | • புதிய தலையீட்டின் வடிவமைப்பு அல்லது திட்டமிடல் கட்டத்தில்<br>• ஏற்கனவே உள்ள தலையீடு மாற்றப்படுகின்ற போது | • மிகவும் சாத்தியமான, செயல்படுத்தக்கூடிய மற்றும் நிலையான தலையீடுகளை வடிவமைத்தல் மற்றும் திட்டமிடுதல்<br>• கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கொள்கைகளை அவற்றின் அமல்படுத்தலின் போது திருத்துதல் அல்லது மேம்படுத்தல் |
| உருவாக்கல் மதிப்பீடு | • உருவாக்கப்படும் தலையீட்டின் தரத்தை மேம்படுத்தல் | • தலையீட்டின் ஆரம்ப கட்ட வளர்ச்சி<br>• ஏற்கனவே உள்ள தலையீடு மாற்றப்படுகின்ற போது. | • தலையீட்டின் விடயப்பரப்பு மற்றும் செயல்படுத்தும் முறையை மேம்படுத்துதல் மற்றும் மாற்றுதல்<br>• கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கொள்கைகளை அவற்றின் அமல்படுத்தலின் போது திருத்துதல் அல்லது மேம்படுத்தல் |
| இடைக்கால / நடைபெற்றுக் கொண்டிருக்கும் /செயல்படுத்தல் மதிப்பீடு | • கருத்திட்டம்/நிகழ்ச்சித்திட்டம் / கொள்கை என்பன அதன் இலக்கு மற்றும் குறிக்கோள்களை நோக்கிச் செல்கின்றன என்பதனை உறுதிப்படுத்துதல்<br>• ஒரு தலையீட்டின் நிகழ்ச்சித்திட்ட கோட்பாடு/ கோட்பாட்டு மாற்றத்தின் செல்லுபடியாகும் தன்மையை சரிபார்த்தல் | தலையீட்டை செயல்படுத்தும் காலப்பகுதியில் | • செயற்படுத்தும் போதுள்ள பிரச்சனைகளை இணங்கண்டு நிவர்த்திசெய்தல்<br>• வினைதிறன் மற்றும் விளைதிறன் மிக்க பெறுபேற்றை வெளியிடுவதற்காக நிகழ்ச்சித்திட்ட கோட்பாட்டை திருத்துதல் அல்லது மேம்படுத்தல் |
| பிந்திய மதிப்பீடு (சுருக்கம்) | அடிப்படை மற்றும் இறுதி கட்டத்தில் வெளியீட்டுடன் உடனடி விளைவுகளை ஒப்பிடுவதற்கு | செயல்படுத்தல் நிறைவடைந்த பின்னர் உடனடியாக | நிலையான விளைவுகளை உருவாக்குவதன் பொருட்டு எதிர்கால தலையீட்டினை திட்டமிடுதல் மற்றும் அமல்படுத்துவதற்கான பாடங்களை கற்றுக்கொள்ளல் |
| செயன்முறை மதிப்பீடு | • ஒரு தலையீட்டின் நடவடிக்கைகள் திட்டமிட்டபடி எந்த அளவிற்கு செயல்படுத்தப்படுகின்றன என்பதை தீர்மானிக்க<br>• கருத்திட்ட/ நிகழ்ச்சித்திட்ட வெளியீட்டில் செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளின் செயற்திறன் மட்டத்தை புரிந்துகொள்வதற்கு | தலையீட்டை செயல்படுத்தும் காலப்பகுதியில் | வினைதிறன் மற்றும் செயல்திறன் வாய்ந்த பெறுபேறு வெளியிடப்படுவதனை மேம்படுத்துவதற்காக செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளை திருத்துதல், மாற்றுதல் மற்றும் அறிமுகப்படுத்துதல் (மதிப்பீட்டிலிருந்து பெறப்பட்ட ஆரம்ப எச்சரிக்கைகளின் அடிப்படையில்) |
| விளைவு மதிப்பீடு | பயனாளிகள் / இலக்கிடப்பட்ட மக்களின் (திட்டமிட்ட மற்றும் திட்டமிடப்படாத) நடத்தை, அணுகுமுறை மற்றும் நடைமுறைகளில் ஏற்படும் மாற்றங்களை புரிந்துகொள்வதற்கு | தலையீடு நிறைவடைந்த பின்னர் (எதிர்பார்க்கப்பட்ட நடத்தை மாற்றத்தினை அளவிடுவதற்கு பொருத்தமான நேரத்தில்) | அதிக உறுதியான மற்றும் நிலையான விளைவுகளை உருவாக்குவதற்கு எதிர்கால தலையீட்டினை திட்டமிடுதல் மற்றும் அமல்படுத்துவதற்கான பாடங்களை கற்றுக்கொள்ளல் |
| தாக்க மதிப்பீடு | ஒரு தலையீட்டின் இறுதியான இலக்கின் ஒட்டுமொத்த அடைவினை தீர்மானிப்பதற்கு | தலையீடு நிறைவடைந்த பின்னர் (நிறைவடைந்த பின்னர் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட நேர இடைவெளியில், விளைவுகளின் பரவலை உறுதிப்படுத்திய பின்பு) | கொள்கைகள் மற்றும் வள ஒதுக்கீட்டிற்கான தீர்மானமெடுத்தல் (ஒரு தலையீட்டின் நிரூபிக்கப்பட்ட வெற்றி அல்லது தோல்வியின் அடிப்படையில்). |
| நிறுவன மதிப்பீடு | ஒரு நிறுவனம் தான் எதிர்பார்த்த சேவைகள் மற்றும் பொருட்களை வெளியிடுவதற்கு அந்நிறுவனத்தில் தற்போது காணப்படுகின்ற நிறுவன அமைப்பு மற்றும் செயல்படுத்தல் முறைமைகள் எந்தளவிற்கு பங்களிப்பு செய்கின்றன என்பதனை மதிப்பிடுவதற்கு | செயற்படுத்தும் காலப்பகுதியின் போது (முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட நேர இடைவெளியில்) | நிறுவன ஏற்பாடுகள் மற்றும் செயற்படுத்தும் முறைமைகளை மீள் கட்டமைத்தல் அல்லது மேம்படுத்தலுக்கான தீர்மானம் எடுத்தல் |

# இணைப்பு IV: மதிப்பீட்டு அணுகுமுறை

| மதிப்பீட்டாளர் மற்றும் அணுகுமுறை | பகுத்தறிவு | அனுகூலங்கள் | சவால்கள் |
|---|---|---|---|
| **1. சுயாதீனமான (வெளியக) மதிப்பீடு** | | | |
| திட்டமிடலில் அல்லது அமல்படுத்தலில் ஈடுபடாத தனிப்பட்ட ஒரு நபர் அல்லது ஒரு குழு மதிப்பீட்டை முன்னெடுத்தல். மதிப்பீட்டாளர் அரச கேள்விமுறையின் ஊடாக தெரிவு செய்யப்படுவார் வெளிநாட்டு முதலிடப்பட்ட கருத்திட்டங்களாயின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி நடைமுறைக்கமைய. | • மதிப்பீடு செய்யப்பட வேண்டிய கருத்திட்டம், நிகழ்ச்சித்திட்டம் அல்லது நிறுவனத்திற்குள் நிபுணத்துவம் பெற்றவர்கள் கிடைக்காதிருத்தல்.<br>• அதிக குறிக்கோள் மதிப்பீட்டின் தேவைப்பாடு<br>• மதிப்பீட்டின் நோக்கம் பாரியளவிலானதாகவும் மற்றும் விரிவான களப்பணிக்கு தேவையான பல அம்சங்களை உள்ளடக்கியதாகவும் இருத்தல் | • பக்கசார்பற்ற மற்றும் புற நிலை மதிப்பீடு<br>• தேவையான நிபுணத்துவத்தின் உச்ச பயன்பாடு<br>• வெளிப்புற மதிப்பீட்டாளரினால் தகவல்கள் அதிகமாக அணுகப்படல் (பயனாளர்களிடமிருந்து நேர்மையான பின்னூட்டல்களை பெற்றுக்கொள்ளுதல் இலகுவானதாகும்) | • விலையுயர்ந்த வெளிப்புற மதிப்பீட்டாளர்களை வாடகைக்கு எடுத்தல்<br>• ஒத்துழைப்பு மற்றும் தொடர்பாடலில் உள்ள சிரமம் (கருத்திட்ட குழு அல்லது மூன்றாம் தரப்பினரின் உதவியின்றி பயனாளர்களுடன் தொடர்பினை கட்டியெழுப்புவதிலுள்ள சிரமம்)<br>• பயனாளர்களினால் மதிப்பீட்டு கண்டுபிடிப்புக்களின் குறைந்த மட்ட ஏற்றுக்கொள்ளுதலின் அபாயம்<br>• மதிப்பீட்டு செயன்முறையானது விரைவான தீர்மானமெடுத்தலுக்கு உதவுவதில்லை (ஒப்பீட்டளவில் நீண்ட செயன்முறை) |
| **1. சுய (உள்ளக) மதிப்பீடு** | | | |
| தலையீட்டின் திட்டமிடல் அல்லது அமல்படுத்தலுக்கு (அல்லது இரண்டிற்கும்) பொறுப்பான நிறுவனம் மதிப்பீட்டினை மேற்கொள்ளும். நிறுவனத்தில் கிடைக்கக் கூடிய வளங்கள் பயன்படுத்தப்படும். வெற்றிகரமான மதிப்பீட்டின் வெற்றியை உறுதிபடுத்துவதற்கான ஆயத்த ஏற்பாடாக வெளியக நிபுணர்களின் ஒத்துழைப்புடன் திறன் விருத்தி மற்றும் விழிப்புணர்வு உருவாக்கம் என்பன தேவைப்படலாம் | • மதிப்பீட்டின் நோக்கம் பரந்ததாக இல்லை, சில அம்சங்களுடன் வரையறுக்கப்பட்டுள்ளது.<br>• நிறுவன நினைவகத்தினை பயன்படுத்துவதற்கான சாத்தியம் மற்றும் மதிப்பீட்டை நிறைவு செய்வதற்கான திறன்<br>• வெளிப்புற மதிப்பீட்டாளரை வாடகைக்கமர்த்துவதனூடாக மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டிற்கான நிதி வரையறுக்கப்பட்டிருத்தல் | • நிறுவனத்தின் மதிப்பீட்டு திறனை மேம்படுத்தல்<br>• உள்ளக உத்தியோகத்தர்களை (தன்னார்வ) அதிகமாக இணைத்துக்கொள்ளல்<br>• விரைவான தீர்மானமெடுத்தலுக்கு உதவும் விரைவான நிறைவு | • சாத்தியமான பக்கச்சார்பினால் குறைவான குறிக்கோளுடைமை. (சொந்த தவறுகளை கருத்தில் கொள்ளாத போக்கு)<br>• நிபுணத்துவம் மிக்கவர்களின் பற்றாக்குறையான உள்ளீடு (உள்ளக மதிப்பீட்டு திறனை பொருத்தது)<br>• பயனாளர்களிடமிருந்து நேர்மையான பின்னூட்டலை பெற்றுக்கொள்வதிலுள்ள சிரமம் (ஒரு மூன்றாம் தரப்பினருடன் தங்களது கருத்துக்களை சுயாதீனமாக வெளிப்படுத்துவதிலுள்ள பயனாளர்களின் விருப்பம்) |

| மதிப்பீட்டாளர் மற்றும் அணுகுமுறை | பகுத்தறிவு | அனுகூலங்கள் | சவால்கள் |
|---|---|---|---|
| **3. இணைந்த மதிப்பீடு** | | | |
| ஒன்றுக்கு மேற்பட்ட அலகுகள் ஒன்றிணைந்து மதிப்பீட்டை முன்னெடுத்தல் மதிப்பீட்டு செயன்முறையில் வளங்கள் மற்றும் பொறுப்புக்களை இணைத்தல் மற்றும் பகிர்தல் மற்றும் ஒரு விரிவான ஒற்றை மதிப்பீட்டு அறிக்கையை உருவாக்குவதற்கு மதிப்பீட்டின் கண்டுபிடிப்புக்களை ஒன்றிணைத்தல் ஆகியன இந்த அணுகுமுறையின் பொதுவான அம்சங்களாகும். (DPMM மற்றும் ERD ஆகியன வெளிநாட்டு நிதியிடப்பட்ட கருத்திட்டங்களை மதிப்பிடும் போது மதிப்பீட்டு முகாமைத்துவ குழுவின் கட்டாய உறுப்பினராவார்கள்). | • மதிப்பீட்டின் நோக்கம் பரந்துபட்டது மற்றும் பல்வேறு குறுக்கு வெட்டு பிரச்சனைகள் மற்றும் கருப்பொருட்களை உள்ளடக்கியது<br>• உணர்திறனான அல்லது சர்ச்சைக்குறிய துறை அல்லது கொள்கையுடன் தொடர்புடைய பிரச்சனைகளை இணங்காணுதல் மதிப்பீட்டின் நோக்கமாகும்.<br>• இணைந்த கற்றலுக்காக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர் அவர்களது வளங்களை இணைத்துக்கொள்வதற்கும் பொறுப்புக்களை பகிர்ந்து கொள்வதற்கும் விரும்புவர்.<br>• அனைத்து நிதி பங்காளர்களால் வழங்கக்கூடிய மற்றும் விளைவுகளுக்கான பகிரப்பட்ட பொறுப்போடு இணை நிதியுதவி மூலம் செயல்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் | • இணைந்து பணிபுரிவதனூடாக மதிப்பீட்டில் உயர்ந்த குறிக்கோளுடைமை, வெளிப்படைத்தன்மை மற்றும் சட்டப்பூர்வத்தன்மை.<br>• சக கற்றல் மற்றும் பரஸ்பர திறன் மேம்பாடு<br>• செலவு பகிர்வு<br>• ஒருங்கிணைப்பு மற்றும் வலையமைப்பை மேம்படுத்தல்<br>• மதிப்பீடுகளின் எண்ணிக்கை மற்றும் ஒட்டுமொத்த செலவை குறைத்தல்<br>• கண்டுபிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளின் உயர் நம்பகத்தன்மை மற்றும் உரிமை | • ஒருங்கிணைத்தல் மற்றும் தீர்மானமெடுத்தலின் சிக்கலான தன்மை கூடுதலான செலவை ஏற்படுத்துகிறது (கூட்டங்கள், தொடர்பாடல் மற்றும் போக்குவரத்துக்காக)<br>• சிக்கலான செயன்முறை காரணமாக அதிக நேரம் தேவைப்படும். |
| **4. பங்கேற்றல் மதிப்பீடு** | | | |
| ஒரு கருத்திட்டத்தின், நிகழ்ச்சித்திட்டத்தின் அல்லது கொள்கையின் பங்குதாரர்கள் மற்றும் பயனாளர்களால்(மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர்) மதிப்பீடு முன்னெடுக்கப்படுதல். மதிப்பீட்டின் அனைத்து கட்டங்களிலும் அனைத்து பங்கேற்பாளர்களும் செயற்றிறனுடன் ஈடுபடும் அதேவேளை மதிப்பீட்டின் கிரயமானது அமல்படுத்தும் முகவர் அல்லது நிதிவழங்கும் முகவரினால் (வெளிநாட்டு முதலீட்டு கருத்திட்டங்களுக்காக) ஏற்கப்படும். அனைத்து பங்கேற்பாளர்களினதும் கருத்துக்கள், முன்னுரிமைகள் மற்றும் தீர்மானங்களுக்கு மதிப்பளித்து செயன்முறையானது வடிவமைக்கப்பட வேண்டும் அவர்கள் பயனடைந்திருந்தாலும் அல்லது பாதிக்கப்பட்டிருந்தாலும் அது பொருந்தாது. | • பயனாளர் சமூகத்தை வலுப்படுத்துவதற்காக திறன்களை பரிமாற்றிக்கொள்ளும் ஒரு தந்திரோபாயமாக திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் கட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டு அல்லது உறுதியளிக்கப்பட்டதே பங்கேற்றல் மதிப்பீடாகும்.<br>• கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களின் சில பயனாளர் குழுக்களுக்கிற்கிடையில் ஏற்படும் தவறான புரிந்துணர்வு மற்றும் கருத்து வேறுபாடு அமல்படுத்தல் காலப்பகுதியில் அறிக்கையிடப்படும<br>• மதிப்பீட்டு பெறுபேறு ஒரு அவசர தேவை அல்ல. (மதிப்பீட்டிற்கு செலவிட்ட காலத்தினை விடவும் மதிப்பீட்டு முடிவுகளின் பெறுமதியே மிகவும் முக்கியமானதாகும்).<br>• வெளிப்புற குழுவினால் சில முக்கியமான தகவல்களை சேகரித்துக்கொள்ளுதல் கடினமாதாகும். (பயனாளர்கள் மட்டுமே உண்மையான தகவல்களை அவர்களது சொந்த சமூகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்). | • உயர் உரிமைத்துவம் மற்றும் மதிப்பீட்டு முடிவுகளை ஏற்றுக்கொள்கின்றமை.<br>• பயனாளிகள் மற்றும் அமல்படுத்தும் முகவர்களுக்கிடையில் நம்பிக்கையை கட்டியெழுப்புதல்.<br>• அறிக்கையிடலில் படைப்பாற்றல் மற்றும் முடிவுகளின் நம்பகத்தன்மை என்பவற்றை மேம்படுத்தல்.<br>• சமூக மட்டத்தில் மதிப்பீட்டு கலாசாரத்தை ஊக்குவித்தல்.<br>• நாட்டின் மதிப்பீட்டு திறனை மேம்படுத்தல்<br>• ஒத்துழைப்பு மற்றும் வலையமைப்பை விரிவாக்குதல் மற்றும் வலுப்படுத்தல் | • மதிப்பீட்டின் ஏனைய முறைமைகளை விட செயன்முறைக்கு அதிக நேரம் தேவைப்படுகின்றது (ஒருங்கிணைத்-தல், தொடர்பாடல், தீர்மானமெடுத்தல் மற்றும் முன்னெடுத்தலுக்காக).<br>• அனைத்து பங்கேற்பாளர்களினதும் மதிப்பீட்டு திறன் மற்றும் நம்பிக்கையை நிறுவுதல்.<br>• அனைத்து பங்கேற்பாளர்களும் போதுமானளவு ஈடுபடுவதனை உறுதிபடுத்திக்கொள்ளல் (தனிநபர்கள் அல்லது குழுக்களின் ஆரோக்கியமற்ற ஆதிக்கத்தை தவிர்த்தல்)<br>• செயற்பாடு முழுவதும் அனைத்து பங்காளர்களும் "குழு உற்சாகம்" மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் அர்ப்பணிப்பை பேணுதல்.<br>• மதிப்பீட்டின் வெற்றியை தடை செய்யக்கூடிய பங்குபற்றுபவர்களுக்கு இடையிலான முரண்பாடுகளை முகாமை செய்தல். |

# இணைப்பு V: மதிப்பீட்டிற்கான OECD/DAC அளவுகோல்

| அளவுகோல் | வரைவிலக்கணம் | பகுப்பாய்வின் நோக்கம் | முக்கிய கேள்விகள் |
|---|---|---|---|
| பொருத்தப்பாடு | சூழ்நிலைகள் மாறும் போது பயனாளிகள், உலகளாவிய, நாட்டு, நிறுவன தேவைகள், கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு தலையீட்டின் குறிக்கோள்கள் மற்றும் வடிவமைப்பு எந்தளவிற்கு பதிலளிக்கின்றன. | • இலக்கிடப்பட்ட குழுவின் தேவையை பூர்த்தி செய்வதற்கு பொருத்தமான தலையீட்டின் வடிவமைப்பு.<br>• எதிர்காலம் மற்றும் தலையீட்டின் வாழ்நாள் முழுவதும் தலையீட்டின் குறிக்கோள் பொருத்தமானதாக இருத்தல்.<br>• தேசிய மற்றும் துறைசார் கொள்கைகளுடன் ஒத்திருத்தல்.<br>• கோட்பாட்டு மாற்றத்துடன் கருத்திட்ட வடிவமைப்பு பொருந்த கூடியதாயிருத்தல். | • பயனாளர்களின் தேவைகள், எதிர்பார்ப்புக்கள் மற்றும் முன்னுரிமைகளுக்கு தலையீடானது எந்தளவிற்கு சேவை செய்கிறது/ சேவை செய்தது?<br>• தலையீடு இன்னும் எந்தளவிற்கு பொருத்தமானதாக காணப்படுகின்றது? (சமூக, பொருளாதார மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு)<br>• தலையீட்டின் நோக்கங்கள் அதன் வாழ்நாள் முழுவதும் மற்றும் அதற்குப் பிறகு எந்த அளவிற்கு பொருத்தமானவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளன? |
| ஒத்திசைவு | தலையீடானது நாட்டின், துறையின் அல்லது நிறுவனத்தின் வேறு தலையீடுகளுடன் பொருந்தியிருத்தல். | • தலையீட்டின் வடிவமைப்பு மற்றும் அமல்படுத்தலில் செல்வாக்கு செலுத்தும் குறிப்பிட்ட காரணிகளை அமைத்தல்.<br>• மதிப்பீட்டிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட தலையீட்டிற்கும் இதேபோன்ற நோக்கங்களுடன் பிற இணையான தலையீடுகளுக்கும் இடையிலான இணைப்புக்கள். | • இந்த தலையீடு எந்தளவிற்கு ஒத்த குறிக்கோள்களை கொண்ட பிற தலையீடுகளுடன் ஒத்துப்போகிறது?<br>• தலையீடானது உள்நாட்டு (தேசிய) சூழ்நிலைகளுடன் எந்நதளவிற்கு ஒத்து போகின்றது?<br>• தலையீடானது எந்தளவிற்கு பிராந்திய மற்றும் உலக சூழலுடன் ஒத்துபோகின்றது? |
| விளைதிறன் | ஒரு தலையீட்டின் குறிக்கோள் மற்றும் அதன் பெறுபேறு எந்தளவிற்கு அடையப்பட்டது அல்லது எந்தளவிற்கு அடைய எதிர்பார்க்கப்பட்டது | • தலையீட்டின் குறிக்கோள்களை அடைந்துகொள்ளுதல் (அல்லது அடைந்துகொளவதற்கான வாய்ப்பு)<br>• முக்கியமான வெளியீடுகள் (எதிர்மறை மற்றும் நேர்மறை, நோக்கம் மற்றும் நோக்கமற்ற)<br>• முக்கியமான வெளியீடுகள் பல்வேறுபட்ட பங்குதாரர் குழுக்களின் நடத்தை மாற்றத்தில் ஏற்படுத்தும் செல்வாக்கு<br>• அடைவுகளுக்கு உதவும் அல்லது தடை செய்யும் காரணிகள். | • நீண்ட மற்றும் குறுங்காலத்தில் நிகழ்ச்சித்திட்டமானது எந்தளவிற்கு அதன் இலக்கிடப்பட்ட வெளியீட்டினை அடைகின்றது.'. அடைந்துள்ளது?<br>• தலையீட்டின் குறிக்கோள்களினை அடைந்துகொள்வதற்கு வெளியீடுகள் மற்றும் முடிவுகள் எந்தளவிற்கு பங்களிப்பு செய்கின்றன?<br>• தலையீட்டின் (தொகை மற்றும் தரம்) விளைவுகள் எவை? |

| அளவுகோல் | வரைவிலக்கணம் | பகுப்பாய்வின் நோக்கம் | முக்கிய கேள்விகள் |
| --- | --- | --- | --- |
| வினைத்திறன் | தலையீடு எந்த அளவிற்கு பெறுபேறுகளை வரவு செலவுத்திட்டத்திற்குட்பட்டு மற்றும் சரியான நேரத்தில் வழங்குகின்றது அல்லது வழங்க வாய்ப்புள்ளது. | • ஒரு அலகு வெளியீட்டுக்கான கிரயம்<br>• ஒப்புக்கொண்ட காலக்கெடுவுடன் வெளியிடப்பட்ட் நேரத்துடன் உள்ள இணக்கம்.<br>• வெவ்வேறு வகையான வெளியீடு, முறைமை மற்றும் நிறுவன ஒழுங்கமைப்புக்கள் என்பவற்றை ஒப்பிடுதல். | • வெளியீடுகள் மற்றும் விளைவுகள் பணப்பெறுமதியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா?<br>• தலையீட்டோடு தொடர்புடைய செலவுகள் எந்தளவிற்கு அது உருவாக்கிய நன்மைகளுக்கு விகிதாசாரமாகும்?<br>• செயற்றிறனில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் எவை? மற்றும் இக்காரணிகள் எவ்வாறு தலையீட்டுடன் இணைகின்றன?<br>• வெவ்வேறு புவியியல் இடங்கள், வெவ்வேறு இலக்கு குழுக்கள், அல்லது வெவ்வேறு நேர இடைவெளிகளின் போது குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் செலவுகளில் (அல்லது பயன்களில்) காணப்படுமாயின், அவ் வேறுபாட்டுக்கான காரணங்கள் யாது? இந்த வேறுபாடுகள் எவ்வாறு தலையீட்டுடன் இணைகின்றன?<br>• தலையீட்டின் அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்பு செயல்முறை எவ்வளவு சரியான மற்றும் திறமையானது? |
| தாக்கம் | தலையீடு எந்த அளவிற்கு குறிப்பிடத்தக்க நேர்மறை அல்லது எதிர்மறை, நோக்கம் அல்லது நோக்கமற்ற, உயர் மட்ட விளைவுகளை உருவாக்கியது அல்லது உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்பது | • தலையீட்டின் நேர்மறை மற்றும் எதிர்மறை, முதன்மை மற்றும் இரண்டாம் நிலை நீண்டகால விளைவு.<br>• நோக்கம் மற்றும் திட்டமிடப்படாத பரவலான விளைவுகள்.<br>• பரந்த விளைவுகளின் குறுக்குவெட்டுத் தன்மை (சமூக, சுற்றுச் சூழல், பொருளாதார, அரசியல், கலாசார, வேறு) | • பயனாளிகளின் வாழ்க்கையில் தலையீட்டின் விளைவுகள் என்ன?<br>• தலையீட்டின் எந்தவொரு குறிப்பிட்ட பகுதியும் அதன் மற்றொரு பகுதியை விட அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதா?<br>• பயனாளிகள் அல்லது பயனாளிகள் அல்லாதவர்களுக்கு ஏதேனும் திட்டமிடப்படாத (நேர்மறை மற்றும் எதிர்மறை) விளைவுகள் உள்ளனவா? |
| நிலைத்தன்மை | தலையீட்டின் தேறிய நன்மைகள் எந்த அளவிற்கு தொடர்கின்றன அல்லது தொடர வாய்ப்புள்ளது. | • தலையீட்டினூடாக பெறுபேற்றில் ஏற்படும் தொடர்ச்சியான மாற்றம்.<br>• பயனாளர்களினால் முறைமை, செயன்முறை, நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றமை.<br>• தலையீட்டின் கூறுகளை தேசிய அமைப்புகள் மற்றும் செயல்முறைகளில் ஒருங்கிணைத்தல். | • தலையீட்டின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட முறைமைகள், நடவடிக்கைகள், செயன்முறைகள், நடைமுறைகள் எந்த அளவிற்கு அதன் நிறைவு மட்டத்தில் அதே நிலையில் பேணப்படுகின்றன அல்லது மேம்படுத்தப்படுகின்றன?<br>• தலையீட்டின் அமுல்படுத்தல் ஏற்பாடுகள் எந்த அளவிற்கு தலையீட்டு கூறுகளின் நீடித்த தன்மையை கருதுகின்றது<br>• சில கூறுகளின் (அல்லது முழு தலையீட்டிலும்) நிலைத்தன்மையின்மைக்கு பின்னால் உள்ள காரணிகள் யாவை? |

# இணைப்பு VI: பங்குதாரர் பகுப்பாய்விற்கான கருவி

| பங்குதாரரின் பெயர் (தனிப்பட்ட நபர் அல்லது நிறுவனம்) | வகை (உ+ம் : பயனாளிகள், நிதியு-தவியளித்தோர்......) | பங்குதாரர் ஈடுபாட்டிலிருந்து மதிப்பீட்டிற்காக எதிர்பார்க்கப்படும் பயன்கள் | மதிப்பீட்டில் பங்கு (தகவல், குறிப்புக் குழு, முகாமைத்துவ குழு, தரவு சேகரிப்பு போன்றவை) | மதிப்பீட்டில் ஈடுபடும் கட்டங்கள் (திட்டமிடல், தயாரித்தல், தரவு சேகரிப்பு, அறிக்கையிடல் போன்றவை) |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

# இணைப்பு VII: முகாமைத்துவ குழுவின் குறிப்பு விதிமுறைகளுக்கான வார்ப்புரு

1. **மதிப்பீட்டின் தலைப்பு:**
   ....................................................................................................................................................................
   ....................................................................................................................................................................

